உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# வேதாகம நிரூபணம்

## இரண்டாம் பாகம்.

இது

யாழ்ப்பாணம் வேதாகம சைவசித்தாந்த சபைத்தலைவராகிய

அச்சுவேலி

**சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்**

அவர்களால் எழுதி,

சைவாபிமானிகளுடைய பொருளாதரவுகொண்டு

கரணவாய் சைவ ஆராய்ச்சிச் சங்கத்தாராற்

பதிப்பிக்கப்பட்டது.

கலாநிதியந்திரசாலை

பருத்தித்துறை.

ஆகஸ்டு 1951.] [விலை ரூ. 1-00.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# வேதாகம நிரூபணம்

## இரண்டாம் பாகம்.

இது

யாழ்ப்பாணம் வேதாகம சைவசித்தாந்த சபைத்தலைவராகிய

அச்சுவேலி

**சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்**

அவர்களால் எழுதி,

சைவாபிமானிகளுடைய பொருளாதரவுகொண்டு

**கரணவாய் சைவ ஆராய்ச்சிச் சங்கத்தாரால்**

பதிப்பிக்கப்பட்டது.

கலாநிதியந்திரசாலை

பருத்தித்துறை.

1951.

# முகவுரை.

யாழ்ப்பாணத்து வேதாகம சைவசித்தாந்த சங்கத்தாரும், காரணவாய்ச் சைவ ஆராய்ச்சிச்சபையாரும், மற்றும் சிவநெறிச் செல்வர்களும் விரும்பியவாறு, சைவப்புலவனுர் திரு. க. வேந்தனுர், பண்டித ஸ்ரீ. கா. பொ. இரத்தினம் B. O. L. முதலியோர் எழுதிய சைவவிரோதமான கொள்கைகளை மறுத்து எனது தந்தையாரால் "வேதமொ டாகம மெய்யா மிறைவனூல்" என்னும் அருண்மொழியைச் சிரமேற்கொண்டு எழுதப்பெற்ற வேதாகமநிரூபண முதற்பாகம் சில மாதங்கட்குமுன் காரணவாய்ச் சைவ ஆராய்ச்சிச்சபையாரால் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்துள்ளது.

பூருவபக்கத்தாருடைய கொள்கைகளிலே முதற்பாகத்தில் நிராகரிக்கப்படாத பகுதிகளை ஆராய்ந்து, உண்மை நிலைநிறுத்த வேண்டுமென்று சைவாபிமானச் செல்வர்கள் கேட்டுக்கொண்டபடி இந்த இரண்டாம்பாகமும் வெளிவருகின்றது. இது சுதந்திரப் பிரமாண நூல்கள் என்பதுமுதல் புராணப் பெருமை என்பதிறுதியான தலையங்கங்கள் கொண்ட பல்கூறுகளாக எழுதப்பட்டுள்ளது. அன்பர்களின் திரவியோபகாரம்பெற்று இதனை முதற்பாகம் போன்று வெளியிட்டவர்கள் காரணவாய்ச் சைவ ஆராய்ச்சிச் சங்கத்தினரேயாவர்.

இந்த இரண்டாம் பாகத்திற் பெரும்பான்மை தாவாரம் இல்லை என்ற சொற்பொழிவுக் கட்டுரையிலுள்ள பொருந்தாக் கருத்துக்கள் ஆராய்ந்து உண்மை நிலைநாட்டப்பெற்றிருக்கின்றன. இதனுல் இத்தமிழறிஞர்கள், சிவநெறிச் செல்வர்களாகிய நம்முன்னோர் காட்டிய வழியிலிருந்து எவ்வளவு தூரம் விலகிச் சென்றுள்ளார்கள் என்பது தெற்றெனப்புலப்படும். இன்னும் இந்த இரண்டாம் பாகத்தில் நிராகரிக்கப்படாது எஞ்சிநிற்கும் மயக்குரைகள் எல்லாம் மூன்றும்பாகத்தில் ஆராயப்படவேண்டுமென்றும் அறிஞர்கள் விரும்புகின்ருர்கள்.

பரோபகாரமும், சைவசமயவளர்ச்சியும் கருதி எமது தந்தையார் தமது சொந்தவிஷயங்களையும் பொருட்படுத்தாது இவ்வெளியீட்டை நிறைவேற்றத்தொடங்கியதனுல், நானும் என்னுல் இயன்றதொண்டுசெய்து இதனைவெளியிட உதவிபுரிந்தேன்.

சைவத்திற் பதிந்த மெய்யன்புடையார் அனைவரும் இந்த நூலின் இரண்டு பகுதிகளையும் சாவதான சித்தத்துடன் படித்து மெய்யுணர்ந்து சிவபெருமான் திருவருட்கிலக்காகுமாறு வேண்டுகின்றேம்.

சைவநலம் கருதி அச்சிட்ட சபையாருக்கும் அதற்குப்பொருட்டுணை புரிந்தாருக்கும் பலவகை நன்மைகளெல்லாவற்றையும் பாலித்தருள்புரியுமாறு பரமசிவன் பாதாரவிந்தங்களைப் பரவுகின்றேம்.

அச்சுவேலி.
சாஸூ ஆடி மீ உ௨.

கு. வைத்தீஸ்வரக்குருக்கள்.

சிவமயம்.

# மதிப்புரைகள்.

வேதாரணிய ஆதீனம் (காரணவாய்)

## பண்டிதர் ஸ்ரீமத். தி. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் எழுதியது.

இவ்வுலகத்திலே பல சமயங்கள் உள்ளன. அவைகளுள் தலை சிறந்தது சைவ சமயமாகும். சைவ சமயத்திற்குத் தலைவர் சிவபெருமான். சிவபெருமான் ஆன்மாக்கள் மீதுள்ள கருணையினால், அவ்வான்மாக்கள் தம்மையறிந்து வழிபட்டுய்வான் வேண்டி வேதாகமங்களைத் தோற்றுவித்தருளினார். இதைத் திருமந்திரத்திலுள்ள "வேதமொடாகம மெய்யா மிறைவனூல், ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக, நாதனுரையிவை" என்னுஞ் செய்யுளானறியக்கிடக்கின்றது. சித்தாந்த சாஸ்திரங்களும் தேவாரதிருவாசகங்களும் பிறவும் இறைவன் மெய்யடியார்களாலாக்கப்பட்டன. வேதாகமங்களும் அவைகளில் விதிக்கப்பட்டவைகளும் உலகந் தோன்றிய காலந்தொட்டுள்ளன. நேற்று இன்று உள்ளவைகளல்ல. இடையிடையே சைவ சமயத்திற்கும் வேதாகமங்களுக்குந் தொல்லைகளேற்பட்டனவென்பது "முந்தொரு காலத்தின் மூவுலகந்தன்னில் வந்திடுமுயிர்செய்த வல்வினையதனாலே, யந்தமின் மறையெல்லா மடிதலை தடுமாறிச், சிந்திட முனிவோருந் தேவரு மருளுற்றார்" என்னுங் கந்த புராணச் செய்யுளானறியக்கிடக்கின்றது. இன்னும் சில சில காலங்களில் சமண முதலிய சமயங்களால் வந்த துன்பங்களைச் சம்பந்த சுவாமி முதலிய வடியார் வாயிலாக இறைவன் தீர்த்தருளினார். அவைகள் போன்ற ஒருகாலம் இப்பொழுதும் வந்திருக்கிறது. முற்காலங்களில் வந்த துன்பங்கள் பிறசமயங்களால் வந்தவைகளாம். இப்பொழுது பிற மதத்தார்களின் சூழ்ச்சியாலே சைவ சமயத்தோரால் வந்திருக்கிறது. இன்னும் வரவுமிருக்கிறது. என்றைக்குப் பிறமதத்தவனரசனானானோ அன்றே சைவ சமயத்திற்கு ஆபத்து வந்தது. வந்தாலும், ஆங்கிலேயரால் இதுவரையும் பெருந்துன்பம் வரவில்லை. என்றைக்குச் சுயராச்சியம் வந்ததோ அன்றே சைவசமயத்திற்கு ஏழரைதொடங்கிவிட்டது.

இப்பொழுது ஆங்கிலம் படித்தவர்களும் அற்பமாய்த் தமிழ் படித்தவர்களும் அதிகாரிகளும் பட்டதாரிகளுமாய் விட்டனர்.

அவர்களே இப்போ சமயத்தை ராச்சிய சம்பந்தமுறச்செய்து ராச்சிய மூலமாக வேதாகமங்களுக்கு முற்றும்முரணுன கொள்கைகளை நிலைநாட்டி மக்களை யிடர்ப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். வேதாகமங்கள் அவர்களுக்குக் கசப்பானவை. வேதாகம விஷயங்களைப்பழிப்பதும் அவைகளைப் பொருத்தமற்றமுறையில் வைத்துப் பொருள் சொல்லிப் பிழையானவை யென்று சாதிப்பதுஞ் செய்கிருர்கள். இவர்களுக்குச் சாத்திரங்களைத் தூஷிக்கும் தொழில் இப்போ பெருந் தொழிலாகியது. ஆனுல் தாங்கள் நரகம் புகும் பொழுது அறிவிலிகளாகிய பாமரசனங்களையுமுடன் கொண்டு செல்ல வழி தேடுகிருர்கள்.

இப்பொழுது சனப்பிரதிநிதிகள் சமயப்பிரதிநிதிகளாகியும் விட்டார்கள். இந்தியர் சுயராச்சிய மோகத்தால், தங்கள் சாதி சமயங்களையும் சமயானுட்டானங்களையும் புறத்தே விசிவிட்டார்கள். அந்நாட்டுத் தொற்றுநோய் இங்கும் பரவிவிட்டது. தற்போது பண்டிதர், வித்துவான், புலவர் என்று சொல்லப்படுபவர்கள் வேதாகமங்கள் தமிழ்ப்பாஷையிலுள்ளவைகள் என்றும், அவைகள் இப்பொழுது இல்லாது அழிந்தொழிந்தனவென்றும், தற்போதுள்ள வேதாகமங்கள் வயிற்றுச் சீவியத்தின் பொருட்டுப் பிராமணர்களாகிய ஆரியரால் புதிதாகக்கட்டி வைக்கப்பட்டன வென்றும் சொல்கிருர்கள். இவ்வேதாகமங்கள் இறைவன் வாக்கல்ல என்று ஆடம்பரமாகச் சொல்லி அறிவிலிகளாகிய சனங்களைத் தம்பக்கத்திழுத்துத் தம்மதத்தை நிலைநாட்டத் துணிந்துகொண்டார்கள். எவ்வகையான நியாயங்களைச் சொல்லியும் அவர்களிடத்திற் பலிக்காது. சுயராச்சியம் வந்தாற்போதும் சாதி சமயம் ஒன்றும் தேவையில்லை என்கிருர்கள். ஆனுல் மண்ணுலகத்தில் சுயராச்சியமாக வாழவிரும்புவோர் மறுஉலகத்திலும் சுயராச்சியமாகவாழ்வார்களோ தெரியவில்லை.

"மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காய, மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றே" சுயராச்சியமாக வாழ்வதற்கல்ல. சைவ சமயத்துள்ளவர்கள் சாஸ்திரங்களை ஐயவிபரீதமின்றிக்கற்று "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக" என்றபடி. ஒழுகுவதே கடனுகும். கற்ற பண்டிதர் வித்துவான்களின் கடனும் அதுவே. படிப்பது புராணம், இடிப்பது சிவன் கோயில் என்றபடி நடக்க விரும்புகிருர்கள். சுயராச்சியம் வந்ததும் புதுமுறையாக வாழவிரும்பிச் சமய சாஸ்திரங்களையும் புதுமுறையாக்க விரும்புகிருர்கள். இது இவர்களெண்ணப்படி நடப்பதொன்றன்று. சமய விஷயங்களை ராச்சிய சம்

பந்தமுறச் செய்யவேண்டும் என்று நினைப்பது பெரிய மூடத் தனமாகும். சமய சாஸ்திர ஒழுக்கங்கள் பிழைபட்ட காலங்களில் மெய்யடியார்கள் தோற்றி நல்லமுறையில் நிலைபெறச் செய்தார்களேயொழிய அவைகளை யழித்தார்களில்லை. இப்பொழுதும் படித்த பண்டிதர்கள் வித்துவான்கள் சமயசாஸ்திரங்களையும் ஒழுக்கங்களையும் செப்பஞ் செய்து வைத்தலைவிட்டுப் பழித்தொழித்து விடுவது நல்லதல்ல. இந்த விபரீதக்கொள்கைகளைக் கண்ட சைவசமயத்திலுள்ள அறிவாளிகள் பல சங்கங்களிடமிடந்தோறுங்கூடி வேதாகம சாஸ்திரங்களையும் சமயத்தையும் நிலைபெறச் செய்யத் தொடங்கி விட்டார்கள். சைவசமயப் பாமரசனங்கள், புலவர்கள் பண்டிதர்கள் சனப்பிரதிநிதிகள் வசப்பட்டுத் துன்புறுவண்ணம் அவைகளை அறிந்து உய்யும் பொருட்டுப் பிறர் மதங்களைக் கண்டித்தும் சமய சாஸ்திரக் கொள்கைகளை விளக்கியும் நல்லமுறையில் அச்சுவேலி சிவஸ்ரீ. குமார சுவாமிக்குருக்கள் அவர்களைக் கொண்டு வேதாகம சைவ சங்கத்தார்களும் கரணவாய் வேதாகம ஆராய்ச்சிச் சங்கத்தவர்களும் சேர்ந்து வேதாகமநிரூபணம் என்னும் நூலை எழுதுவித்து முதற்பாகத்தைச் சில நாட்களுக்கு முன் பல சைவப்பெரியார்களின் பொருள் உதவிகொண்டு வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் விரும்பிய விஷயங்கள் முழுவதும் முதற்பகுதியில் அடங்காத படியால் இரண்டாம் பிரதியாக இப்பிரதியை வெளியிட்டிருக்கிறார்கள். தமது விருத்தாப்பிய தசையில் சிரமத்தை நோக்காது இப்புத்தகங்களை யெழுதி வெளியிட்ட குருக்களவர்களுக்கேயன்றி, சங்கத்தில் இருக்கும் பெரியார்களுக்கும் பணவுதவி செய்தவர்களுக்கும் கடமைப்பட்டுள்ளதிச் சைவவுலகம். மேற்படி சங்கங்கள் இன்னும் குருக்களவர்களைக் கொண்டு இவைபோன்ற நூல்களை எழுதுவித்துச் சைவ உலகத்திற்கு வெளியிடவேண்டியதச்சங்கங்களின் மிகப்பெரியதொரு கடனாகும்.

வேதாகமங்கள் வாழ்க.
சைவ சமயம் வாழ்க.

# இந்துசாதனம்.

## 16-1-51.

இது யாழ்ப்பாணம் வேதாகம சைவசித்தாந்தசபைத் தலை வரும், சைவசமயசம்பந்தமான சிலநூல்களை இயற்றியவருமாகிய (யாழ்ப்பாணம்)அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் எழுதி, பல சைவாபிமானிகள் உதவிய பொருள்கொண்டு வடம ராட்சியைச் சேர்ந்த கரணவாய் சைவ ஆராய்ச்சிச் சங்கத்தின ரால் அச்சிடுவித்து வெளியிடப்பெற்றது. இந்நூல் இப்போது வெளிவந்தமைக்குக் காரணம் "சைவசமயத்துக்கு மாறான பல கிளர்ச்சிகளும் கொள்கைகளும் பரம்பிவருதலாலும்........ முதலி யோர் பல பிரசுரங்கள் வெளியிட்டிருத்தலாலும், அவற்றை நியாயவாயிலானே மறுத்து, உண்மையை வெளிப்படுத்துமாறு சைவாபியானிகள் வேண்டிக்கொண்டமையின் வேதாகம நிரூப ணம் என்னும் இந்நூல்......எழுதப்பெற்றது" என முகவுரையிற் காட்டப்பட்டுள்ளது. இது நுண்ணிய ஆராய்ச்சியோடும் தக்க மேற்கோள்களுடனும் எழுதப்பெற்றுள்ளது. இப்படிப்பட்ட நூல்களைக் காய்தலுவத்தலகற்றிப் படிப்பதே கற்றறிந்த மாந்தர் கடனாகும்.

---

# ஞானசம்பந்தம்

தருமபுரம்.

## 10-4-51.

ஆசிரியர்: யாழ்ப்பாணம் ச. குமாரசுவாமிக் குருக்கள். இது ஒரு சிறந்தநூல். வேதாகமங்கள் வடமொழியிலேயே உள் ளன; வடமொழியும் தமிழ்மொழியும் இணைபிரியாதன; உடலும் உயிரும் போன்றன. ஒன்றற்கொன்று துணையாக நின்று கருத்தை வாரிவழங்குவன. வகுப்புத்துவேஷம் காரணமாக மொழித்துவேஷத்தில் புகுதல் கூடாது; புகுந்தால் நாமே நம் திருமுறையாசிரியர்களின் வாக்கினைப்புறக்கணித்தவராக எண் ணப்படுவோம்; திருமந்திரத்தில் பெரும்பான்மை வடமொழிப் பயிற்சியுடையார்க்கே விளங்குந்திறத்தன என்பன முதலாகிய பலகருத்துக்களையெல்லாம் சந்தேகமறத் தோத்திர சாத்திர மேற் கோள்களுடன் இதன் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். இவ் விளக்கநூலும் மொழித்துவேஷம் காரணமாக எழுந்த சில அறி ஞர்களின் கூற்றினை மறுத்தற்கு எழுதப்பட்டதாகலின் நிருபண மாயிற்று. 67 தலைப்புகளில் 74 பக்கத்தில் எழுதப்பட்ட இந் நூல் முதற்பாகமாகும். ஏனையவும் இனிவெளிவரச்செய்வது சமயப்பணியில் சிறந்த பணியாகும்.

---

# பொருளுபகரித்த சைவாபிமானிகள்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| பிரஹ்மஸ்ரீ. தி. கார்த்திகேயக்குருக்கள் சிவன்கோயில் கீரிமலை | 5 | 00 |
| ,, ச. கணபதீசுவரக்குருக்கள் சிவன்கோயில் காரைநகர் ... | 10 | 00 |
| ,, அ. ஆனந்தநடேசக்குருக்கள் சிவன்கோயில் திருநெல் [வேலி ... | 20 | 00 |
| ,, கு. பாலசுந்தரக்குருக்கள் B. A, மாவிட்டபுரஆதீனம் ... | 20 | 00 |
| ,, ச. பாலசுந்தரக்குருக்கள் சிஷ்யபரிபாலனம் ஊரெழு ... | 10 | 00 |
| ,, இ. சோமசுந்தரக்குருக்கள் மணற்காடு காரைநகர் ... | 10 | 00 |
| ,, கு. நகுலேசுரக்குருக்கள் சிவன்கோயில் ஆதீனகர்த்தர் [கீரிமலை ... | 10 | 00 |
| ,, பண்டிதர் பஞ்சாக்ஷரசர்மா ஆசிரியர் சோமாஸ்கந்தக் [கல்லூரி புத்தூர் ... | 3 | 00 |
| ,, நா. கந்தசுவாமிஐயர் அம்மன்கோயில் இடைக்காடு ... | 2 | 00 |
| ,, சு. நாகேந்திரஐயர் கரணவாய் கரவெட்டி ... | 2 | 00 |
| ,, கு. சந்தனக்குருக்கள் தச்சன்தோப்புப்பிள்ளையார்கோ [யில் கரவெட்டி ... | 2 | 00 |
| சைவ அபிமானிகள் கரணவாய் கரவெட்டி ... | 11 | 00 |
| ஸ்ரீமத். மா. வேதாரணியக்குருக்கள் கரணவாய் ... | 5 | 00 |
| திரு. R. சிந்தாமணி J. P. Retired C. C. S. மல்லாகம் ... | 10 | 00 |
| ,, N. வேதாரணியசேயோன் வடமராட்சிக் காரியாதிகாரி ... | 10 | 00 |
| ,, க. ஞானசபை போஸ்ற்மாஸ்ரர் கதிரிப்பாய் ... | 5 | 00 |
| ,, S. T. சபாரத்தினம் டிஸ்திறிக்கோட் களுத்துறை ... | 10 | 00 |
| ,, வ. பசுபதிப்பிள்ளை பாடசாலைமனேஜர் புங்குடுதீவு ... | 12 | 00 |
| ,, அ. கோணேசன் லிகிதர் கச்சேரி யாழ்ப்பாணம் ... | 3 | 00 |
| ,, சு. கந்தவனம் V. C. தலைவர் கரவெட்டி ... | 5 | 00 |
| ,, க. சின்னத்தம்பி முதலியார் கரவெட்டி ... | 3 | 00 |
| ,, சி. கந்தப்பு மனேஜர் தச்சன்தோப்புப் பிள்ளையார்கோயில் [கரவெட்டி ... | 3 | 00 |
| ,, K. V. கந்தையா ஆசிரியர் கரவெட்டி ... | 2 | 00 |
| ,, S. A. வேலாயுதம் கிளாக் ,, ... | 2 | 00 |
| ,, ஆ. முருகேசு உபாத்தியாயர் அச்சுவேலி ... | 10 | 00 |
| ,, க. தம்பிமுத்து சங்கீதஆசிரியர் ,, ... | 2 | 00 |
| ,, க. திருநாவுக்கரசு கச்சேரி யாழ்ப்பாணம் ... | 10 | 00 |
| ,, ப. சிவசரணம் ஜ்யோதிஷம் அச்சுவேலி ... | 5 | 00 |
| ,, வ. சரவணமுத்து ஜ்யோதிஷம் ,, ... | 5 | 00 |
| ,, வி. க. றங்கநாதன் சித்தங்கேணி ... | 5 | 00 |
| ,, க. வெற்றிவேலு D. R. O. கந்தோர் கோப்பாய் ... | 10 | 00 |
| ,, மு. இராசா ஆசிரியர் அச்சுவேலி ... | 5 | 00 |
| ,, க. சி. சதாசிவம் ஆசிரியர் அல்வாய் சை. பி. வி. சாலை ... | 2 | 00 |
| ,, வ. ஆறுமுகம் ஆசிரியர் ,, ,, ,, ... | 3 | 00 |
| ,, S. S. செல்லையா ஆசிரியர் ஆங்கிலக்கல்லூரி கந்தரோடை ... | 5 | 00 |

| | ரூ. | ச. |
|---|---|---|
| திரு. S. P. M. வயாவிளான் ... | 3 | 00 |
| ,, செ. பூபாலசிங்கம் ஆசிரியர் சை. வி. சாலை புங்குடுதீவு ... | 5 | 00 |
| ,, வி. சண்முகம் ஆசிரியர் சோ. வி. சாலை புத்தூர் ... | 5 | 00 |
| ,, த. இரத்தினம் அச்சுவேலி ... | 5 | 00 |
| ,, மா. கனகசபாபதி பாடசாலைமனேஜர் சித்தங்கேணி ... | 10 | 00 |
| ,, நா. ஆறுமுகம் பென்சனியர் அராலி ... | 5 | 00 |
| ,, வே. இராமசுவாமி மனேஜர் விளைபொருட்சங்கம் அச்சுவேலி | 5 | 00 |
| ,, பண்டிதர் சு. இராமசுவாமி தலைமைஆசிரியர் வியாவில் [சை. வி. சாலை காரைநகர் ... | 5 | 00 |
| ,, ஆ. கந்தையா தலைமைஆசிரியர் சண்முகவித்தியாசாலை [மருதங்கேணி ... | 5 | 00 |
| ,, மு. ச. கார்த்திகேசு Town Overseer வல்வெட்டித்துறை | 5 | 00 |
| ,, வ. இராமசுவாமி மணியம் வல்வெட்டித்துறை ... | 5 | 00 |
| ,, அ. வ. சுப்பிரமணியம் மனேஜர் அம்மன்கோயில் அராலி ... | 15 | 00 |
| ,, சி. சிவக்கொழுந்து G. F. O. கொழும்பு ... | 25 | 00 |
| ,, வி. சேனாதிராஜசேகரம் நொத்தாரிசு புலோலிகிழக்கு ... | 5 | 00 |
| ,, க. சின்னையா சின்னத்தாய் ... | 5 | 00 |
| ,, செ. அம்பலவாணபிள்ளை உடையார் அராலிதெற்கு ... | 5 | 00 |
| ,, பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை தலைமைஆசிரியர் சேர் கனக [சபை வித்தியாசாலை தெல்லிப்பளை ... | 5 | 00 |
| ,, சுந்தரமூர்த்தி ஆசிரியர் தெல்லிப்பளை ... | 2 | 00 |
| ,, த. உமாபதி அரசினர்பாடசாலை கம்பளை ... | 5 | 00 |
| ,, இ. காசிலிங்கம் போஸ்ற்மாஸ்ரர் அச்சுவேலி ... | 10 | 00 |
| அடைக்கலம்தோட்டம் கந்தசுவாமிகோயில் வட்டுக்கோட்டை... | 10 | 00 |
| திரு. வி. தம்பு லக்ஷ்மிதோட்டம் பன்னாலை ... | 5 | 00 |
| ,, வே. சரவணமுத்து விடத்தற்பளை ... | 2 | 00 |
| ,, சோம. சரவணபவன் தெஹிவளை ... | 5 | 00 |
| ,, வே. கந்தையர் பென்சனியர் அராலிதெற்கு ... | 5 | 00 |
| ,, மு. ஆழ்வாப்பிள்ளை பிரதமலிகிதர் கச்சேரி கரவெட்டி ... | 10 | 00 |
| ,, வே. கந்தப்பு ஆசிரியர் அரசினர்பாடசாலை ,, ... | 5 | 00 |
| ,, சி. கார்த்திகேசு ,, விக்னேஸ்வரக்கல்லூரி ,, ... | 2 | 00 |
| ,, கா. வல்லிபுரம் பூஜகர் கரவெட்டி ... | 2 | 00 |
| ,, வே. சங்கரப்பிள்ளை ஆசிரியர் சைவ இளைஞர் மகாசபைக் [காரியதரிசி தெல்லிப்பளை ... | 10 | 00 |
| ,, க. தம்பையா தலைமையாசிரியர் தம்பளை பருத்தித்துறை ... | 5 | 00 |
| ,, க. வேலும்மயிலும் ஆசிரியர் தும்பளைச் சிவப்பிரகாச [வித்தியாசாலை பருத்தித்துறை ... | 10 | 00 |
| ,, வ. நாகலிங்கம் ஆசிரியர் தும்பளைச் சிவப்பிரகாசவித்தியா [சாலை பருத்தித்துறை ... | 2 | 00 |

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# வேதாகம நிரூபணம்.

## இரண்டாம் பாகம்.

### சுதந்திரப்பிரமாண நூல்கள்.

ஆப்தராவார் உள்ளது கூறுவோர். சாமானியமனுடரினும் விசேடமனுடர் மேலாகிய ஆப்தர். அவரினும் இருடிகள்மேலாகிய ஆப்தர். அவரினும் தேவர்கள் மேலாகிய ஆப்தர். அவரினும் பிரமா மேலாகிய ஆப்தர். அவரினும் விஷ்ணுமேலாகிய ஆப்தர். அவரினும் உருத்திரர் மேலாகிய ஆப்தர். அவரினும் மகேசுவரர் மேலாகிய ஆப்தர். அவரினும் சதாசிவர் மேலாகிய ஆப்தர். அவரினும் மேலாகிய ஆப்தர் இன்மையான், அவரே அதிபரமாப்தர் எனப்படுவர். இந்த அதிபரமாப்தராகிய சதாசிவநாயனாராலே பிரதம மகாசிருட்டி ஆரம்பத்திலே ஆன்மாக்கள் பொருட்டு அருளிச்செய்யப்பட்ட அதிபரமார்த்திக வாக்கியங்களாகிய அருமறைகளும் ஆகமங்களுமே சுதந்திரப் பிரமாண நூல்களாம். பரமார்த்திகம் என்பதற்கு பரமார்த்தமுடையது என்பது பொருள். இதனைப் பௌஷ்கர ஆகமத்திலும், அதற்குச் சந்தான குரவர்களுள் ஒருவராகிய ஸ்ரீமத். உமாபதிசிவாசார்ய சுவாமிகள் எழுதியருளிய விருத்தியினுங் கண்டு தெளிக.

அநாதி நின்மல நிரதிசயானந்த சொரூபியாய், சர்வஞ்ஞனும் சர்வகர்த்தாவுமாய் இருக்கிற சிவன் பரமாப்தன். அவன் வாக்கியமாதலின், வேதமும் சிவாகமமும் பிரமாணமேயென்று வடமொழிச் சிவஞானபோத விருத்தியும் சித்தியார் உரையும் பிறவும் செய்தருளிய ஸ்ரீ சிவாக்கிரயோகீந்திர சுவாமிகள் கூறினர். இவ்வாறே யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி ஞானப்பிரகாசமுனிவரும் வேதங்களும் சிவாகமங்களுமே நஞ்சமயப் பிரமாணநூல்கள் என்று நிலையிட்டமை அவர் அருளிச் செய்த பிரமாண தீபிகை முதலிய அரியகிரந்தங்களாலே உணரப்படும். இவ்வுண்மைகள் இந்நூல் முதற்பாகத்திலும் விளக்கப்பட்டுள்ளன. ஆண்டுக் காண்க.

### ஸ்மிருதிகள்.

மேலேகாட்டிய விவரணத்தால் தேவவாக்கியம் இருடிவாக்கியம் முதலியவைகள் வேதமும் ஆகமமும்போற் பிரமாணமாகா என்றும், அந்தப் பெருநூல்கள் இரண்டனுக்கும் மாறுபடாத விடத்தே ஸ்மிருதிமுதலியவை பிரமாணமாகக் கொள்ளத்தக்கன என்றும், விரோதித்தவிடத்து அம்மிருதி முதலியன கொள்ளத்தக்கன அன்று என்றும் துலக்கமாயின. இதனைச் சைவாசௌசதீபிகை உபோற்காதத்துங் காண்க. ஆகவே, வேதாகம சைவசித்தாந்திகள் மிருதியையே பெரிய பிரமாணமாகக்காட்டிப் பொக்கங்கள் பேசுவார்கள் என்று தாவாரம் இல்லை என்ற நூலுடையாராகிய பண்டிதர் இரத்தினம் B. O. L. அவர்கள் பீதி அடையவேண்டியதில்லை.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

இதன்மேலும் உமாபதிசிவாசாரிய சுவாமிகள், சிவாக்கிரயோகிகள், அரதத்தாசாரியர் முதலிய ஆரிய குருமணிகள் அருளிய பொன்மொழிகளை உச்சிமேற்கொண்டு சைவஸ்தாபனஞ் செய்த பெருந்தகையாளராகிய ஆறுமுகநாவலர் அவர்கள் வேதாகமங்களே மெய்ந்நூல்கள் என்றும், அந்த நூல்களை நாம் விசுவசித்தொழுகவேண்டும் என்றும், அந்த வடமொழி வேதாகமங்களாலும், தமிழ்த்திருமுறைகளாலும், சித்தாந்த சாஸ்திரங்களாலும் உணர்த்தப்படும் சைவசமயமே சற்சமயமென்று வற்புறுத்தி உபதேசித்து அக்காலத்தில் நமது முன்னோர்களை நல்வழிப்படுத்தினர் என்று கூறுவர் காலங்கண்ட முதியோர். இதனை ஸ்ரீமத் கைலாசபிள்ளை அவர்கள் எழுதிய ஆறுமுகநாவலர் சரித்திரத்துள்ள கீழ்வரும் வாக்கியங்கள்வற்புறுத்தும்.

1. "கடவுள் உண்டு. ஆன்மாக்கள் உண்டு. புண்ணியபாவமுண்டு என்னும் உண்மைகளை எடுத்துக் கூறி இவைகளைப்பற்றி விசேஷமாகப் பேசும் நூல்கள் காமிகம்முதல் வாதுளமிறுதியாகிய மூலாகமம் இருபத்தெட்டும், அவைகளின் வழிநூல்களாகிய நாரசிங்கம் முதல் விசுவான்மகம் இறுதியாகிய உபாகமங்கள் இருநூற்றேழும் சார்புநூல்களாகிய தத்துவப் பிரகாசிகைமுதல் இரத்தினத்திரயம் இறுதியாகிய அட்டப்பிரகரணமும் சிவாகமத்தின் ஞானகாண்டப் பொருளைச்சுருக்கி விளக்கும் தமிழ்ச்சித்தாந்த சாஸ்திரங்களுமே என்றும் சொல்வர்."

2. "சைவசமய நூல்களெல்லாம் சில விவேகிகளாலே அவ்வக்காலங்களிலே தங்கள் பிழைப்புக்காகச் செய்யப்பட்டன என்று சொல்லிய பாதிரிமாரின் சொல்லை விசுவசித்திருந்த அநேகர், பாதிரிமாரும் அவர்களைச் சார்ந்தவர்களும் சொல்லினவெல்லாம் பொய்யென்றும், சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு வேதம் சிவாகமம் என்னும் முதனூல்களை அருளிச் செய்தார் என்றும், அவைகளுக்கு வழிநூல்களும் அவ்வக்காலங்களிலே தோன்றின என்றும், மற்றைச் சித்தாந்த நூல்களும் அவர் அருள்பெற்றவர்களாலேயே செய்யப்பட்டன என்றும் அறிந்துகொண்டார்கள்."

## பாதிரிமார்.

இங்கே எடுத்துக்காட்டிய பிரமாண வாக்கியங்களினால் வேதாகமங்களைப் பொய்நூல் என்றும், அவைகள் சில புத்திமான்களால் வயிறோம்புதற் பொருட்டுச் செய்யப்பட்டன என்றும் அக்காலத்தில் பாதிரிமார்கள் சொல்லிச் சைவர்களைக் கெடுத்துவந்தமை பெறப்படுகின்றது. அஃது அங்ஙனமாக, இக்காலத்திலே சில அரசியல் வாதிகளும் அவர்களைச் சேர்ந்த பண்டிதர்களும் வித்துவான்களுமாகிய சைவத்திருவாளர்களே ஆரிய வேதங்களைக் கடவுள் இயற்றினர் எனல் கட்டுக்கதை என்றும், ஆரியர் தமக்கு உயர்வு தேடுவதற்காகவே வேதாகமங்களை இறைவன் இயற்றினன் எனக்கூறிப் பிறரைஏமாற்றினர்கள் என்றும், அவை பிற்காலத்தில் எழுதப்பட்டன என்றும், அவற்றை நம்பவேண்டாம் என்றும், போதனை செய்கிறார்கள். மதிமயக்கத்தினால் வேதாகமங்களையும் சைவக்கிரியைகளையும்

அநியாயமாகத் தூஷித்த அப்பாதிரிமாருடைய செயலைத் தற்காலத்திலே தம்மைச் சைவர்கள் என்றும், திருமுறைகளைத்தழுவுவோர் என்றும் நாவலரைப் போற்றுபவர் என்றும், சொல்லிக்கொள்ளும் நம்மவர்களே செய்ய முற்பட்டு நிற்கிறார்கள். இது கலியின்வன்மை போலும்.

மேலும் ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் தாம் உபதேசித்து வந்த உண்மைகளை நான்காம் பாலபாடம், சைவவினாவிடை, சிவாலயதரிசனவிதி, பெரியபுராணசூசனம் முதலிய அரிய நூல்களில் யாவரும் கடைத்தேறும் பொருட்டு, விளக்கி வைத்தார்கள். அவற்றையெல்லாம் இங்கே காட்டுதல் இயலாமையின், சைவதூஷண பரிகாரத்திலிருந்து மாத்திரம் சில பகுதிகளை அனுவதித்துத் தருகின்றோம்.

(1) "அநாதி பகவானாகிய பரமசிவன் அருளிச்செய்த வேதாகமங்களால் உணர்த்தப்படும் சைவசமயமே சற்சமயம்."

(2) "அப் பரமசிவன் ஆன்மான்கள்மேல் வைத்த பெருங்கருணையினாலே பஞ்சசத்திரூப பஞ்சமந்திர தநுமானாகிய சதாசிவனாய், பிரதம சிருஷ்டி ஆரம்பத்திலே முதநூலாகிய சுருதியை அருளிச்செய்தார். சுருதியாவது பரமார்த்தனால் உபதேசிக்கப்பட்ட பரமார்த்திக வாக்கியமாய், ஆன்மாக்களுக்குப் புத்தி முத்தி சாதகோபாய ஞானத்தைப் போதிக்கும் சாஸ்திரமாம். அந்தச்சுருதி சாமானிய விசேஷ பேதத்தால் வேதம் ஆகமம் என இரண்டு விபாகமாய் இருக்கும்."

(3) "சிவபெருமானே பசுபதி என்றும், அவர் அருளிய வேதாகமங்களே மெய்நூல்கள் என்றும், அவைகளில் விதிக்கப்பட்டவைகள் எல்லாம் புண்ணியங்கள் என்றும் ... நாங்கள் அறிந்திருக்கின்றோம்."

மேலே எடுத்துக்காட்டிய வாக்கியங்களின் கருத்தை,

"தெளிதரு மநாதி முத்த சித்துரு வாய முன்னோன்
அளிமிகு சிவனே யென்று துணிந்தவ னருளிச் செய்த
வொளிரும்வே தாக மங்க ளுரைவிதிப் படியே தத்தங்
களிநிலைப் படியே யன்னோன் கழலொழு மவரே சைவர்"

எனவரும் மஹாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை பாடலும் அறிவுறுத்தும்.

மேலே எடுத்துக் காட்டிய பகுதிகளால், நமது முன்னோர்களாகிய சான்றோர்கள் வேதங்களையும் ஆகமங்களையும் முதநூல்கள் என்றும், மெய்நூல்கள் என்றும் அவை சிருட்டி ஆரம்பத்திலேயே உண்டாயின என்றும், அவற்றில் விதித்தவற்றையே அறமென்று கொண்டார்கள் என்றும் அதிதுல்யமாய் விளங்கும். ஆகவே வேதநான்கும் ஆகமமிருபத்தெட்டும் பொய்நூல்கள் என்று சாதித்தலும், அவற்றின் தோற்றத்துக்குக் காலஎல்லை கற்பித்தலும், அவை ஆரியர் கட்டு என்று இகழ்தலும், அவற்றுள் விதித்தவற்றைப்புறக்கணித்தலும் முதலாய பேச்சுக்கள் எல்லாம் நாத்திகக்காழ்ப்பேறியோர் கூற்றுக்கள் என்று தூரத்திற்றள்ளப்பட வேண்டியனவேயாம்.

## பட்டினத்தடிகள்.

இன்னும், பட்டினத்தடிகள்

மந்திரமாய்ச் சாத்திரமாய் மறைநான்காய் நீயிருந்த
தந்திரத்தை நானறியத் தருமோதான் பூரணமே என்றும்,

சாந்தமென்றுங் கோபமென்றுஞ் சாதிபே தங்களென்றும்
பாந்தமென்றும் புத்தியென்றும் படைத்தனையே பூரணமே

என்றும் திருவாய்மலர்ந்தருளுகின்றார். அவற்றை விரோதித்து,

சிந்தையில் உணர்ச்சியின்றிச்
சிவாகமங்கள் சொல்வதோ என்றும்,

வீழ்க பொல்லா ஆரியர்கள்
விதித்த சாதிப் பிரிவெலாம்!

என்றும் 'பாரதிசபா'விற் பாடுகின்றார் திரு. க. வேந்தனார். முற்றத்துறந்த நம்பெருமக்கள் அறிவுரைகளுக்கு முழுவதும் மாறுபட்டு வெளிவரும் விஷயங்கள் அங்கீகரிக்கப்படத்தக்கவா என்பதை சைவஉலகம் அறியாதிருக்கவில்லை.

## வேதாகமங்கள் வடமொழியில் உள்ளன.

இனி, அருளினால் உருவுகொண்டு காரணன் அருளிய ஆரணங்களும் ஆகமங்களும் ஆரியத்தில் உள்ளனவா? அன்றித்தமிழில் உள்ளனவா? என்பது சந்தேகம். அவை தமிழிலேயே உள்ளன என்று பூருவ பக்ஷியார் பகருவர் எனில்; அவர் அவ்வாறு கூறுதல் பிழை என்பதை நிறுத்தும் சித்தாந்தம் வருமாறு:—

ஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது திருவாலவாய்த் தேவாரத்தில் வேதங்களும் ஆகமங்களும் அமையப்பெற்ற சம்ஸ்கிருத பாஷை என்று அருளிச்செய்தார் ஆதலானும், ஆதிசைவரும் சகலாகம பண்டிதருமாகிய அருணந்திசிவாசாரிய ஸ்வாமிகள் வடமொழியாய் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு காரியமுஞ்சொல்லி ஆன்மாவுக்கு அறிவையுஞ் செயலையுங் கொடுப்பது வேதாகமங்கள் என்று சித்தியார் பரபக்ஷத்தில் அருளியிருப்பதாலும், ஆண்டுத்தானே மாயாவாதிகளின் கொள்கைகளைக் கூறுமிடத்து "சாற்றுமறை தத்துவமசி மாவாக் கியங் கடனை யுணர்ந்தாற்போற்—போற்றியஃ தீயானு யென்றறைவ தல்லாற் பொருளின்றே" எனவும், மாயாவாதி மறுதலையில், ஆரணங்கடரு தத்துவம்மசி பதங்களின் பொருளறிந்திடாய், — காரணமதுவுநீயுமென் றிருமை கண்டு வேறதின்மை கருதிடாய்—என்று வடமொழி வேதத்தினுள்ள தத்துவமசி மகாவாக்கியப்பொருளை ஆராய்ந்தருளுவதாலும் தவராஜச்செல்வராகிய திருமூலமாமுனிவர் வடமொழி ஐம்பத்தொரு எழுத்துக்களானுபவை வேதங்களும் ஆகமங்களுமெனத் திருமந்திரத்தில் திருவாய் மலர்ந்தருளுவதாலும், அக்கருத்தை உமாபதிசிவாசாரியர் பௌஷ்கராகமத்தில் தந்திராவதாரபடலத்தில் விஸ்தரித்து விளக்குவதாலும், பிரமாண படலத்தில், காமிகாதி வாதுளாந்தமான ஆகமங்களைப் பிரமாணமென்று நிலைநிறுத்தியருளுவதாலும், அங்ஙனமே சிவஞானயோகிகள் முதலிய

தொல்லாசிரியர்கள் வற்புறுத்தியிருப்பதாலும் சைவசமய முதனூல்கள் சம்ஸ்கிருத மொழியில் அருளிச் செய்யப்பட்டன என்று தெள்ளிதிற் றுணியப்படும்.

## ஸ்ரீ சம்பந்தசரணாலய சுவாமிகள்.

இன்னும், சைவசமய ஸ்தாபனாசாரியராகிய திருஞானசம்பந்தப் பெருமானது நன்மாமணாராகிய சம்பந்த சரணாலய சுவாமிகள், தாம் அருளிச் செய்த தத்துவவிளக்கம் என்னும் ஒப்புயர்வற்ற சித்தாந்த சாஸ்திரத்தில், நூல் வரலாறு கூறும்வழி,

> சீரார் கயிலைத் திருவாய் மலர்ந்த சிவாகமங்கற்
> றூராய் வதுவட சொற்பயின் றோர்க்கெளி தம்மொழியைச்
> சாரா தவருந் தத்துவ ஞானந் தலைப்படுதற்
> கேரார் தமிழ்ச்செய் யுளான்மைய நீர வெழுதுவனே

என்றுசெப்பியருளினார். இதற்குக் காசிவாசி செந்திநாத ஐயர் அவர்கள் எழுதிய உரையையும் நோக்குக.

இங்ஙனம் திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய திருநெறிச்செல்வர்கள் அருமறைகளும் ஆகமங்களுமாகிய உண்மை நூல்கள் வடமொழிக் கண்ணேயே அமைந்துள்ளன என்று அறிவுறுத்துவதினாலன்றோ, ஆறுமுக நாவலப் பெருந்தகையாரும், வேதம் ஆகமம் உபாகமங்கள் அட்டப்பிரகரணங்கள் ஆகிய இச்சாத்திரங்கள் எல்லாம் மூலபாஷையாகிய சம்ஸ்கிருதத்தில் உளவாம்எனச் சைவதூஷணபரிகாரத்திற் கூறியதும் என்றறிக.

இதுவரை பிரமாணமாகக்கொண்ட இம்மூதறிவாளர் கருத்துக்கெல்லாம் மாறுபட்டு, திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், "வேதநெறி ஆரியரிடையேதோன்றியது;" "வேதஅறிவோ ஆகமஅறிவோ வேண்டியதில்லை;" "வடமொழி தேவபாடைஎன்று சொல்லமுடியாத நிலையைத் தேவாரங்கள் ஏற்படுத்திவிட்டன" என்று கூறியதும், திரு: வேந்தனார் அவர்கள், "ஆகமங்களை நம்புங்கள் என்று சைவத்தமிழ்மக்களை இனி ஏமாற்ற முடியாது" என்றதும், "வடமொழியில் எழுதப்பட்ட ஆகமங்களைத் தேவாரம்பாடிய மூவர்களும் அறிஞர்களும் ஒருபோதும் கருதமாட்டார்கள்" என்றதும், "தமிழிலே மறையிருந்து அழிந்துபோனதென்றதும் முதலிய கூற்றுக்கள் முற்றும் சான்றோர்சபையிற் செல்லாத வீண் பேச்சுக்களேயாம்.

இங்ஙனமிருந்தவாற்றால் வடமொழிக்கணுள்ள வேதங்களும் ஆகமங்களுமே ஆன்மாக்கள்பொருட்டுப் பேரறிவுடைய இறைவனால் இயம்பியருளப்பட்ட முதனூல்களாம் என்று சித்தித்தவாறு காண்க. இதற்குப்பிரமாணம் சிவஞான சித்தியாரில்,

1,

> ஆரியமா யறம்பொருளோ டின்பம்வீ டெல்லா
> மறைந்துயிர்கட் கறிவுசெய லளிப்பதநா லந்நூல்
> கூரியரா யுள்ளவர்க ளோத வோதிக்
> கொண்டுவர லான்முன்னே குற்ற மின்றிச்
> சீரியபே ரறிவுடையோன் செப்ப வேண்டும், எனவும்,

2. படிக்கு நூல்கள் சிவாக மம்பசு பாச மோடு பதித்திற
மெடுத்தி யம்புவ தீசன் வார்கழ லேத்தி டுந்தொழி லென்றுமே
விடுத்தி டும்பொருள் காம மாதிகள் வேண்டி டும்பொரு ளீண்டருள்
முடித்து மும்மலம் விட்டு நின்மல னோடு நின்றிடன் முத்தியே.

எனவும்,

3. ஓதுஞ்சொ லாய்வருத லானுங்க டாதிபட மோவந்தி டாவொருவரா
. வேதந்த தாமறைக ளாய்வந்த வாய்மொழியும் வேறின்று சேகரனதே.

எனவும்,

4. நூலினை யுரைத்து வேத நூலினை நுவலும் வண்ண
மாலருள் செய்தா னென்றூய் மறைநீதி யுலகி யற்கை
சாலவே தெரியா தாகிக் கிடந்தநாள் சகத்தி யார்க்கு
மாலின்கீ ழிருந்து வேத மருளின னறைந்தா னூலே. * எனவும்,

5. அநாதியே யமலனுய வறிவனு லாக மந்தான். எனவும் வரும்

**கந்தபுராணம்.**

வேதமே முதலா வுள்ள வியன்கலை யனைத்துந் தொன்னு
ளோதின னவனே யெங்கட் குரைத்திட வுணர்ந்தா மன்றே
யீதுநீ யவற்றிற் காண்டி யாருமொன் றாகக் கொண்டாய்
பேதையோ பெரிது மென்னப் பிதாமக னினைய சொற்றான்.

இனிப் பார்ப்பனர்மீது கொண்டசீற்றம் நமது சமயத்துக்கு வரும் ஏதம் நோக்காது, வடமொழி வேதாகமங்கள் சிவபெருமானால் செய்தருளப் பட்டன அன்றென்று கூறவும் செய்துவிட்டது! தமிழில் வேதாகமங்களைச் சிருட்டிக்கவும், அவற்றைத் திதிக்கமுடியாமையும், பின்னர்ச் சங்காரத்துட் படுத்தவும் செய்துவிட்டது! அம்மட்டோ "நாவலர் வாழ்ந்த காலத்தில் வடமொழி வேதாகமங்கள் நன்கு ஆராயப்படவில்லை ... தொண்டுசெய்த நாவலர் பெரிய ஆராய்ச்சிகளை நிகழ்த்த வாய்ப்புப்பெற்றிலர்" என்று மறை முகமாக அந்த நாவலரை வேதாகம ஆராய்ச்சியில்லாதவர் எனத்துணிந்து சொல்லவும் செய்துவிட்டது. அதுமாட்டோ; "அக்காலத்தில் ஆரியர் ஆதிக்கம் மிக்கிருந்தது." "ஆரியர் கூற்றுக்களை அப்படியே நாவலரும் வழிமொழிந்தும், ஆரியரின் காமிகம் முதலான ஆகம வழக்குகளை அப்படியே தமிழில் எழுதியும் அக்காலப்போக்குடன் ஒட்டிச் சைவத் தொண்டாற்றினர்" என்றெழுதவும் செய்துவிட்டது. இவற்றை நோக்கும் போது எந்த உண்மைச்சைவனும் வருந்தாதிருக்கமுடியுமா? இதனால், இக் காலத்துக் கல்வியாளரிற் சிலர் "பாடங்கொள் பனுவற்றிறங் கற்றுப் போய் — நாடங்குள்ளன தட்டிய நாவினீர்' என்னும் அப்பமூர்த்திகள் திருவாக்குக்கு இலக்கியமாய், வயிறு வளர்க்க வேண்டி நடுவு நிலைமையினில் லாது, அவைக்களத்துள்ளோர் நோக்கம்போன்று சொற்பொழிவு செய்தல் போல, ஸ்ரீலஸ்ரீ நாவலரும் உலகினர் கருத்துக்குத் தக்கவாறு எழுதினரே தவிர, உண்மையைக் காட்டி உபகரித்திலர் என்று வெளிப்படுத்துகின்றன ரன்றோ! இக்காரணத்தினால் திரு. வேந்தனார் கூற்றுக்கள் தள்ளத்தக்கனவே யன்றிக் கொள்ளத்தக்கன அன்றென்பது ஒருதலை.

* நூல் — ஆகமநூல்.

## ஆகம அறிவு வேண்டாமா?

நாயன்மார்களும் அவர்களுக்குப் பின்வந்த அடியார்களுமாகிய இவர்களுடைய கூற்றுக்கள் யாவும் "நாம் பேசும் தமிழில் பாடப்பட்டுள்ளனவேயன்றி எமக்கு விளங்காத இறந்தமொழியில் புதைத்து வைக்கப்படவில்லை. ஆதலின் இவற்றைவிளங்கிக் கொள்ளுவதற்கு வேதஞானமோ ஆகமஅறிவோ வேண்டியதில்லை" எனத் தாவாரம் இல்லை என்ற சிறு நூலில், வடமொழி வேதாகமம் வேண்டாமென்று தீட்டிநின்றவர், அதற்கு மாறுபட்டுத் தாம் பிரசன்னராயிருந்து நிகழ்த்திய வரவேற்புரை ஒன்றில், "தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்" எனும் ஔவையார் பாடலும் ... ... ... தமிழ்மக்கள் யாவரும் படித்துப்பயனடைய வேண்டிய நூல்களைக் குறிக்கின்றன" என்று போதித்தமை முன்பின் மாறுபடக் கூறும் கூற்றுக்களாம். என்னையெனில்; "தேவர் குறளும்" என்று தொடங்கும் அன்னை பாடலில் வரும் "திருநான் மறைமுடிவும்' 'முனிமொழியும்' ஆரியநூல்கள் ஆதலினாலேயாம். இவர் தம்மால்வெறுத்து ஒதுக்கப்பட்ட அந்த வடமொழி நூல்களைப் படித்துப் பயனடைய வேண்டும் என்று தமிழ் மக்களுக்கு ஏன் கற்பிக்கின்றார்! இங்ஙனம் இவர் பரஸ்பரம் மாறுபடச் சொல்லியும் பிறிதுபொருள் கற்பித்தும் வழுப்பட்ட இடங்கள் மிகப்பலவாம். இனி ... "இறந்த மொழியில் புதைத்து வைக்கப்படவில்லை" என்று இவர் கூறியதனால், நாயன்மார்களுக்குப் பின் வந்த உமாபதி சிவாசாரிய சுவாமிகளும், அரதத்தாசாரியர் அப்பயதீக்ஷிதர் போஜதேவர் முதலிய அருளாளர்களும் அருளிய வடமொழி நூல்களையும் வெறுக்கின்றார் என்பது யூகிக்கப்படும். தேவாரத்தை விளங்கிக் கொள்ளுவதற்கு "ஆகமஅறிவு வேண்டியதில்லை" எனின்; அதுவும் பொருளற்ற வெற்றுரையேயாம். "ஒன்பதொன்பதியான்" ஐயிரண்டும் ஆறொன்றும் ஆனார் போலும்" "நான்மூன்று மானார்போலும்" என்றித்தொடக்கத்த தேவாரப்பகுதிகள் ஆகமவிஷயங்களையே அறிவுறுத்துகின்றமையினால் என்று அறிக. "ஒன்பதொன்பதியான்" என்பது சைவாகமங்களில் விதந்தோதப்பெறும் பிரணவாதி பிரணவாந்தமாகிய "ஓம் வியோம வியாபினே" என்பன முதல் "ஓம் சிவாயநமோ நம: ஓம்" என்பன ஈறாயின ஆகிய எண்பத்தொரு பதங்களிற் பேசப்படுவன எனவும் "ஐயிரண்டும் ஆறொன்றும்" என்பது மேதாகலை முதல் உன்மனையந்தமாகிய ஷோடசகலாப் பிராசாதத்தை உணர்த்தும் எனவும், "நான்மூன்றும் ஆனார் போலும்" என்பது மூலமந்திர பஞ்சப்பிரம ஷடங்க மந்திர சொரூபியாய் இறைவன் விளங்குகின்றான் என்பதைக் குறிப்பிடும் எனவும் அறிந்து கொள்க. இவ்வாற்றால், திருமுறைப்பொருளை அறிந்து கோடற்கு வடமொழி ஆகம அறிவும் வேண்டப்படும் என்பது நாட்டப்பட்டது.

தாவாரம் இல்லை என்ற புத்தகத்துப்பதினைந்தாம் பக்கத்தில், 'தமிழ் நாட்டிலே தோன்றியசைவாகமங்கள் இப்பொழுது கிடைக்கவில்லை' என்றவர், "அருளினால் ஆகமத்தே அறியலாம்" எனச் சகலாகமபண்டித சிவாசாரியருடையவாக்கை இருபத்தொராம் பக்கத்தில் பிரமாணமாகக்காட்டினார். இப்பொழுது கிடைக்காத ஆகமங்களைக் கொண்டு, இக்காலத்தவர் இறைவனை எவ்வாறு அறியலாம் என்பதைச்சற்றே துலக்கிவிடின், வேதாகம சைவசித்தாந்திகட்கு மிகப்பெரும் பிரயோசனமாகும்; அருணந்தி

சிவாசார்ய சுவாமிகள் "மறையினால்..... இறைவனார்" என்றும், "அருளினால் ஆகமத்தே அறியலாம்" என்றும் சுட்டியமறையும் ஆகமமும் சங்காரத்துட்பட்டவைகள் அன்று; முக்காலத்தும் நிலைபெற்று நிற்கும் வடமொழி வேதமும் ஆகமுமேயாம். என்பதை உணரக்கடவர்.

## மறைஎனும் நூல்வகை.

மேலும், "தொல்காப்பியர் காலத்துக்குமுன்னரே தமிழ்நாட்டில் மறைஎனும் நூல்வகை ஒன்று இருந்ததாகக் கருதுவதற்குப் போதியசான்றுகள் உள" எனப் பண்டிதர் கா. பொ. இ. அவர்கள் பகருவர். இதனால், தொல்காப்பியனாரது ஆசிரியரும் அவர்காலத்துக்கு முற்பட்டவருமாகிய அகத்தியனார்காலத்தில் தமிழ்மறை முழுதும் இருந்ததெனச் சித்தாந்தஞ் செய்தலே அவர்கருத்தாதல்தெளிவு. அப்பண்டிதர் சடிதியிலேயே "திருவள்ளுவர் காலத்தும் திருமூலர்காலத்தும் இந்தமறைகளின் சிலபகுதிகளாதல் தமிழ்நாட்டில் இருந்திருக்க வேண்டும்" என்று கூறி இடர்ப்படுகிறார். திருமூலநாயனாரது காலம் தொல்காப்பியனாரது ஆசிரியராகிய அகத்தியமுனிவருடைய காலமேயென்று பெரிய புராணத்தால் நிச்சயிக்கப்படுதலின், அவ்வகத்தியனார்காலத்தில் அம்மறைகளிற் சிலபகுதிகளாதல் இருந்திருக்கவேண்டும் என்று கூறியது, முன்னதற்குப் பெரிதும்மாறுபட்ட உரையேயாம்.

இனி, அகத்தியமுனிவருக்குச் சமகாலத்தவராய திருமூலநாயனார் வேதங்களும் ஆகமங்களும் வடமொழியேயென்று அறிவுறுத்துவதினாலும், வேதாகமங்கள் வடமொழியிலேயே உள்ளனஎன்று அறிவுறுத்திய உமாபதிசிவாசாரியர், அவ்வேதாகமங்கள் முருகக்கடவுளால் அகத்தியமுனிவருக்கு உபதேசம் செய்யப்பட்டமையை "அளவில் பலகலை யங்க மாரணங்களுணர்ந்த அகத்தியனுக் கோத்துரைக்கு மண்ணல்" என அறிவுறுத்துகின்றமையாலும், அருணந்திசிவாசாரியரும், "அருமறை யாகம மங்க மருங்கலை நூறெரிந்த வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருவே" எனக் கூறுகின்றமையாலும், சிவாக்கிரயோகிகளும் "வேத சிவாகம மாதியான— மெய்ந்நூல்க ளனைத்தினையும் விரித்து நன்றா- ஓதியிட அகத்தியரை முதலாவுள்ள வுயர்முனிவோர்க் கருள்புரிந்த வொருமையாளன்" எனக் கூறுகின்றமையினாலும், அவ்வாறே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும்,

ஆங்குறு குமரப் புத்தே ளருமறைக் காதி யாகி
யோங்குமெப் பொருட்கு மேலா மோரெழுத் துரையி னுண்மை
தீங்கற வணங்கிக் கேட்பச் சிறுமுனிக் குதவி மற்றும்
பாங்குறு மிறைவ னாலும் பரிவினா லுணர்த்தி னானால்.

என்று உணர்த்தியருளுவதாலும், அகத்தியமாமுனிவர் இறைவனால் ஆகமோபதேசம் பெற்றமை ஆகமங்களிற் பேசப்படுதலினாலும், தொல்காப்பியனார் காலத்துக்குமுன் வழங்கிய மறைகளும் ஆகமங்களும் ஆரியமேஎன்பது சித்தமாயிற்று.

## காலஆராய்ச்சி—தொல்காப்பியம்.

இனித் தமிழில் மறை இருந்ததென்பதற்குத் தொல்காப்பியத்திற் சான்று தேடுகின்றார்கள். தொல்காப்பியத்தில் உரைக்கப்பட்ட மறை ஆரி

யமே என்பதும், ஆரியமும் அம்மொழி மறையும் ஆதிதொட்டே நம்நாட்டில் நிலவியதென்பதும் திருநான்மறை விளக்க ஆராய்ச்சி என்னும் நூலில் ஸ்ரீமத். சாம்பசிவம்பிள்ளை அவர்கள் காலநிர்ணயம்செய்து எழுதியவாற்ருனும் அறிந்துகொள்ளலாகும். அஃதாவது:-

"முதனூல் வழிநூல் இன்னதென்றும் பலவகைச் செய்யுளிலக்கணம் இன்னதென்றும் தொல்காப்பியம் கூறுகின்றதே! தமிழர்களது நான்மறைகளையும் அவைகளில் விளங்கிய தமிழ்ச்செய்யுட்போக்கையும் தொல்காப்பியனூர் கூருது விடுவரோ! தமிழ்நான்மறை கற்றவரென்று நண்பரால் சொல்லப்படும் அதங்கோட்டாசிரியர் தாம் கற்றிருந்த தமிழ்நான்மறை விவரங்கள் தான்கேட்டு அங்கீகாரஞ்செய்த நூலிற் காணப்படாதிருக்கவும் அதை அங்கீகரிப்பரோ? ஆதலால் தமிழ் நான்மறை ஒன்றிருந்ததென்பது தன்கருத்து முற்றுவித்தற் பொருட்டுக் கல்லாமாந்தரை மயக்கித் தன் வசப்படுத்தற்குக் கூறிய வெற்றுரையென்பது ஒருதலை. கடல்கோட்குமுன் (தமிழ்மறை நான்கும் நிலவின) என்ற காலஎல்லையை நமது சரித்திர வாயிலாக ஆராய்வாம்.

தலை, இடை, கடையென முச்சங்கங்கள் நிலைபெற்று நின்றன என்பதும், தலை இடை இரண்டு சங்கங்களும் அவை நிலாவிய மதுரை கபாடபுரம் என்னும் நகரங்களும் இருமுறையுண்டான கடல்கோள்களில் மறைந்து போயின என்பதும் நமது பண்டைநூல்களிற் கூறப்பட்டிருக்கின்றன. தற்கால சரித்திர ஆராய்ச்சி வல்லுநர் கடைச்சங்கமிறுதிக் காலத்தை ஒரேநிலையாகக் குறிப்பிட்டுக் கூறவில்லை. திருவள்ளுவர் குறள் அரங்கேற்றிய காலம் கடைச்சங்கமிறுதிக் காலமாயிருக்கலாமென்பது பல்லோர் கருத்து. அவ்வாற்ருல் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் கடைச்சங்கம் குலைந்திருக்க வேண்டும்"

"திருவாளர் சீனிவாசப்பிள்ளை அவர்கள் பல ஆராய்ச்சிகொண்டு கடைச்சங்கம் இறுதிபெற்றது, கி. பி. மூன்ரும் நூற்ருண்டென்கிருர்கள். இவ்வாராய்ச்சிக்கு அக்கணக்கு எல்லையையே வைத்துக்கொள்வோம். அப்போது கடைச்சங்கம் இறுதியடைந்து க௬00 ஆண்டுகள் ஆகின்றன. கடைச்சங்கம் நிகழப்பெற்ற காலம் நமது நூல்களின் ஆதாரவுப்படி க௮௫0 வருடங்கள், இடைச்சங்கம் நடைபெற்ற காலம் ௩௭00 ஆண்டுகள். இவ்வகையில் க௬00 + க௮௫0 + ௩௭00 = ௭க௫0 வருடங்கட்கு முன்னர் தலைச்சங்கமிருந்ததாகத் துலங்குகின்றது. ஒவ்வொரு சங்கமும் மறைந்து அடுத்த சங்கந் தோன்றியகாலத்துக்கு இடையே எத்தனை ஆண்டுகள் நின்றனவோ அது விவரம் தெரியாது."

"தொல்காப்பியம் முதலிய நூல்களை ஆராய்ந்து முதல்தடவையாக அச்சிட்டு வெளிப்படுத்திய ஸ்ரீமான். தாமோதரம்பிள்ளையவர்கள் தொல்காப்பியம் இயற்றப்பட்டு க௨,000 ஆண்டுகள் ஆயின என்கிருர். அவ்வளவு தூரம் போகவேண்டாம். ஏற்பட்ட கணக்கின்படி ௭க௫0 வருடங்களுக்கு முன்னர் தொல்காப்பியம் இயற்றப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. ஆரியர்கள் மத்திய ஏஷியாவிலிருந்து முதன்முதல் பஞ்சாப் தேசத்திற் குடிபுகுந்தது இற்றைக்கு ௩௫00 ஆண்டுகட்கு முன்னர் என்று மேனாட்டுச் சரித்

திர ஆராய்ச்சியார் கூறுகின்றார்கள். பிறகுதான் நான்கு வேதங்களுமியற்றப் பெற்றனவாம். இவ்வாறாகில் நமது நூல்களின்படி ஏற்பட்ட குறைந்த எண்ணிக்கைப்படி எகடுo ஆண்டுகட்குமுன் இயற்றப்பெற்ற தொல்காப்பியத்தில் ஆரிய அந்தணர்களைப்பற்றியும், அவர்கள் ஒழுக்கங்களைப்பற்றியும் அவர்கள் வேதநூல், மதக்கொள்கைகள், ஆரிய எழுத்தின் பிறப்பு முதலிய,ஆரியமொழிகள் தமிழ்ச்செய்யுளில் வருவதற்கு இலக்கணம், இவைகளெல்லாம் தொல்காப்பியநூலில், எவ்வாறு எழுதப்பட்டன. ஆனால் மேனாட்டுச் சரித்திர ஆராய்ச்சியைப் பின்பற்றிய சம்மவருட் சிலர் தொல்காப்பியந் தோன்றியே இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனதாகச் சொல்லுவார்கள் இவர்கள் கூற்றுக்குப்பிரமாணம் அவர்கள் வாய்மொழியே. ஆதலால் சிவதருமோத்தரம் கூர்மபுராணம் கூறியவாறு ஆரியர்களாகிய அந்தணர்களும் நம் நாட்டில் நம்முன்னோர்கள் உண்டானபோதே உண்டானவர்கள் ஆவார்கள்.'' ''ஆதலால் வடமொழியும் வடமொழிவேதமும் ஆதிதொட்டே நந்தமிழ்நாட்டிற்பரந்து நிலாவியதென்பதே உறுதி'' ''நமது சிவபெருமானே ஆரியத்துக்கும் தமிழுக்கும் முதற்குருவாகி நிற்கின்றார்.''

## ஆரியர் வேதாகம வழக்கு.

''ஆரியர் தமிழரோடு கலவாதகாலமொன்று முன்னர் இருந்ததாகவும் பின்னர் ஆரியர் தமிழரோடு கலந்தகாலமுண்டாயதாகவும் மேனாட்டுச் சரித்திர ஆராய்ச்சியை இங்குக் கூறவந்தார். அது நமது நூல்களின் கருத்துக்கும் நம் நாட்டின்கண் அநாதியாய் நிகழ்ச்சிபெற்றுவரும் நடைக்கும் பொருந்தாது. எவ்வாறெனிற் கூறுதும்.

பாரதமு நவதீவ பாகமுறு மவற்றுள்ளுஞ்
சீரியது குமரியெனுந் தீவதனிற் சிறந்திருப்ப
ராரியரா மந்தணரு மல்லாரு மருமறையின்
காரியமு முறுமதனி லின்னுமுள கழறிடுவாம்.
கங்கைமுத னதிபலவுங் காசிமுதற் பதிபலவும்
பொங்குமயேந் திரம்பொதிய முதன்மலையும் பொருந்தியிடு
மங்கதற்கு யோசனையோ ராயிரமுண் டெனவறிக
வெங்கொடிய மிலேச்சரிட மெட்டினுமெண் ணாயிரமே.

என்ற சிவதருமோத்தரச் செய்யுட்களால் நாம் வசித்துவரும் பூமியின் பாகத்துக்கு (அதாவது இந்தியாவெனும் நாடு) குமரிகண்டமெனும் பேரென்றும்,அதில் ஆரியராமந்தணர்களும் அவர்களல்லாத ஏனையோரும் வசித்துவருவார்களென்றும், அருமறையின் வழித்தாய காரியங்களும் அங்கு நிகழப்பெறுமென்றும், கங்கைமுதலாய புண்ணிய நதிகளும் காசிமுதலிய சிவதலங்களும் பொதியம் முதலிய மலைகளும் அதில் பொருந்தியிடு மென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன.''

''பரதகண்டமெனும் நாட்டில் மறைவழக்க மிருப்பதனாலுமன்றே நம் அருணந்தி சிவனாரும், ''நரர்பயி றேயந் தன்னினுன்மறை பயிலா நாட்டில்-விரவுத லொழிந்து தோன்றல் மிக்கபுண் ணியந்தா னாகும்''என்றருளிச் செய்தனர். தொல்காப்பியர் அவர்காலத்துக்கு முந்தியே, ஆதிமுதலே வடமொழி, தமிழ் நாட்டிலும் பரவியிருந்ததினாலன்றோ, அம்மொழிகள் தமிழ்

நூல்களில் வழங்கப் பெறுதற்கு இலக்கணமுந் தொல்காப்பியத்துட் கூறினார். அன்றியும் தமிழ் எழுத்துக்கள் பிறக்கும் இடங்கள் வடமொழி எழுத்துக்களைப் போலல்லவென்றுங் கூறினார். ஐந்திரமென்ற வடமொழி இலக்கணங்கற்ற தொல்காப்பியனென்றும், தொல்காப்பியப் பாயிரச் செய்யுளுங் கூறிற்று. அன்றியும் அத்தொல்காப்பியப் பாயிரம், நான்மறை கற்ற அதங்கோட்டாசான் எனத் தொல்காப்பியம் அரங்கேற்றியபோது அதைக் கேட்டு அங்கீகரித்தபுலவரும் நான்கு வேதங்களையுங்கற்றவரெனப்புகழ்ந்து கூறுவதாயிற்று. இன்னமும் "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற சூத்திரத்தாலும் மற்றுஞ் சூத்திரங்களாலும் பார்ப்பார்முதலிய குலத்தவரது வருணாச்சிரமதருமங்களையும் அத்தொல்காப்பியம் எடுத்து விதிப்பதாயிற்று. இவைகளையெல்லாம் கூர்ந்து நோக்கும்போது தொல்காப்பியர் காலத்துக்கு முந்தியே நந்தமிழ்நாட்டில் சிவதருமோத்தரம் கூர்மபுராணம் கூறியபடி வேதமறையோர் இருந்ததுமன்றி வேதங்களும் வேத ஒழுக்கமும் பரவியிருந்தனவென்றும் திட்டமாய் யாதொருஐயமின்றித் தெரிவாகிறது.

இன்னமும் இதுகாறும் வெளிவந்திருக்கும் சங்கநூல்கள் பலவும் அறம் பொருள் இன்பத்தைக் கூறியவையேயன்றி ஒன்றாயினும் வீட்டுநெறி மார்க்கம் போதிக்கும் விரிந்த நூலாயிலது. 'அறம்பொருளின்ப மடுக்கியவ்வகை—திறம்பட வருவது கீழ்க்கணக்காகும்" என்னும் பன்னிருபாட்டியற் சூத்திரமும் வலியுறுத்தும். ஆனால் திருமூலர் திருமந்திரம் எனும் நூல் சமய உணர்ச்சிக்குரியதாய்த் தமிழில் உள்ளது. இந்நூலிலும் "வேதமொ டாகம மெய்யாமிறைவனூல்" எனக் கூறியிருப்பதுமன்றி வேதச்சிறப்பில் ருக் வேதத்தின் பெயரையும், ஆகமச்சிறப்பில் காமிகாதி ஆகமங்களின் பெயர்களையும் கூறியிருப்பதுமன்றி, அந்நூலில் அநேக பாகம் ஆரிய மந்திரங்கள்டங்கிய திரிபுரைசக்கரமாதியன கூறுவதுளவேயாம். உதாரணமாக ஒரு செய்யுளைக்காட்டுவாம்.

ஔமுத லவ்வொடு ஹௌவுட னாங்கிரீம்
கௌவுளு மையுளுங் கலந்திரீம் சிரீமென்
றெவ்வி லெழுங் கிலீமந் திரபா தமாச்
செவ்வு ளெழுந்து சிவாய நமவெனே.

இச்செய்யுளிற் காணப்படும் மந்திரங்களை வடமொழிப் பயிற்சியின் உதவியின்றி ஒலிக்கவும் பொருள் கூறவும் முடியுமா. மற்றுமிவ்வாறே.

இவ்வரிய பிரபல உண்மையான பிரமாணங்களான், ஆரியர் ஆரியத்துடன் ஓர் காலத்தில் நம் நாட்டுக்குப் பாரசீக தேசத்திலிருந்து வந்தவர்கள் என மேனாட்டுச் சரித்திர ஆராய்ச்சியார் கூற்று நம் சமயக்கொள்கை நூல்கட்கும் தொன்றுதொட்டே நிகழ்ச்சி பெற்று வரும் ஆசரிப்புக்கும் முரண்பட்டதாகும். சுவாமி விவேகானந்தர், ஆரியர்கள் அயனாட்டினின்றும் பாரதகண்டத்தினுட் புகுந்தவரென்று சரித்திர ஆராய்ச்சியார் சொல்லும் விஷயத்தில் எழுதுவதாவது:-

"And what your European Pandits say about the Aryans swooping down from some foreign land, snatching away the

lands of the aborigines, and settling in India by exterminating them are all pure nonsense, foolish talk! strange, that our Indian scholars, too, say amen to them; and all these monstrous lies are being taught to our boys! This is very bad indeed."

"In what Veda, in what suktah do you find that the Aryans came to India from a foreign country? Where do you get the idea that they slaughtered the wild aborigines! What do you gain by talking such nonsense?.........

சுவாமி விவேகானந்தர் தமது அனுபவத்தையும் பண்டைய நமது நூல்களின் பிரமாணத்தையும் ஒட்டி எழுதியிருப்பதானது முன்பக்கத்திற் காட்டிய சிவதருமோத்தரச் செய்யுளுக்கு ஒற்றுமையாயிருப்பதை நம்மவர்கள் கண்டு களிப்பார்களாக.

ஆரியர்கள் புறநாட்டிலிருந்து வந்தார்களென்னும் புழுகுவார்த்தையை நமது பிள்ளைகளுக்கு இளமையிற்றானே கற்றுக்கொடுத்து அதையே நம்மவர்களிற் கற்ற மேதாவிகளிற் சிலரும் தொட்டிற் பழக்கம் சுடலை மட்டும் என்னும் பழமொழிக்கு இலக்கியமாகிக் குழறுபடையாய் உளறுவதை முன்னிட்டு சுவாமி விவேகானந்தர் மிக்க வருத்தமுற்று மேற்கண்டவாறு எழுதியிருக்கிறார்களென்பது தானே விளங்கும்."

மேற்காட்டிய பிரமாணத்தால் பூருவபக்கத்தாருடைய நவீன ஆராய்ச்சி போலி என்றறிக.

## தேவர்குறள் வேதநான்கின் மெய்ப்பொருள்.

இனி, "திருக்குறள் தேவாரம் திருவாசகம் என்பன தொல்காப்பியர் காலத்திலே வழங்கிய தமிழ்நான்மறைப் பொருள்களை வழிவழியே நிலைநிறுத்தி வந்த தமிழ்மறைகளாகும்" என்று திரு. பண்டிதர் வேந்தனாரும், "திருவள்ளுவர் காலத்தும் திருமூலர் காலத்தும் இந்த மறைகளின் சில பகுதிகளாதல் தமிழ் நாட்டில் இருந்திருக்கவேண்டும்" என்று திரு. பண்டிதர் கா. பொ. இ. அவர்களும் கூறினார்கள். அவற்றை ஆராய்வாம்.

திருக்குறளைத் தமிழ்வேதம் எனத் தொன்றுதொட்டுக் கூறிவருவதற்குக் காரணம் வடமொழி வேதத்தோடொத்த பெருமையுடைமையினாலேயாம். இவ்வுண்மை "இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என நான்கவாய் முன்மறைகட்குப் பின்மறையாய் எழுந்தமையின் உத்தரவேதமென்றும், அந்தணர் அரசர் வைசியரென்னும் துவிசர் மூவரும் ஓதுதற்குரிய சிறப்பியல்புடைய நான்மறைகளும் போலாது அந்தணர் அரசர் வைசியர் வேளாளர் என்னும் நாற்பால் வருணத்தாரும் மற்றைச் சங்கர சாதிகளுட்பட்ட நன்மக்களும் ஓதுதற்காம் பொதுவியல்புடைத்தாய் மறைப்பொருள் கிளத்தலிற் பொதுமறை யென்றும்......வழங்கப்படும்" எனச் சபாபதி நாவலர் முதலிய முன்னோர் கூறுவதனாலும் உணர்ந்துகொள்ளலாகும்.

இனித் திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்தாருள், வெள்ளிவீதியார் முதலிய மெய்ப்புலவர்கள் கூறிய பின்வரும் திருவாக்குக்கள் மேற்கூறிய உண்மையை வலியுறுத்தும்.

### வெள்ளிவீதியார்.

1. செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே.

### வண்ணக்கஞ்சாத்தனர்.

2. —ஆரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து.

### உக்கிரப்பெருவழுதியார்.

3. நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த நூன்முறையை

### மாங்குடிமருதனர்.

4. ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கி

### செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனர்.

5. வேதப் பொருளை விரகால் விரித்துலகோ
ரோதத் தமிழா லுரைசெய்தா—ராதலால்
உள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவனார் வாய்மொழி மாட்டு.

### காவிரிப்பூம்பட்டணத்துக் காரிக்கண்ணனர்.

6. மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
யந்தா மரைமேலயன்.

### களத்தூர்க்கிழார்.

7. —அருமறைக்
ளைந்தாஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்.

### மதுரைப் பெருமருதனர்.

8. வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனா
ரோத வழுக்கற்ற துலகு.

### நரிவெருத் தலையனர்.

9. இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநால்—மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள்ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

### ஆசிரியர் நல்லந்துவனர்.

10. சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்—தோற்றவே

**கோதமனர்.**

11. ஆற்ற லழியுமென் றந்தணர்க ணூன்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்.

இப்பிரமாணங்களைக் கொண்டு நோக்குமிடத்துத் திருவள்ளுவர் காலத்தும் அதற்குப் பின்னரும் முன்னரும் வழங்கிய மறை வடமொழியேயாதலும் அது எழுதாமறை எனப்படுதலும் தெள்ளிதிற் புலப்படுகின்றது.

இன்னும், வைராக்கியதீபமுடையார் "வேதந் தனைத்தமி ழுருவத் தொழித்தெமக் களித்தவள் ளுவரே" எனக் கூறுவதும், அதற்கு உரை எழுதிய சிதம்பரசுவாமிகள் "வேதார்த்தங்களைத் தமிழ்மொழி ரூபத்திலே மறைத்து எமக்கருளிச்செய்த திருவள்ளுவநாயனூர்" என்றெழுதி "ஆரிய முஞ் செந்தமிழும்" "செய்யா மொழிக்கும்" என்ற திருவள்ளுவமாலைப் பாடல்களை உதாரணம் காட்டியதும் அறிந்துகொள்க.

மேலும், உத்தரவேதத்திலே,

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் என்றும்,

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

என்றும் திருவள்ளுவநாயனூரே கூறுகின்றார். இங்கே "அந்தணர் நூல்" என்றது தொல்காப்பியனூர் முதலிய தொல்லோர் கூற்றின்படி வடமொழி வேதமேயாம். "அந்தணர் நூற்கும்" என்னுஞ் சொற்றொடருக்கு அந்தணர்க்குரியதாகிய வேதத்திற்கும் எனப்பொருள் கண்டார் பரிமேலழகர். அதன் விசேட உரையில், "அரசர் வணிகரென்னு மேனையோர்க்கு முரித்தாயினும் தலைமைபற்றி அந்தணர் நூலென்றார்" என உரைத்தவாறும் உணர்க.

தமிழ் மறையில் "அறுதொழிலோர் நூல் என்ற கூற்றும் வடமொழி வேதத்தையே காட்டி நிற்கின்றது. புறநானூறு ௩௯௭-வது செய்யுளில், "அறுதொழிலந்தணர்" எனச்சொல்லப்படுதலினாலும், "அந்தணரென்போ ரறுதொழில் பூண்டுள்ளோர்" எனத்திருமந்திரத்திருமுறையிற் கூறப்படுதலினாலும்,

"அருமறையோரவர் பின்னுங் கைதொழுதங் கறிவிப்பா
ரிருநிலத்தில் மறைவழக்க மெடுத்தீர்நீ ராதலினால்
வருமுறையா லறுதொழிலின் வைதிகமா நெறியொழுகுந்
திருமணஞ்செய் தருளுதற்குத் திருவுள்ளஞ் செய்யுமென"

எனப் பெரியபுராணத்திற் பகரப்படுதலினாலும்,

மூத்தீ நான்மறை யைம்புல னடக்கிய
வறுதொழி லாளர்க் குறுதி பயந்தனை

என நக்கீரதேவர் அருளிய திருவெழுகூற்றிருக்கையில் ஓதப்படுதலினாலும், அந்தணருடைய தொழில் ஓதல் ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்று வடமொழிநூல்கள் கூறுதலானும், தென்றமிழ் நூலாகிய பதிற்றுப் பத்திலும்,

"ஓதல் வெட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதலேற்றலென் றாறு புரிந்தொழுகும்
அறம்புரி யந்தணர்"

எனப் புகழப்படுதலினாலும், சிவஞான முனிவருடைய மாணாக்கராகிய கச்சியப்பமுனிவர் "ஆபயன்குன்றும்" என்னும் உத்தர வேதத்தை விளக்குமிடத்து,

"அறுதொழி லாளர்நூல்க ளயர்ப்பரான் பயனின்றாகு
முறைபெய லொழியுங் கூழுங் குடிகளு மொருங்கு நீங்கும்
பெறுபய னட்டிற் குன்றும் பிறங்கொளி நிலைபெறாது [தா"
கறையின்மேற் பொருள்கைக் கொண்டு காவலை விடுப்பின் மைந்

எனச் செப்பியருளினமையாலும் திருவள்ளுவ நாயனாருக்கு வடமொழி வேதமே உடன்பாடென்பது செவ்விதிற் புலனாகின்றது.

இன்னும், இதனால் வேதமோதுதற்கு உரிமைபூண்டவர்கள் அந்தணர்கள் என்பதும், அவர்கள் அறுதொழிலோரென்பதும் வற்புறுத்தப்படும். ஆகவே, இவற்றிற்கு மாறாகச் செய்யப்படும் ஆராய்ச்சிகளெல்லாம் தூரத்திற் றள்ளப்படுவனவேயாம்.

தமிழ் நாட்டில் தமிழ்மறை என்பதொன்று இருந்ததெனத் தாபிதஞ் செய்ய முயன்ற பண்டிதர், "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து-மறைமொழி காட்டி விடும் என்று வள்ளுவர் கூறியதையுங் காண்க" என்று வரைந்தார்.

"காண்க" என்று எழுதிய அவ்வளவிற்றானே, படிப்போருக்கும் கேட்போருக்கும் உண்மை புலப்பட்டு விடும் என்று நினைத்துப் போலும், இக்குறட்பாவின் கருத்து இது, அதனால் தமக்கு உபகாரமாவதிது என விளக்காது விடுத்தனர் பண்டிதர். மந்திரச்செய்யுள் இத்தகையது என உணர்த்தப்புகுந்த ஆசிரியர் தொல்காப்பியனார்,

"நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப"

என்று சூத்திரஞ் செய்தார். இச்சூத்திர உரையிற் பேராசிரியர்,

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

என்னும் குறட்பாவை உதாரணமாகக்காட்டி விளக்கியிருத்தலைப் பண்டிதர் நோக்குவாராயின், தமது புதிய கொள்கைக்கு, அப்பாடலில் கிஞ்சித்தும் இடமில்லை என்பதை உணர வல்லுநராவர். இந்நூல் முதற்பாகம் 12-அ-ருக வது பகுதிகளைநோக்கின் தொல்காப்பியனார் கருத்து இதுவென உணர்ந்து உண்மை கடைப்பிடித்தற்கேதுவாகும்.

## நமச்சிவாயப்பதிகம்.

பின்னும் திரு. கா. பொ. இ. கூறியதாவது:-

"விறகிற் றீயினன்............ஆகிய தென்னாடுடைய சிவனைப்புலப்படுத்தும் மந்திரங்களை அவை கொண்டிருக்கவேண்டும், சம்பந்தர் கூற்றின்

படி "ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர் ஞானவிளக்கினை ஏற்றி நன்புலத்து ஏனை வழிதிறந்து ஏத்துவார்க்கு இடரான கெடுப்பன" வாயும் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பன" வாயும் அவை இருந்திருக்கலாம்" என்பதாம்.

பண்டிதர் எழுதிய இக்கூற்றும் வெறும் யூகமே. அவர் தமது யூகத்தைத் திரப்படுத்தவேண்டி ஆதரவு தேட முற்பட்டு இத்தேவாரங்களைத் தமக்குப் பிரமாணமெனச்சேர்த்துக்கொண்டதினுற்ருேம், அவருக்கு விளையும் பிரயோஜனம் அணுவளவும் இல்லை என்றறிக. தேவாரப்பதிகங்களிலேனும், மற்றுந்திருமுறைகளிலேனும், பண்டைஞான்று தமிழ் நான்மறை இருந்தது என்பதற்கும், அது அழிந்து போயிற்று என்பதற்கும் சான்று ஒன்றும் இல்லாதிருக்க, அந்தக்கற்பனை நான்மறையை நிலைநாட்டி வைத்து விட வேண்டும் என்று ஆசைப்பட்டு, மூன்று தேவாரங்களை எடுத்துக்கொண்டு, அவைவாயிலாக அந்த அழிந்துபோன மறைகள் அப்படிப்பட்டனவாயிருந்திருக்கலாம்; இப்படிப்பட்டனவாயும் இருந்திருக்கலாம் என்று ஒன்றன்மேலொன்ருகப் பற்பல யூகங்களைச் செய்துகொண்டு போகுமவரை எப்படிப்பட்டவராய் இருக்கலாம் என்று நாமும் யூகித்தல் வேண்டும்.

"ஊனினுயிர்ப்பையொடுக்கி" என்ற தமிழ் மறைக்கருத்து, திருவாதவூரடிகள் புராணத்து வரும் "மூக்குணம் புலனைந்துட னடக்கி" என்னும் செய்யுட்கருத்தோடு வைத்து உணரப்படும். ஆகவே இத்தேவாரம் அவர் கருத்தை அரண்செய்யாமை காண்க.

திருஞானசம்பந்த சுவாமிகளே தமது திருவாலவாய்ப் பதிகத்தில் "ஆகமத்தொடு மந்திரங்க ளமைந்த சங்கதம்" என்று அருளியிருப்பதனுலும், அருமறைகளும் ஆகமங்களும் ஐந்தெழுத்தும் வடமொழியெனக்கொள்ளுமாறு திருமூலதேவநாயனுர்,

ஐம்ப தெழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தா கமங்களும்
ஐம்ப தெழுத்தி னடைவை அறிந்தபின்
ஐம்ப தெழுத்தே அஞ்செழுத் தாமே
ஆதி யெழுத்தவை யைம்பதோ டொன்றென்பர்

எனத் திருவாய்மலர்ந்தருளுவதாலும்,

"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னுமை நமச்சி வாயவே."

என்ற தமிழ் மறையில் வரும் வேத நான்கு வடமொழியேயென்பது நன்கு துணியப்படும்.

இத்தேவாரத்துக்குக் கயப்பாக்கம் ஸ்ரீமத். சதாசிவச்செட்டியார்(B. A.) அவர்கள் எழுதிய விசேட உரையை ஈண்டுக் காட்டுதல் பெருநலன்றரும்.

அஃதாவது:-

"இறைவன் நாமமே நான்கு வேதங்களினும் முதல் நடு இறுதியெனும் யாண்டும் உண்மைப் பொருளாகக் கூறப்படுதலின், வேத நான்கினுமெய்ப்பொருளாதல் கூறப்பட்டது. இந்நியமம் எல்லாம் சதுர்வேததாற்பரிய சங்கிரகமுடையார் சிவதத்துவவிவேகமுடையார் திருவாக்குக்களால் பசுமரத்தாணி அறைந்தாங்குக் கூறப்பெறுமாறு கண்டறிக. வேதம்- அறிதற்குக்கருவியாயுள்ளது. நான்கு - இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்பன" என்பதாம்.

ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகட்கு உபநயனப்பருவம் எய்திற்று. அவர் பிதாவாகிய சிவபாதவிருதயர் முதலிய வைதிக சைவப் பிராமணோத்தமர்கள் அவருக்கு உபநயனம் செய்வித்தார்கள். இவ்வாறு பூணூல் தரித்தலாகிய இருபிறப்புச் சுவாமிகளுக்கு எய்தக் காட்டிய வேதவிப்பிரர்கள்; சுவாமிகள் முன்னின்று எழுதாக்கிளவியாகிச் சீடபரம்பரையாய் ஓதி உணரவரும் நான்கு வேதங்களையும் உமக்குத் தந்தோமென்று சொன்னார்கள். அவ்வாறு சொல்லிய பிராமணர்கள் அதிசயிக்குமாறு தாம் உலகமாதாவாகிய உமையம்மையாரது ஞானப்பால் உண்டபோதே அவ்வேதமுதலிய எல்லாக் கலைஞானங்களையும் ஓதாதுணர்ந்து தெரிந்துகொண்டிருக்கிற வேதபாரகரானதால், பதம் சடை கிரமம் முதலிய இலக்கணங்கள் பொருந்த எண்ணிறந்த புராதிதவேதங்களையும் அப்பிராமணர்கள் கேட்க ஓதியருளினர். இதுகேட்ட பிராமணர்கள் திடுக்கும் வியப்புமுற்றுச் சுவாமிகளைப் பரப்பிரமசொரூபியே யெனமதித்து, அவரை வணங்கித் துதித்துத் தாங்கள் முன்னரேயே கற்றிருந்த வேதங்களிலே தங்களுக்குண்டாயிருந்த ஐயப்பாடுகளையெல்லாம் கேட்டுத் தெளிந்துகொண்டார்கள். சுவாமிகள் வேதமந்திரங்களையெல்லாம் சொல்லி, அம்மந்திரங்களுக்கெல்லாந் தலையாயது, திருஐந்தெழுத்து என்று கூறி, அவ்வமையம் ஸ்ரீ பஞ்சாக்ஷரப் பதிகத்தையும் அருளிச்செய்தார்கள். பஞ்சாக்ஷரப் பதிகம் அந்தவேதப் பிராமணர்கள் முன்னிலையில் அருளப்பட்டதாகும். இதனை,

1. ஒல்லைமுறை யுபநயனப் பருவ மெய்த
வுலகிறந்த சிவஞான முணரப் பெற்றார்
தொல்லைமறை விதிச்சடங்கு மறையோர் செய்யத்
தோலொடுநூ லுங்கினர் சுரர்கள் போற்ற

2. ஒருபிறப்பு மெய்தாமை யுடையார் தம்மை
உலகியல்பி னுபநயன முறைமை யாகும்
இருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி
யெய்துவிக்கு மறைமுனிவ ரெதிரே நின்று
வருதிறத்தின் மறைநான்குந் தந்தோ மென்று
மந்திரங்கள் மொழிந்தவர்க்கு மதுர வாக்கால்
பொருவிறப்ப வோதினர் புகலி வந்த
புண்ணியனு ரெண்ணிறந்த புனித வேதம்,

என்றற் றொடக்கத்தனவாக வரும் திருவிருத்தங்களால் அறிக.

இவ்வாறு அந்தணர்குலத்தோன்றலான திருஞானசம்பந்தப்பெருமான் வேதங்களை விதந்து கூறியிருக்க, பூருபக்ஷத்தார், வேதங்களை இழித்துக் கூறுவதோடு சமயகுரவர்கள் வேதநெறியை ஏற்கவில்லை என்று வீணே வீண் வாதஞ் செய்கிறார்கள்.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திர மஞ்செ ழுத்துமே,

என்பது அப்பஞ்சாக்கரப் பதிகத்தின் இரண்டாந் திருப்பாட்டு. பஞ்சாக்கரப்பதிகம் வேதமோதிய வேதியருக்கு ஐயந்தெளிய உணர்த்தப்பட்டதாகும். இச்செய்யுளில், பஞ்சாக்ஷரமே நான்மறையானதாகவும் பிராமணர்கள் செந்தழல் ஓம்புபவர்கள் என்றும் அவர்கள் மாலைக்காலத்தில் ஜபிக்கு மந்திரம் பஞ்சாட்சரமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ பஞ்சாக்ஷரம் பூசை தியானம் செபம் முதலிய எல்லாக்காலத்திலும் ஓதப்படுவதெனினும் மாலைக்காலத்து ஔபாசனத்தில் மந்திரங்களும் அவைகட்குத் தலைமை வகித்த இதுவும் மிக்கு விளங்கித் தோன்றுதலின் ஔபாசனுக்கினியுடைய வைதிக சைவத் திருவாளராகிய மறையவருக்கு "அந்தியுண் மந்திரம் அஞ்செழுத்துமே" என்றருளியதென்க.

இங்ஙனமெல்லாம் இருப்பவும், தமிழில் நான்மறை என ஒரு நூல் இருந்து மறைந்துபோனதாகக் கூறியும், ஆரியர் வேற்று நாட்டினின்றும் வந்து நம் நாட்டை அபகரித்து, நான்கு வேதங்களையும் செய்தார் என்று மேனாட்டார் கொள்கையை வலியுறுத்திப் பேசியும் செய்யும் வாதமானது, ஏற்றுக்கொள்ளத்தக்க தன்றாம்.

நான்கு வேதங்களினுஞ் சிவபரஞ்சுடரின் திருநாமம் இருப்பதினாலன்றோ கௌணியர்குலதீபமாகிய ஆளுடையபிள்ளையார், "வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது - நாத னாம நமச்சி வாயவே" என்றருளிச்செய்தார்கள். அவ்வாறிருக்க, சிறுதெய்வங்களைப் போற்றுவதே வேதவழக்கு என்று எழுதிக்கொள்ளுவதும் அபசாரமேயாம். இன்னும் வேதநான்கும் ஆரியமாய் அக்காலத்தில் நிலைபெற்றிருந்தமையால் அன்றோ, அவ்வேதங்களை முன்னர்ப் படித்தறியாமலே உபநயனகாலத்தில் ஓதியருளிய சம்பந்த சுவாமிகள், "வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது" என்றருளியதும் என்றறிக. இன்னும், அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்" என அப்பமூர்த்திகள் அருளியதும் அக்காலத்தில் நிலைபெற்றிருந்த வேதங்களையும் அங்கங்களையுமேயாம். ஆகவே, இத்தேவாரங்களைக் கொண்டு, தமிழில் மறை இருந்ததென நாட்டுவதற்குத் திலமளவேனும், திலத்திற் பாதியளவேனும் இடமில்லை என்பது தெளிக.

இனி, உமாபதிசிவாசாரிய சுவாமிகளும் வடமொழி வேதப்பொருள் பற்றித் திருவாய்மலர்ந்தருளுவதை இங்கே எடுத்துக் காட்டுவாம்.

"......................செய்தோர் பெயராற்
சுயம்பு வென்றுல கியம்புமென் றறியினித்
தற்கிட் டலைவரைத் தான்றெழு துரைக்குஞ்
சொற்கேற் புரவல னேவ லமைச்சரை

யடிகள் மற்றெங் குடிமுழு தாண்மினென்
றேத்தி யிறைஞ்சிக் சாப்பர்க ளென்றுங்
கீச னுஞ்செயப் பேசின னன்றி
யினையவை பிறரிற் கனவிலு மிலனே
தன்னைத் துதிக்குஞ் சொன்னலங் தானுமத்
துறையுறி வாணர்க் கறைவதொன் றன்றியும்''

என்பது சங்கற்ப நிராகரணம்.

இதற்குப் பழைய உரையைத் தழுவிய தாற்பரியம் வருமாறு:-

(1) வேதமானது சுயம்புவாகிய பரமசிவனாற் றோற்றுவிக்கப்பட்டமையின் சுயம்பு எனப்படும் என்றறிக. (2) வேதம் உம்முடைய கர்த்தா சொன்னதாயின், அவர் தமக்குக் கீழ்ப்பட்ட தேவர்களைத் தாம் நமஸ்கரித்துச் சொல்லவேண்டுவது என்னையெனில்; இராஜாவினுடைய குடியாயுள்ளவர் எல்லாரும் அந்த இராஜாவைக்கண்டு, தங்கள் மேற்கருமஞ் சொல்லிக்கொள்ளமாட்டார்கள்; மந்திரி முதலாயினோரைக் கண்டு, வணங்கின் விடத்து அவருக்குண்டாகிய கருமம் அவர்களாலே தீர்க்கப்பட்டாற்போல, இறைவனும் எல்லாரும் பக்குவர்கள் அல்லாமையின், அபக்குவர்களாயுள்ளவர்கள் வழிபாடு செய்வதற்காக அந்தத் தேவர்களையும் சொல்லியருளியதாகும். இஃதொழிந்து பிறதெய்வங்களை இறைவன் நமஸ்கரித்துச் சொன்னான் என்பது, அவ்விறைவனுக்குச் சொப்பனத்திலு முண்டாகாது. (3) இனி இறைவன் தம்மைத் தாம் தோத்திரம் பண்ணுகிறது, பக்குவான்மாக்களாய் இருக்கிறவர்கள், தம்மை வழிபாடுசெய்யும் பொருட்டுச் சொல்லியருளியதேயாம்.

இங்ஙனமாகப் பூருவபக்கத்தாருக்கும் எமக்கும் பொதுநிலையமாகிய சித்தாந்தசாஸ்திரத்திலேயே, அப்பூருவபக்கத்தார் வேதங்களைப் புறக்கணித்துக் கூறுகின்ற கூற்றுக்களுக்கு விடை உமாபதிசிவாசாரியரால் உணர்த்தியருளப்பெற்றிருப்பதுகொண்டு உண்மைகடைப்பிடிக்க.

இதனால் விளங்குவதென்னையெனில், சர்வஜீவதயாபரராகிய பரமசிவனே வேதத்தை அருளிச்செய்தார் என்பதும் அவ் வேதம் பொதுநூலாதலால் சிருட்டிகர்த்தா திதிகர்த்தா இந்திரன் சந்திரன் சூரியன் அக்கினி முதலிய எல்லாப்பொருள்களையும் சிவபெருமானுடைய வியாபக ஒற்றுமைநோக்கி கன்மம் பலவகைப்படுதலின் அவ்வவர்க்குரிய பக்குவத்திற்கேற்ப முன்னர்ப் பிரமமென்றுகூறிப் பின்னர் இது பிரமமன்று, இது பிரமம் அன்று என்று மறுத்து அழிவிலாப் பரப்பிரமம் சிவபெருமானே எனச் சூக்குமமாய் உணர்த்தும் என்பதும், சர்வசங்காரகாரணனாகிய அந்தப் பரமசிவமஹாருத்திரமூர்த்தியே வேதத்தில் முடிந்த முடிபாகக் கூறிப் புகழப்பட்ட மகாதேவர் என்பதும் அறிவுறுத்தப்பெற்றவாறு கண்டுகொள்க.

## பேரியபுராணம்.

1. அருமறை முதலி னடுவினிற் கடையி லன்பர்தஞ் சிந்தையி லலர்ந்த.........திருச்சிற்றம்பலம் —தடுத்தாட்.

2. "அருமறைக—டுணிக்தவான் பொருடரும் பொருள்"
—திருஞா·புரா.

(மறைகளும் பல்லாற்றுனும் துணியநின்ற பெரும் பொருள்—சிவ பெருமான் என்பதாம்.)

3. "வேதத்தின் பொருளர்"— திருநா. தேவாரம்.

4. "அருமறையின் அகத்தானை"

ஆகவே, சிறுதெய்வங்களைப் போற்றுவதே வேதவழக்கு என்பது முதலா கிய பேச்சுக்கள் வெற்றுரையாயவாறு கண்டுகொள்க.

## சங்கநூல் வழக்கு.

மேலும் புறநானூற்றின்கண்ணே "ஒன்று புரிந்த டங்கிய விருபிறப் பாளர்—முத்தீப் புரையக் காண்டக விருந்த —கொற்ற வெண்குடைக் கொ டித்தேர் வேந்திர்" என்றும், "ஏற்ற பார்ப்பார்க் ஈர்ங்கை நிறையப்—பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து" என்றும், நன்பல கேள்வி முற்றிய வே ள்வி யந்தணர்க்கு அருங்கல நீரொடு சிதறி" என்றும், "செறுவிற் பூத்த சே யிதழ்த் தாமரை—அறுதொழி லந்தண ரறம்புரிந் தெடுத்த—தீயொடு விளங்கு நாடன்" என்றும், பெரும்பாணாற்றுப்படையில், "கேள்வி யந்தணர் அருங் கட னிறுத்த—வேள்வித் தூண தசைஇ" "வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்று மறைகாப்பாள ருறைபதி" என்றும், சிறுபாணாற்றுப்படையில், "அருமறை நாவி னந்தணர்க் காயினும்" என்றும், மதுரைக்காஞ்சியில் "ஓத லந்தணர் வேதம் பாட" என்றும் வருமவைகளினாலே வடமொழிவேதமும், அவ்வேதத்திலே கூறப்படும் முத்தீவேள்வியும், வேள்விக்கண் கொடுக்கப்ப டும் தானங்களும் ஆகிய இவற்றைத் தமிழ்மக்கள் அங்கீகரித்துள்ளார்கள் என்பது வெளியாகும். ஆதலின் அவ்வேதங்களே அவர் வழிப்பட்டொழு கிய மறையென்பது பெறப்படுகின்றது. மேலும்.

"நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
ஏம வின்றுயி லெழுத லல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியி னெழாதெம் பேரூர் துயிலே."

என்று வரும் பரிபாடற் பகுதியினால் அவ்வேதம் வைகறைக்காலத்து ஓதப் பட்டு வந்தது என்பது புலப்படுகின்றது.

"ஒன்றுபுரி கொள்கை யிருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
ஐம்பெரு வேள்வியும் செய்தொழி லோம்பு
மறுதொழி லந்தணர்."

எனச் சிலப்பதிகாரம் செப்பும். இவ்விடத்தும் அந்தணர்க்குச் சொல்லிய இருபிறப்பும் முத்தீயும் நான்மறையும் ஐவகைவேள்வியும் ஆகிய எல்லாம் வடமொழி வேதத்திலும், அதன்வழிவந்த நூல்களிலும், ஆகமங்களிலும் சொல்லப்படுவனவேயாம்.

"பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக, வடதிசைப் பெயரு மாமறை யாளன் .........வடமொழி வாசகம் செய்த நல்லேடு—கடனறி மாந்தர் கைந்நீ கொ டுக்கென" (சிலப்பதிகாரம்.) என்றவிடத்து மாமறையாளன் அருமறையாட்டி

யாகிய தன்மனைவி செய்த கொலைப்பாவங் கழுவுதற்கு வேண்டிய பொருளை முதிக்கொடுத்த ஏடு வடமொழியிலே எழுதப்பட்டதென்பதனால், அவ்வரு மறையாளரது வேதம் வடமொழியிலே உள்ளதென்பது விளங்கக்கிடக்கின்றது.

அட்டமியு மேனை யுவாவும் பதினான்கும்
அப்பூமி காப்பார்க் குறுகண்ணும் —மிக்க
நிலத்துளக்கு விண்ணதிர்ப்பு வாலாமை பார்ப்பார்
இலங்குநூல் ஓதாத நாள்.

என ஆசாரக்கோவை பார்ப்பார் வேதம் ஓதலாகாத நாளைக் குறிப்பிடுகின்றது.

இவ்வாறு தொல்காப்பிய முனிவர் காலந்தொடங்கியெழுந்த பழந்தமிழ் நூல்களில் எல்லாம் தமிழ் மக்கட்குரிய வேதமுதனூல் வடமொழியின்கண் உள்ளதேயென்று கோடற்குரிய சான்றுகள் நிறைந்துள்ளமை ஓர்க.

இனிப் பெரியபுராணத்தில்,

1. ஆங்கு நாதரைப் பணிந்து பெண்ணாகட
மணைந்தரு மறையோசை
ஓங்கு தூங்கானை மாடத்து ளமர்கின்ற......" திருஞான—புரா.

2. "வேதநாதமு மங்கல முழக்கமும் விசும்பிடை நிறைந்தோங்க
..........................................................................
கோதிலாதவர் ஞானசம் பந்தரை யெதிர்கொண்டு கொடுபுக்கார்"

3. "தொண்ட ரார்த்தனர் சுருதிக ளார்த்தன."

4. அணைந்த மாமறை முதற்கலை யகிலமு மோதா
துணர்ந்த முத்தமிழ் விரகன்வந் தானென வோத

5. வெள்ளமறை யொலிபெருகு மறுகு தோறும்......
..........எதிர்கொள் சிறப்பிற் செல்வார்

6. மறைவி ளங்குமப் பதியினில் —திருஞா—புராணம்.

7. மீதுமுழங்கு முகிலொதுங்க வேதவொலிகண் முழங்குவன
—சண்டேசு—புரா.

8. குன்றனைய மாளிகைக்க டொறுங்குலவும் வேதிகைகள்
ஒன்றியமூ வாயிரமங் குளவென்பா ராகுதிகள்-திருநாளைப்போ-புரா

9. வான ளிப்பன மறையவர் வேள்வியின் வளர்தீ
[உருத்திரபசுபதி—புரா. வேள்வி மழைக்குக்காரணம் என்று காட்டப் பட்டது.]

10. பாடுவ சாமம்—பன்மறைக் கிடையுடன் பயிற்றுவபலபூவை
—திருநீலநக்க.

11. யூபவேள்விப்—பெரும்பெயர்ச் சாலைதோறும் பிறங்கியபுகையோ.

12. வேதமுங் கிடையு மெங்கும் —திருநா—சிறப்பு,

என்பனவாதியாய் வரும் எண்ணிறந்த பிரமாணங்களைக் கொண்டு நோக்குமிடத்து, ஆலயமுதலிய இடங்களில், அக்காலங்களிலே நன்றாக 'நான்மறை

யோதப்பட்டு வந்ததென்பதும், வேதவிதிப்படி யாகங்கள் நடைபெற்றுவந்தன என்பதும், அந்நிகழ்ச்சிகளையெல்லாம் அருண்மொழித்தேவர் அவ்வப் புராணங்களில் அருள்வழி நின்று அமைத்துள்ளார் என்பதும் அறியப்படுகின்றன. அக்காலத்துக்குப்பின் இன்னும் கடல்பெருகித் தமிழ்நாட்டுநூல்களை அள்ளிக்கொள்ளவில்லை யாகலின் இன்றும் வழங்கும் இருக்கு முதலிய நான்மறையே அவர்க்கும் எமக்குமுரிய வேதமாம்.

இனிச் சண்டேசுரநாயனார் புராணத்திலே, "ஐந்து வருட மவர்க்கணைய வங்கமாறு முடனிறைந்த- சந்தமறைக ளுட்படமுன் றலைவர்மொழிந்த வாகமங்கள்- முன்னைத யறிவின்றொடர்ச்சியினான் முகைத்தமலரின் வாசம்போற்-சிந்தை மலர வுடன்மலருஞ் செவ்வியுணர்வு சிறந்ததால்" எனவும்,

திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணத்தில்,

"எண்ணி லாகம மியம்பிய விறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை" எனவும்,

"நீமொழிந்தவா கமத்தி னியல்பினாலுனை யருச்சனை
புரியப்—பொங்குகின்றதென் னாசை" எனவும்,

"உம்பர் நாயகர் பூசனைக் கவர்தா முரைத்த
வாகமத் துண்மையே தலைநின்று" எனவும்,

வருவனவற்றால், சிவபிரானாரே மறைகளையும் ஆகமங்களையும் மொழிந்தருளினார் என்பதும், அவ்விறைவன் அருளிய ஆகமத்துண்மை வழிநின்றே சிவார்ச்சனை செய்யவேண்டுமென்பதும் உணர்த்தப்பெற்றிருத்தல் கண்டுகொள்க.

இவ்வாறெல்லாம் எம் சமயத்தை வளர்த்தருளிய திருஞானசம்பந்த சுவாமிகள் முதல் உமாபதிசிவம் ஈறாகவுள்ள ஒப்புயர்வில்லாப் பேருளாளரும், தமிழ்மொழியைத் தாய்போற் போற்றிவளர்த்த மூதறிஞரும் கூறியிருக்க, தொன்றுதொட்டு வந்த ஆன்றோர் ஆட்சிக்கும் உண்மையறிவுநூல் வழக்குக்கும் மாறாகத் துணிந்து, வடமொழிவேதங்களையும் ஆகமங்களையும் எங்களுடையன அல்ல என்று சொல்லித்தூஷித்தல் பெரும் மறச்செயலேயாகும்.

## தேவார திருவாசகங்களே தமிழ் மறைகள்.

மேலும் அவர் கூறியவற்றை விசாரிப்பாம். "அப்பர் சம்பந்தர் சுந்தரர் முதலிய சமயத் தலைவர்கள் தமிழ்நான்மறைகளின் கொள்கைகளைத் தழுவியே தேவாரங்களைப் பாடினர்" என்றார்.

இக்கூற்று விசித்திரமானது. தேவாரத் திருமுறையை அருளிய முதல்வர்கள் மூவராயிருக்க, முதலிய என்ற பதத்தை வீணே பிரயோகித்துவிட்டார். அதனைக் கைபிழைபாட்டினால் நேர்ந்த தவறெனக்கொண்டு, அவருரையின் எஞ்சிய பகுதியாகிய "தமிழ் நான்மறைகளின் கொள்கைகளைத் தழுவியே தேவாரங்கள் பாடினர்" என்பதனை ஆராய்வாம்.

தமிழில் மறைகள் ஆகமங்கள் இருந்தன என்றலும், அவற்றின் கொள்கைகளைத் தழுவியே தேவாரங்கள் பாடப்பட்டன என்றலும், தமிழில் நான்மறையிருந்தன என்று தேவாரமுதலியவற்றுட் கூறியிருப்பதா

கச் சொல்லுதலும், "முயலுக்குக் கொம்பு மூன்று முழம்" என்பதுபோல வெற்றுரையேயாம். சங்கப்புலவர்கள் சமயாசாரியர்கள், சந்தானசாரியர்கள், திருவாவடுதுறை ஆதீன சந்நிதானங்கள், அவர்கள் சீடர்கள், தருமபுர ஆதீன சந்நிதானங்கள், அவர்கள் சீடர்கள், மற்றை ஆதீன சந்நிதானங்கள், அவர்கள் சீடர்கள், கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள், சீலகண்ட சிவாசாரியர், சித்தாந்த நூலாசிரியர்கள் அவற்றின் உரையாசிரியர்கள் என்றித் தொடக்கத்த பெரியார்களும், தமிழாராய்ச்சியிற் புகுந்திருந்த புறமதக் கல்விச்செல்வரும் இதுகாறும் தமிழில் நான்மறைகளும் ஆகமங்களும் இருந்தனவென்று கூறினரல்லர். புறச்சமயத்தவர்கள் தங்கள் சமயங்களை நிறுவ எடுத்தாண்ட பிரமாணங்கள் ஆரிய வேதப்பிரமாணங்களே! பாஞ்சராத்திரிகள் முதலியோரும் இன்றும் ஆரிய வேதப் பிரமாணங்களையே எடுத்தாளுதல் கண்கூடு. சித்தியார்பரபக்கம் முதலியவற்றாலும் அதனை அறியலாம். தம்மனம்போனபடி நூல்களுக்கு அர்த்தஞ்செய்தல் அழகன்று.

சேக்கிழார் முனிவர் திருஞானசம்பந்தமூர்த்திகள் புராணத்தில்,

"எண்ணின்மறை யொலிபெருக வெவ்வுயிருங் குதூகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமியழு தருளினார்"

என்றருளுகின்றார். இங்கே 'புண்ணியக் கன்று' என்றது திருஞானசம்பந்தப்பிள்ளையாரை. பிள்ளையார் "மறைபெருக அழுதருளினார்" என்னாது "மறையொலிபெருக" அழுதருளினார் என்று ஆசிரியர் கூறியது என்னையெனில்; மறையானது ஒலியும் பொருளுமாகிய அளவில் தமிழ்மொழியில் வெளிவருவது என்ற கருத்தைக் கொண்டென்ப. "மறையொலிபெருகுதலா"வது, வேதஸாரமாகிய தேவாரங்கள் உலகிற்பரவுதலாம். இதனைத் திராவிடமாபாடியகருத்தர் ஆகிய சிவஞானமுனிவர், "பரசமய கோளரியை...... தேயமெலாங்—குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும் கவுணியர்தங் குல தீபத்தை" என விரித்துரைத்தல் காண்க.

இன்னும் சேக்கிழார்பெருமான் திருஞானசம்பந்தமூர்த்திகள் புராணத்தில்,

1. "தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார்" என்றும்,
2. "விருப்புடன் பாடலிசைத்தார் வேதந்தமிழால் விரித்தார்" என்றும்,
3. "எழுதுமா மறையாம் பதிகத்திசை முழுதும் பாடி" என்றும்

செப்பியருளுகின்றார்கள். இவற்றின் பொருள்நுட்பத்தை முறையே ஆராயின், இறைவன் அருளிய வேதத்தையே தமிழில் அருளியது என்பதும், ஆளுடையபிள்ளையாரும் கண்டும் கொண்டும் கூறிய வேதம் தமிழ்மொழியில் உள்ளதன்று என்பதும், இறைவர் அருளியமறை எழுதாக்கிளவி எனப்படும், ஆனல் அதுவே பிள்ளையார் வாக்கில் பதிகமாக வெளிப்படும்போது எழுதும் மறையாயிற்று என்பதும் பெறப்பட்டன. வேதம் எழுதாமறை எனப்படுதலை,

"ஏனை நிலமு மெழுதா மறையீறுங்
கோனெடு தன்னையுங் காணுங் குணத்தரே"

என்னுந் திருமந்திரத்தாலும், "எழுதாத மறையளித்த வெழுத்தறியும் பெருமானை" என்னும் பெரியபுராணத்தாலும் அறியலாம்.

மேலும், அருண்மொழித்தேவர் திருநாவுக்கரசுநாயனார் புராணத்தில், "வண்டமிழா லெழுதுமறை மொழிந்தபிரான் திருப்புகலி மருங்கு சார்ந்தார்" என்றருளுவர்.

இதற்கு சிவக்கவிமணி C. K. சு. முதலியார் அவர்கள் எழுதிய குறிப்பு:-

"இறைவன் திருவாக்காகிய வேதங்கள் என்னும் எழுதாமறைகளின் பொருள்களை எழுதும் மறையாகத்தமிழால் அருளியவர். நான்மறை எனப் படுவன தமிழிலே முன் இருந்தன என்பது புதிய கோள்கை. அஃது ஆசிரியர் முதலிய முன்னோர் கருத்தன்றென்பது" என்பதாம். இவ்வுண் மையைச் சேக்கிழார் புராணத் திருவிருத்தமுதலியவற்றாலும் விளக்கினும் ஆண்டுக்காண்க.

இன்னும், மாணிக்கவாசக சுவாமிகள் சரிதம் கூறும் திருவாதவூரடி கள் புராணத்தில்,

செந்தமிழில் வந்தசிவ ஞானவமு துண்டா
மந்தமி லருட்கடலை யாண்டருள வேண்டி

எனச் சொல்லப்பட்டுள்ளது. இதற்கு, ஸ்ரீமத். உரையாசிரியர் ம. க. வேற் பிள்ளை அவர்கள் "தம்மினின்றும் ஆரியமொழி வடிவில் வெளிவந்த சிவ ஞானமாகிய அமுதம் அத்தியற்புத அதிமதுரச் சுத்தச் செந்தமிழ்மொழிவடி வில் உண்டாகப்பெறும் கரையற்ற கிருபாசமுத்திரமாகிய திருவாதவூரடி களை அடிமைக்கொண்டருளத் திருவுள்ளங்கொண்டு" என எழுதிய பத உரையும், "தம்மால் ஆரியமொழிவடிவில் வெளிவந்த சிவஞானம் என்றது, வேதத்தின் ஞானகாண்டத்தை" என எழுதிய விசேட உரையுங்காண்க.

மேலும் திருவாதவூரடிகளைச் "சுருதி செந்தமி ழாக்கிய மொழியார்" எனவும், "பரம்பரப் பொருளா மிந்தப் பைந்தமி ழோதிவையம்-இரும்பிறப் பகலவந்து பிறந்தவர்" எனவும், கூறுவர் கடவுண்மாமுனிவர். இவற் றுக்கு முறையே "வடமொழி வேதத்தைத் தென்மொழி வேதமாக்கும் மாணிக்கவாசக சுவாமிகள்" எனவும், "உலகமானது முதனூல்க ளாகிய வேதசிவாகமங்களின் பாரம்பரியப் பொருளையுடைய இத் திருவாசகத்தைப் பாராயணஞ்செய்து அநாதியாயுள்ள பிறவிநீங்க வந்து திருவவதாரஞ்செய்த சென்மசாபல்லியராகிய திருவாதவூரடிகளது இவ் வத்தியற்புத சமாசாரங்களையெல்லாம்" என ஸ்ரீமத். ம. க. வேற்பிள்ளை ஆசிரியர் அவர்கள் மெய்யுரை கண்டனர். இவற்றைச் சமதிருஷ்டிகொண்டு நோக்குவார்க்குத் தமிழ்வேதமாகிய திருவாசகமும் வடமொழிவேத சார மேயாமென்பது நன்கு புலப்படும்.

இங்ஙனம் சேக்கிழார் சுவாமிகளும் உமாபதிசிவாசார்ய ஸ்வாமிகளும் கடவுண்மாமுனிவரும் அவ்வாறே அருணகிரிநாதரும் கூறினமையானன்றே, ஆறுமுகநாவலரும்,

"வேதத்தின் ஞானகாண்டப் பொருளைச் சிவாகமத்துக்கு மாறு
படாவண்ணம் உள்ளபடி அறிவிக்கும் தமிழ்நூல்கள் தேவாரம்
திருவாசகம் என்னும் இரண்டுமாம்"

என அறிவுறுத்தினர் என்றறிக.

இவ்வாறிருத்தலினுல், வேதங்களும் ஆகமங்களுமே முதனூல்கள் என்பதும், தேவார திருவாசகங்கள் அவற்றின் சாரமாக உதித்தன என்பதும், அவைகளே தமிழ்மறைகள் என்பதும் அசைக்கமுடியாதவாறு நாட்டப்பெற்றமை காண்க.

இக்காரணங்களைக்கொண்டு நோக்குமிடத்து, பண்டிதர் திரு. க. வேந்தனுர் "இந்த ஆரியவேதங்களின் ஞானகாண்டப்பொருளைச் சிவாகமத்துக்கு மாறுபடாவண்ணம் உள்ளபடி அறிவிக்கும் தமிழ் வேதங்கள் தேவார திருவாசகங்கள் என்று கூறுவதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா" எனப் பகிரங்கக்கடிதத்திற்கு விடுக்கும் பதிலில் எழுதியதும்,

பண்டிதர் திரு. கா. பொ. இ. அவர்கள், "சமயத்தலைவர்கள் தமிழ் நான்மறைகளின் கொள்கைகளைத் தழுவியே தேவாரங்களைப் பாடினர்" என எழுதியதும் அசப்பியமேயாம்.

பண்டைத் தமிழ்மறை யெனவோர் நூல் இருந்தது; அதன்பொருளையே நந்தமிழ்வேதமாகிய தேவார திருவாசகங்கள் நிலைநிறுத்துகின்றன என்ற கொள்கைக்கு அணுவளவும் ஆதாரம் இல்லாதிருக்கப் பண்டிதரிருவரும் தமிழ்நான்மறை என்பன இருந்தன; அவற்றின் பொருளே தேவார திருவாசகம் என்று சொல்லி மனப்பால் குடிக்கிறுர்கள்.

இனித் திருஞானசம்பந்தப் பிள்ளையார், பஞ்சாக்கரத் திருப்பதிகத்திலே "நற்றமிழ் ஞானசம் பந்த னுன்மறை—கற்றவன்" என்று தமிழையும் சம்ஸ்கிருத வேதத்தையும் சிறப்பித்து வேறு பிரித்துக் கூறியிருக்கின்றுர். இன்னும், "அந்தணர் வேள்வியு மருமறைத் துழனியுஞ்—செந்தமிழ்க் கீதமும்" என்று மழபாடித் தேவாரத்தில் அருளுகின்றுர். இவ்விடத்து முன்னையது செந்தமிழல்லாத வடமொழி வேதமுழக்கமாதல் தெளியப்படும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் புராணத்திலும் இவ்வாறே "மறை முழங்கின; தழங்கின வண்டமிழ்" எனக் கூறப்பட்டுள்ளதும் கண்டுகொள்க. மேலும், திருவிற்கோலப் பதிகத்தில், "தொகுத்தவ னருமறை அங்கம் ஆகமம் வகுத்தவன்" என்று காணப்படுகின்றது. இவற்றிலிருந்து விளங்குவது என்னையெனில்; நான்மறை அல்லது அருமறை எனக் கூறியது திருஞானசம்பந்த சுவாமிகள் காலத்திலே ஓதப்பெற்றனவும், அவர் காலத்துக்கு முன்பே ஓதப்பெற்றனவும், அவர் காலத்துக்குப் பின் இன்றுகாறும் ஓதப்பட்டு வருவனவுமாகிய ஆரிய வேதங்களேயாம் என்பதும், அக்காலத்தில் வேதங்கள் மிகுதியாக ஓதப்பட்டு வந்தன என்பதும், மறையைச் சூத்திரமாகவும், ஆகமத்தை அதற்குப் பாஷ்யமாகவும் முழுமுதற் கடவுளாகிய முக்கண் இறைவனே அருளிச்செய்தனன் என்பதும் புலனுகின்றன.

திருமுறை வகுத்த ஆதிசைவராகிய நம்பியாண்டார் நம்பிகள், கௌணியர் குலதீபமாகிய சம்பந்தப் பிள்ளையாரைத் தோத்திரிக்கும் இடங்களில்,

"வளமலி தமிழிசை வடகலை மறைவல" என்றும்,

"பன்மறையோர் செய்தொழிலும் பரமசிவா கமவிதியும்
நன்மறையின் விதிமுழுது மொழிவின்றி நவின்றனையே"
என்றும்,

"வகைதகு முத்தமி ழாகரன் மறைபயி றிப்பிய வாசகன்"

என்றும்,

"பலமலிதருந் தமிழின் வடகலை விடங்கன்" என்றும்

புகழ்ந்து போற்றுகின்றார்கள். பதினோராந் திருமுறைக்கணுள்ள இவ்வாக்கியங்களினால், "காழி நாட்டுக் கவுணியர் குலத்தை — வாழத்தோன்றிய வண்டமிழ் விரக" ராகிய பிள்ளையாரது தமிழ்வேதத்தையும், சங்கத (சம்ஸ்கிருத) பாஷைக்கணுள்ள சதுர்வேதங்களையும் இருபத்தெட்டுத் திவ்விய ஆகமங்களையும் வேறுபிரித்து விளக்கியிருப்பதும் காணலாம்; வடமொழி தென்மொழி ஆகிய இருபாஷைகளையும் போற்றியிருப்பதும் காணலாம்; காழிப்பிரானாகிய பிள்ளையாருடைய வாக்கினின்றும் வேதநான்கின் விதிகள் முழுவதும் விசேஷ சுருதியாகிய சிவாகம விதிகள் முழுவதும் ஒழிவின்றி வெளிப்பட்டுக்கொண்டிருந்தன என்று போற்றப்படுவதையும் காணலாம்.

இங்கே பரமசிவாகமம் என்றது, திருஞானசம்பந்த சுவாமிகள் காலத்தில் அனுஷ்டிப்பில் இருந்தனவும், அச்சுவாமிகட்குமுன் அனுசரிக்கப்பெற்று இருந்தனவும், அவர்கள் காலத்துக்குப் பின்பு இதுகாறும் நிகழ்ந்து வருவனவுமாகிய வடமொழிக்கணுள்ள ஸ்ரீமத் காமிகாதி ஆகமங்களேயாம்.

நம்பியாண்டார் நம்பி.

ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை.

— உண்மை

"மறைபயில்வார் மன்னு வியாகரணக் கேள்வித்
துறைபயில்வார் தொன்னூல் பயில்வார்—முறைமையினால்
ஆகமங்கள் கேட்பார்"

"வேத வொலியும் விழா வொலியும்"

இவ்வாற்றால் நம்பியாண்டார் நம்பிகள், "கவுணியர் குலதீப" ராகிய ஆளுடைய பிள்ளையாரைப் போற்றுமுகத்தால் வேதங்களையும், சிவாகமங்களையும், தேவாரத் திருநெறித் தமிழ்மறைகளையும் பிரமாண நூல்கள் என்று காட்டி, அவற்றின் அதியுன்னதமான மகிமையை நிலைநிறுத்தியிருப்பதும் கண்டு தெளிக.

இங்ஙனமிருத்தலால், "ஆகமசீலர்க் கருணல்கும் பெம்மான்" என்பதாதியாகத் தேவாரத்திலும், 'மறையீறறியா மறையோனே" "ஆகமமாகி நின் றண்ணிப்பான் தாள்வாழ்க" எனத் திருவாசகத்திலும், "தில்லை மன்னைத் தஞ்சித்தக் கோயில் இருத்துந் திறத்தாக மிகர்க்கு" என்பதாதியாய்ப் பிற இடங்களிலும் வரும் மறை ஆகமம் என்பன வடமொழி வேதங்களையும் ஆகமங்களையுமே குறிக்கும் என்பதும், தேவார திருவாசகங்களே தமிழ் மறைகள் என்பதும் அசைக்கமுடியாதவாறு நாட்டப்பெற்றமை காண்க. இங்ஙனமெல்லாமிருப்ப, நால்வருக்குப் பிற்பட்ட காலத்திலேயே காமிகம் முதலிய ஆகமங்கள் எழுதப்பட்டன என்று கூறுவது நஞ் சைவ நாற்றணிபுக்கு மாறுபட்டெழுந்த பொருந்தாக் கூற்றேயாம் என்று தூரத் திற்றள்ளப்படும்.

## தாயுமான சுவாமிகள்.

தாயுமானவரின் சமரச விளக்கத்தை வரவேற்று மகிழ்வதே சைவம் என்றார் சைவப்புலவர் க. வேந்தனார்.

"மறையாதி நூலையும் வகுத்து சைவமுத லாமளவில் சமயமும் வகுத்து"

"ஆரண மார்க்கத் தாகம வாசி
அற்புதமாய் நடந்தருளும்......"

என்று தாயுமான சுவாமிகள் கூறுவர். இங்கே ஆரணமும் ஆகமமும் எந்த மொழியில் உள்ளன என்பதை ஆராய்வாம்.

வேத முடனாகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைக ளெல்லாம்
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவாக வெடுத்து ரைக்கு
மோதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுபணு ஞான மாகும்

எனச் சுவாமிகள் வடமொழி வேதத்திலும் ஆகமத்திலும் புராணங்களிலும் எடுத்துக் கூறப்படும் துவிதம் அத்துவிதம் என்பவற்றின் பொருளாராய்ச்சி செய்யுமுகத்தால், அவர் வடமொழிக்கணுள்ள வேதாகம புராண முதலிய நூல்களை உடம்பட்டவர் என்பது நன்கு விளங்கும். சுவாமிகள் வடமொழி நூல்களிலும் தென்மொழி நூல்களிலும் அவ்விருமொழிச் சைவநூல்களிலும் வல்லுநர் என்பது அவர் சரித்திரத்தாலும் உணரப்படும். இதனை வேந்தனார் வரவேற்று மகிழ்வாரா? புறக்கணித்துச் சீறுவாரா? ஆரியமும் தமிழும் நமக்குரிமையான மொழிகளாதலினாலன்றோ, தத்துவப் பிரகாச சுவாமிகளும் தமது தத்துவப் பிரகாசத்தில்:—

ஓரிலக்க மாகமத்திற் படித்துப் பல்கலைக
ளுணர்ந்து சரியாதி நான்குணர் வுடையனாகி
யாரியச் சொற்றமிழ் நூல்கண்மிக வுணர்ந்துகலைகள்
.............................................................
பரமன்றீக் கைக்குரிய குருவாக்கப் படுமே.

எனச் செப்பியருளினார் என்றுணர்க. இங்ஙனமாகச், சில தனித் தமிழன்பர்கள் ஆரியம் வேண்டாம் அதிலுள்ள நூல்கள் வேண்டாம் ஆரியம் மாசுபடிந்தது என்று கூறி வடமொழியை அழித்துவிடக் கங்கணம் பூண்டு விட்டதாகப் பிறர் நினைக்கும்படி நடிக்கின்றனர். வடமொழி எல்லைப் பரப்பில் அடங்காது, எங்கும் வியாபித்து, தமிழோடிணைபிரியாது, ஒரு தந்தைக்குப் பிறந்த இரு சேயெனத் துலங்குவதால் அது அழிவுறுதென்பது அறிக. சில தான்தோன்றிகள் தமிழைத் தூஷித்தாரெனில்; அதற்காக ஆரியத்தை இகழ முற்படுவது அறிவுடைமை ஆகாது.

மகாமகோபாத்யாய முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம் என்றநூலில் வடமொழி என்னும் தலைப்பின்கீழ்க் கூறுவதாவது:—

"வடமொழியானது வேதாகம புராணேதிகாச தருமசாத்திரங்களையும், கணிதம், தருக்கம், வைத்தியம் முதலிய நூல்களையும் தன்னுட்

கொண்டிருத்தலாலும், நமக்குரிய கிரியைகளில் உபயோகப்படக் கூடிய மந்திரங்களெல்லாம் தன்மயமாக இருத்தலாலும் பூகோள ககோள நூல்களெல்லாம் தன்பால் விரிந்து கிடத்தலாலும் அதனை நம்கலா சாலையிற் கற்பித்தல் அவசியமென்பது சொல்லாமலே அமையும். ஆனால், இக்காலத்திற் கற்றுணர்ந்த அந்தணர்களன்றி இப்பக்கத்திலுள்ள மற்றை யோரெல்லாம் வடமொழிபயிறல் தங்கள் மரபினர்க்கேயன்றி,வனையோர்க்கு உரித்தன்று என்று கூறியும், பிறர் வடசொல் ஒன்றைத் தம்முன்னர்க் கூறுவாராயின் அது செவிக்கு விடம்போல்வதென்று கருதியுந் திரிகின் றனர்” என்பதேயாம்.

## அருணகிரிநாதசுவாமிகள்

“வாக்கிற்கு அருணகிரி” என்று ஆன்றோர்களாற் பாராட்டப்பெறும் அருணகிரிநாத சுவாமிகள் “முத்தமிழால் வைதாரையு மங்கு வாழவைப் போன்” என்று அருளிய கந்தர் அலங்காரப் பாடற்பகுதியைக் காட்டினார் பண்டிதர் கா. பொ. இ.

சுவாமிகள் தமிழின் அருமையும் பெருமையுந் தோன்றப் பாடிய பாடல் கள் இதுவொன்றேயன்றி,

1. ஏழி சைத்தமி ழிற்பய னுற்றவெ
ளுவ லுற்றபடி யிற்பயி லுத்தமன்

2. தெள்ளு தமிழ்பாடத் தெளிவோனே

என்பன ஆதியாய் இன்னும் பற்பல உண்டென்றும், வடமொழிப்பகை கொண்டு அருமறை ஆகமங்களைப் புறக்கணித்து, அவற்றின் கொள்கைகளை யெல்லாம் “மண்வெட்டி ஆழப்புதைக்க வேண்டும்” என்பதுபோன்ற கருத்து அவருக்கு உண்டென்று எண்ணுதற்குச் சிறிதேனும் அவர் வாக்கில் இடமில்லை என்றும் அறிவுறுத்துகின்றோம்.

வேதா கமச்சித்ர வேலாயுதன்

என அருணகிரியார் அலங்காரத்திற் கூறுவர். இது ஆரணங்களையும் ஆகமங் களையும் தேவர்கட்கும் இருடிகட்கும் உணர்த்தியவர் அறுமுகத் தெய்வம் என்பதை விளக்கும்.

இருக்கு மந்திர மொழிவகை முனிபெற
உரைத்த சம்ப்ரம சரவண பவகுக

எனத் திருப்பரங்கிரித் திருப்புகழிற் கூறுகின்றார். இது, இருக்கு (வேத) மந்திரப்பொருளை அகத்திய மஹாமுனிவர்பெற அருளியமையைக் குறிப் பிடுகின்றது.

காண வாகம வேதபு
ராண நூல்பல வோதிய
கார ணகரு ணகர முருகோனே

எனத் திருப்போரூர்த் திருப்புகழிற் கூறுகின்றார். இதனால், வடமொழி வேதங்களையும் ஆகமங்களையும் அருளியவர் அறுமுகக் கடவுள் என்பது போதரும். மேலும்,

இழுக்கா லெகினைந்து
துதிப்பார் நாவினெஞ்சி
லிருப்பா யானைதங்கு மணிமார்பா

என்றருளுவர். இது வேதமந்திரங்கொண்டு துதிப்பவருடைய நாவிலும் நெஞ்சிலும் வீற்றிருந்தருளுவர். முருகவேள் என்பதை உணர்த்தும்.

ஆரணமு ழங்கின்ற
வாயிரம டந்தவங்க
ளாகுதியி டங்கள்பொங்கு நெடுவீதி

எனச் சோலைமலைத் திருப்புகழில் வீதியை வருணிக்கிருர். இது வேதவேள்விகள் நடைபெற்றமையைக் குறிக்கிறது. இன்னும்,

மாமறை முழங்கு சீபுருட மங்கை
மாநகர மர்ந்த பெருமாளே.

என்பர், இத்திருப்புகழ்ப் பாடல்கள் அவை அருளிச்செய்யப்பட்ட காலத்தில், ஆரியவேதம் ஓதப்பட்டு வந்தமையை விளக்குகின்றது.

அனைத்து லோகமும் வேதாக மங்களும்
மதித்த சேவகன்

என்பதனுல், வேதாகமங்கள் இறைவன் புகழையே பேசும் என்பதும், அவற்றின்படியே கர்ஷணம், பிரதிஷ்டை முதலியவை செய்யப்படவேண்டியன என்புதும் அறியப்படுகின்றன.

ஆழியிற் றுயில்வோனு மாமலர்ப் பிரமாவு
மாகமப் பொருளோரும் அனைவோரும்
வாழுமுத் தரமேரூர் மேவி

என்பதனுல் அத்தலத்தில் ஆகமவிற்பன்னர் பலர் இருந்தமை சொல்லப்படுகின்றது.

இவ்விசாரத்தால், சுப்பிரமணியப் பெருமான் வேதாகமங்களை அகத்தியருக்கு உபதேசித்தருளிய பரமாசாரியர் என்பதும், அம்முதனூல்கள் இறைவன் புகழைக் கூறும்என்பதும், அவற்றையோதுவோருக்கு இறைவன் கிருபைபாலித்தருளுவன் என்பதும் திருப்புகழ் அருளப்பட்ட காலத்திலும் அக்காலத்துக்கு முன்னும் வழங்கிய வேதமும் ஆகமமும் ஆரியமே என்பதும், சுவாமிகள் போற்றியவை அவ்வாரியத்துள்ள வேதாகமங்களே என்பதும் நன்கு விளங்குகின்றன.

இங்ஙனமாகவும், "ஆகமங்கள் எங்களுக்கு வேண்டாம்" "ஆரிய மந்திரங்கள் எங்களுக்கு வேண்டாம்" "ஆரியரின் அநியாய ஆகமங்கள்," "ஆரியரின் காமிகம் முதலான ஆகம வழக்குக்கள்" என்றெல்லாம் தமது வாயையே பிரமாணமாக நினைத்து, அருணகிரியார் தாயுமானவர் முதலிய அருட்செல்வர்கட்கு மாறுபட்டு எழுதிய பெரும் பொய்களெல்லாம் தூரம் போய்த் துச்சமாயின.

**கச்சியப்பசிவாசாரியர்.**

சுப்பிரமணிய தொண்டராகிய கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்த அத்தியற்புத அதிமதுர திவ்விய வாக்காகிய கந்தபுராணமும், சிவ பிரானே வேதாகமங்களுக்குக் கர்த்தா என்றும், அவ்விறைவனது இயற்கை கள் அனைத்தையும் அவ்வேதாகமங்களே செப்புமென்றும் சொல்லும் அது,

ஏற்றம தாகிய மறைக்கும் யாமுனஞ்
சாற்றிய வாகமந் தனக்கு மாங்கது
வீற்றுற வருவது மன்று மேன்மையா
லாற்றவு நமதிய லுறையு நீரதே. எனவும்,

ஆனதன் னியற்கைக ளனைத்துங் கண்ணுதல்
வானவ ருகம மறையின் வாய்மையான்
மேனிகழ் தொகைவகை விரிய தாகவே
தானருள் புரிந்தனன் றலைவி கேட்கவே.

எனவும் வரும் செய்யுட்களானும் பிற செய்யுட்களானும் உணரப்படும்.

இச்சிவாகம நெறிபற்றியே சிவாலய நித்தியபூசையும், பிரதிஷ்டையும் உற்சவமும் பிராயச்சித்த முதலியனவும் செய்யப்படவேண்டும் என்பது, பெரியபுராண முதலிய நூலாதாரவுகொண்டு நிறுவினும். அதனைக் கந்த புராணங்கொண்டு ஆராய்வாம்.

சுப்பிரமணியக் கடவுள் சிவபெருமானைத் திருச்சேய்ஞ்ஞூரிலும் திருச்செந்தூரிலும் செருத்தணி மலையிலும் பூசைசெய்தாரென்று கந்த புராணம் அறிவிக்கின்றது. கந்தசுவாமி எந்தநூல் விதிப்படி செய்தார் எனில்; அதற்கு விடையும் அங்கேயே உள்ளதென்றறிக. கந்தபுராணத்துக் குமாரபுரிப்படலத்திலே;

அவ்வக் காலையி லாறுமா முகனுடை யடிகள்
தெய்வக் கம்மியற் கொண்டொரு சினகர மியற்றிச்
சைவத் தந்திர விதியுளி நாடியே தாதை
எவ்வெக் காலமு நிலைத்ததோ ருருவு செய்திட்டான். எனவும்,

மீட்சிப்பலத்திலே,

முழுதொருங் குணர்ந்திடு முருகன் யாவருந்
தொழுதகு மிறைவனுற் றொடர்பு நாடியே
விழுமிய கண்ணுதல் விமலன் றுண்மலர்
வழிபடல் புரிந்தனன் மனங்கொள் காதலால். எனவும்,

வள்ளியம்மை திருமணப்படலத்திலே,

இவ்வரை யொருசார் தன்னி லிராறுதோ ளுடைய வெந்தை
மைவிழி யணங்குந் தானும் மாலய னுணரா வள்ளல்
ஐவகை யுருவி லொன்றை யாகம விதியா லுய்த்து
மெய்வழி பாடு செய்து வேண்டியாங் கருளும் பெற்றுன்.

எனவும் வரும் பாட்டுக்களினாலே, சுப்பிரமணியப்பெருமான் சிவபூசை சிவாகமவிதிப்படி செய்தாரென்று துணியப்படும். கந்தசுவாமிக்குப் பூசை திருவிழா முதலியவை குமாரதந்திரவிதிப்படி செய்யவேண்டும் என்பது,

எந்தையுமை தேர்ந்திட வியம்பிய குமார
தந்திர விதிப்படி தவாதறு முகற்கு
முந்திய குடங்கர்முதல் மூவகை யிடத்தும்
புந்திமகிழ் பூசனை புரிந்தனர் பரிந்தே.

கூஉாரதஞுவஐத்ா ஜெவஜெவஉவஉஜயநு।

என்பதினாலே துணியப்படும். வேத நெறியையிகழ்ந்து சிவபெருமானை யாகாதிபதியாகக் கொள்ளாது மகமியற்றிச் சிவாபராதமெய்திய தக்கன், காசியில் ஆயிரம் ஆண்டு ஆகமவிதிப்படி அருச்சித்தான் என்றும் கந்த புராணம் கூறும். இவ்வாறு வருவன பிறவுமுள.

இந்த ஏதுக்களினாலே பரதகண்டத்திலே தமிழ்நாடுட்பட்ட எல்லா நாடுகளிலும் அமலனருளிய அருணூலாகிய ஆகம விதிவழியே ஆன்மார்த்த பூசைகளும் பரார்த்த வழிபாடுகளும் நடைபெற்றன என்பது அறியப்படு கின்றது. இன்றும் அவ்வாறே நடைபெற்று வருவது பிரத்தியக்ஷம்.

"சுத்த வாதுள முதலிய தந்திரத் தொகுதி
யுய்த்து ணர்ந்திடு நீரரே யொருசிறி துணர்வார்"

என்பது, கந்தபுராணத்து அமைச்சியற் படலத்திலே சிங்கமுகாசுரன் கூறிய பொருளையுடைய பாடல். இங்கே, சுத்த வாதுளம் என வருவதுகொண்டு, அந்த ஆகமம் ஆரியமொழிக்கண் உள்ளதென்பது தெளிவு. இன்னும், கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், சூரபதுமனது புத்திரனாகிய இரணியன் என்பானைப் பற்றிக் கூறும் வழி,

"ஆயிரம றையுணர்ந் தான்ற கேள்வியான்"

என்றனுகின்றார்கள். இதனால் வடமொழி வேதங்களும் ஆகமங்களும் சூரபன்மன் காலத்திலேயே வழக்கிலிருந்தன என்பது ஐயமறத் துணியப் படுகின்றது.

## கற்பங்கள்

இனிச் சூரசங்கார காலத்தை ஆராயின், அது தற்புருஷகற்பத்தில் என்று நூலறிவாளர் நிச்சயிக்கின்றார்கள். அனந்தரம் எண்ணற்ற கற்பங்கள் கழிந்து இந்த நிகழ்காலத்தில் சுவேதவராக கற்பம் நடக்கின்றது. ஒரு கற்பத்துக்கு மனுஷ வருஷம் நானூற்று முப்பத்திரண்டுகோடி. இக்கால வரையறை ஆகம புராணேதிகாச ஆதாரவுபெற்றதென்றறிக.

ஆரியர் மத்திய ஆசியாவிலிருந்து முநன்முதற் பஞ்சாப் தேசத்திற் புகுந்தது ௩௫௦௦ ஆண்டுகட்குமுன் என்றும், அதன்பிறகுதான் நான்கு வேதங்களும் இயற்றப்பெற்றன என்றும், உலகே சிருஷ்டிக்கப்பெற்று ௬௦௦௦ ஆண்டுகட்குமுன் என்றும்கூவும் மேனாட்டுஆராய்ச்சியைப்பின்பற்று வோருக்குச் சமயசாஸ்திரக் கண்கொண்டு பேசப்படும் யுகம்—மனுவந்தரம் -கற்பம் முதலிய காலப்பிரமாணமெல்லாம் வெறும் கட்டுக்கதைகளாகவும், பொருளற்ற வெற்றுரைகளாகவும் தோன்றக்கூடும். பூருவ பக்ஷியார் எமக்கும் தமக்கும் பொதுநிலையமாகிய தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகள் சங்கநூல்கள் முதலியவற்றை ஊன்றி ஆராய்வாராயின் கற்பம்

முதலிய கால அளவைகள் எல்லாம் பொருணிறைந்த மெய்யுரைகளாகத் தோற்றும் என்பதிற் சந்தேகம் இல்லை.

ஊழிகடோறும் பிரளயவெள்ளத்தழுந்தாது இருத்தலும், அதன்மேல் வளர்ந்தோங்குதலும் அழியாதிருத்தலுமாதியாய மஹாமேன்மைஉடையது ஸ்ரீகைலாசம் என்பது உண்மைநூற்றுணிபு.

"ஊழிதொ றூழிமுற்று முயர்பொன் னெடித்தான்மலை"

என்ற நம்பிகள் தேவாரம் இக்கருத்தை வலியுறுத்தும். இத்தேவாரப்பகுதியால் ஊழிகள் பல உண்டென்று நிச்சயமாகின்றது. "ஊழிமுடிவி லுயர்ந்த வெள்ளத் தோங்கிய காழி யுயர்பதியில்" என்பது பெரியபுராணம்.

இன்னும்,

"பசும்பொ னுலகமு மண்ணும் பாழ்பட
விசும்பி னூழி யூழூழ் செல்லக்
கருவளர் வானத் திசையிற் றோன்றி
யுருவறி வாரா வொன்ற னூழியும்
முந்துவளி கிளர்ந்த வூழு மூழியுஞ்
செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
தன்பெய றலைஇய வூழியு மவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கி யார்தரு
மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கு
முள்ளீ டாகிய விருநிலத் தூழியு
நெய்தலுங் குவளையு மாம்பலுஞ் சங்கமு
மையில் கமலமும் வெள்ளமு நுதலிய
செய்குறி யீட்டங் கழிப்பிய வழிமுறை
கேழ ரிகழ்வரக் கோலமொடு பெயரிய
வூழி யொருவினை யுணர்த்தலின் முதுமைக்
கூழி யாவரு முணரா
வாழி முதல்வநிற் பேணுதுந் தொழுது"

எனப் பழந்தமிழ் நூலாகிய பரிபாடல் கூறும்.

இதற்குப் பரிமேலழகியார் செய்த உரை.

"மண்ணுலகமும் பசும்பொனுலகமும் பாழ்பட ஒன்றற்கொன்று மாறி வருதலாகிய பழைய இயல்பினையுடைய மதியமும் ஞாயிறும் கெடுதலால் அழகிழந்த இயல்பிற்றாக விசும்புகெட்ட ஊழிகள் முறை முறையாகக் கழிந்தனவாக, தன்குணமாகிய ஒலியுடனே தோன்றி உருவுகாணப்படாத வளிமுதற் பூதங்களின் பரமாணுக்கள் வளர்கின்ற வானமாகிய முதற் பூதத்தினது ஊழியும், அவ்வானத்தினின்று எல்லாப் பொருளையுஞ் சலிப்பிக்கும் காற்றுத் தோன்றிய முறை முறையாகிய ஊழிகளும், அக்காற்றினின்றும் செந்தீத் தோன்றிய ஊழிகளும், அத்தீயினின்றுந் தோன்றிய பனியும் மழையும் பெய்த ஊழிகளும் அவற்றிற்குப்பின்பு அப்புனலினின்றுந் தோன்றுதலான் மீண்டும் வெள்ளத்திலுட்கிடந்து, முன்தோன்றிய நான்குபூதங்கட்கும்உள்ளீடாகியஇருநிலத்தினூழியும் என்றிவ்வூழிகளானே

நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும் கமலமும் வெள்ளமுமென எண் குறித்திட்ட பெயர்களது அளவிற்றாகிய காலவீட்டம் கழிந்தபின் உயிர்கள் உளவாதற் பொருட்டு அந்நிலத்தினை எடுத்த கேழற்கோலத்தால் நிகழ்வாப் பெற்ற இவ்வராககற்பம் நின்செயல்களுள் ஒருசெயலின் பெயராமதனை யுணர்த்துதலின், அச்செயல்கள் பலவற்றையுஞ் செய்கின்ற நின்முதுமைக்குள்ள கற்பங்கள்யாவரானும் அறியப்படாத" என்பதாம்.

## தற்புருஷ கற்பம்.

இச்சங்கச் செய்யுளிலிருந்து, கர்பங்கள் அநேகம் உண்டென்றும், இப்பொழுது நிகழ்வது சுவேதவராககற்பம் என்றும் வற்புறுத்தப்பட்டன. படவே, தற்புருஷகற்பமுமொன்றிருந்தது தானே பெறப்படும். அக்கற்பத்திலேயே சூரசம்ஹாரம் நிகழ்ந்தது என்றும், அக்காலத்தும் வேதாகமங்கள் வழக்கில் இருந்தன என்றும் மேற்காட்டினோம். இதனாலும் வேதங்களினதும் ஆகமங்களினதும் தொன்மை துலக்கமாகின்றது.

"முன்னை மரபின் முதுமொழி முதல்வ"

என்னும் பரிபாடலாலும், அதற்குஅநாதியாய்வருகின்ற மரபினையுடைய வேதத்துக்கு முதல்வ! எனவரும் அதன் உரையானும், "விர்நூல் அந்தணர் விழவு தொடங்க" என்னும் பரிபாடல் பதினோராம் பாடலாலும், "ஆகமங்களை யுணர்ந்த பூசகர் அத்திருவாதிரைக்குத் தெய்வமாகிய இறைவனுக்கு விழாவைத் தொடங்க," எனவரும் அதன் உரையானும், பண்டைத்தமிழ் மக்கள் வேதங்களையும் ஆகமங்களையும் கைக்கொண்டுவந்தமை பொள்ளெனப் புலப்படும். இன்னும் எட்டாம் பாடல் "மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வர்" என்றுகூறிற்று. இக்காரணங்களால் வேதங்களினதும் ஆகமங்களினதும் தொன்மை துலக்கமாகின்றது. இதுபற்றியே தொன்மறை, முதுமறை, பண்டைமறை, ஆதிநான்மறை, பழம்பாடல் என்றெல்லாம் நம்பெருமக்கள் அருளிச்செய்தார்கள். வேதமென்பதில் ஆகமமும் அடங்குமென்று வேதாந்த சூத்திரத்துக்கு நீலகண்ட சிவாசாரியர் கூறினர்.

'வேதகாலம்' 'ஆகமகாலம்' என்று கற்பனைசெய்தெழுத முனைந்து நிற்கும்வித்தகர்கள் காலாதீதராகிய அறுமுகக்கடவுள், திருச்செந்தூராதிய ஸ்தலங்களில் ஐம்முகக்கடவுளை அருச்சித்தகாலத்தையும் சூரசங்காரகாலத்தையும் ஆராய்ந்து, காலநீட்டத்தின் உண்மைதேர்ந்து, வேதாகமங்களின் பழமையை ஏற்றுக்கொள்ளுவார்களா? அன்றித் தாம் பிடித்ததே சாதிப்போம் என்னும் கருத்தால், ஆரியர் கட்டு என்று சொல்லித் தப்புவார்களா? அங்ஙனம் சொல்ல முற்படுவரேல் மேற்போந்த பரிபாடலுக்கு மாறுபட்டவராவர்.

## திரிபுரசங்காரகாலம்.

இனித் திரிபுரசங்கார சரித்திரம் புராணங்களிலும் திருமுறைகளிலும் பிரசித்தமானது. சங்கச்செய்யுட்களிலும் காணப்படுவது. முப்புரத்தவுணரொழுக்கம் கூறுமிடத்து அவர்களைச் சிவஞானமுனிவர்,

"அங்கவற் றினுமவுணர் சுருதிமிருதி யாய்ந்துணர்ந்தோர்
துங்கநிலை யாகமங்கண் முழுதுந்தேர்ந்து துகளில்லோர்"

என்றும்,

"சிவலிங்கத் தருச்சனையே செய்யுநியதிக் கடன் பூண்டார்"

என்றும் கூறுவர். இத்திரிபுரத்தவுணருடைய காலத்தை ஆராயின்; இவர்கள் இறைவனாற் சங்கரிக்கப்பட்டதன்மேல், எண்ணற்ற இந்திரர்களும், எத்தனையோ பிரமாக்களும், பர்பல விஷ்ணுக்களும் இறந்தனர் என்று திருவாசகம் அறிவிக்கின்றது.

எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுத லெந்தை கடைத்தலைமு னின்றதற்பின்
எண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களு
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் டோணோக்கம்.

இங்ஙனமிருந்தவாற்றால், கற்பம்-மனுவந்தரம் முதலிய காலப்பிரமாணங்கள் உள்பொருளே என்பதும், மிகச்சுருங்கிய கால அளவில் நம்சமயப் பிரமாண நூல்களை அளந்துவிடக்கூடாதென்பதும், அவைகள் மிகமிகப் பழமையுடையன என்பதும் சித்தித்தவாறு காண்க.

## தமிழ் ஆகமம்.

இனிப் பிறிதொன்று:- "சலம்பூ வொடுதூப மறந்தறியேன் என்று அப்பர் சிவவழிபாட்டின் முறைமை நன்கு விளக்கியுள்ளார். இதுதான் அக்காலத்தில் தமிழ் ஆகமங்காட்டிய வழிபாடாகும்" என்றார்.

தேவாரங்களிலாக, பெரியபுராணத்திலாக, வேறு யாண்டாயினுமாக, இவரது தமிழ் ஆகமங்கள் சொல்லப்பட்டிருப்பின், அவற்றை ஆவசியகம் எடுத்து வெளிப்படுத்த வேண்டியவராயிருந்தும், அப்படிச்செய்தாரல்லர். அப்பர் விளக்கியுள்ளார் என்றாரே தவிர, தாம் சிறிதேனும் விளக்கிக் காட்டினார் அல்லர். தமிழாகமமோ தான் இருந்த இடமும் தெரியாது, பல்லாண்டுகளின் முன் கடல்வாய்ப்பட்டு இறந்துபோய்விட்டதாமே! இறந்த ஆகமத்தின் பகுதிகள் இத்தனை என்று தான், அதுகேட்ட தமிழ் முனிவர் இவர் என்றுதான் அறிவித்தவரும் ஒருவருமில்லையே!

நிற்க, ".....ஒருநாட்டு மக்களிடைய உண்டான சாதிப்பிரிவுகளுக்கு அந்த நாட்டு மக்கள் பேசும் மொழியிலன்றோ பெயர் இருத்தல் வேண்டும். பகவானுக்குத் தமிழறிவில்லையா......" என்பன ஆதியாய் முழக்கஞ் செய்தார்.

பகவானும் வடமொழியாயிற்று. அவர் பேசும் நியாயப்பிரகாரம் தமிழ் மக்களுக்குப் பகவான் கொடுத்த தனித்தமிழாகமப் பெயரும் தமிழாகத் தானே இருத்தல்வேண்டும். ஆனால் ஆகமமென்னுஞ்சொல் ஆரியமாயிற்றே! இறந்தகால மஹாத்மியம் பொலிந்த தமிழ் ஆகமங்களின் பொருளைத்தான் திருமுறைகள் விளக்குகின்றன என்று பல பந்தியை நிரப்பினாரே! அத்தமிழாகமமோ இவ்வர்த்தமான காலத்தில் இல்லாதிருக்க அவற்றின் பொருளைத்தான் நமது திருமுறைகள் விளக்குகின்றன என்று, எவ்வாறு கண்டுபிடித்தார். தாம் பார்த்திராத—தம்மைச் சேர்ந்தோர் ஒருவரும் பார்த்திராத—சேராதோரும் பார்த்திராத இறந்த காலத்துப் பனுவலின் பொருளை விளக்கச் சிற்றறிவுடைய தமக்கு இத்துணை ஆற்றல் இருப்பின், பேரறிவுடைய பகவான் பெருங்கருணையினாலே ஆன்மாக்கள்பொருட்டு அனுக்கிரகித்த ஆகமத்தில், எதிர்காலத்தவதரிக்கும் திருஞானசம்

பந்தரைப்பற்றிச் சொல்லியது தப்பென்று துணிந்து கூற எப்படி முற்படலாம். சிவாகம தூஷணம் சிவனடியார் தூஷணம் பொல்லாதது! பொல்லாதது!

"அடியார் வழிபாடு வடநாட்டுக்கே புதியது" என்றார். அந்த வடநாட்டாருடையது என்று இவர் சொல்லிக்கொள்ளும் புராணமாகிய சூதசங்கிதையிலேயே "சிவபக்த அபராதமும் சிவஞானதூஷணமும் செய்பவர்க்கு ஞானம் உற்பத்தியாகாது" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

## ஆகமங்களில் சமயகுரவரைப்பற்றிய வரலாறு.

"ஞானசம்பந்தரைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகளையும் தேவாரமோதலையும் ஆகமங்களில் புகுத்திவிட்டார்கள்" என்றார்.

இது சுருதியின் உண்மைத்தன்மையை அறியாமையான் எழுந்த போலியுரையேயாம். அச்சுருதியின் மெய்ம்மையுணர்தற்குப் பல பிரமாணங்கள் உள்ளன. இறைவன் அதிபரமாப்தன் சர்வஞ்ஞன் ஆதலின், அவன் அருளிய நூலில் இறந்தகால நிகழ்ச்சிகளும் உண்டு; எதிர்கால சம்பவங்களுமுண்டு; சூக்குமமான பொருள்களுமுண்டு; மறைந்த விஷயங்களும் உண்டு; சேய்மைக்கண் உள்ளனவும் உண்டு; இப்பொருள்கள் எல்லாம் உண்மையுடையனவாயிருத்தலும் பிறவும் முதனூலுக்குரிய இலக்கணமாம். சிவஞானிகளே முக்கால நிகழ்ச்சிகளையும் அறியும் ஆற்றலுடையராயின் முழுமுதற் கடவுள் ஆன்மாக்கள்பொருட்டுச்செய்த சுதந்திரப்பிரமாண நூலில் சிவபக்தர்களையும் திராவிடவேதத்தையும் செப்பியிருத்தல் புதுமையன்று; எதிர்காலத்தைக் கூறுதலும் அவருக்குரிய சொந்தக்குணம். அதற்குப் பண்டிதர் யாதுசெய்ய முடியும். நாம் என்னசெய்யமுடியம். இதுபோன்று ஆகமங்களில் வரும் விஷயங்கள் பிறவுமுண்டென அறிக. திருஞானசம்பந்தசுவாமிகளைப்பற்றி இடையிலே புகுத்திவிட்டார்கள் என்றவர், விநாயகர் சுப்பிரமணியர் திரிபுராரி காமாரி முதலிய மூர்த்தங்களைப் பற்றிய வரலாறுகளும் பிரதிஷ்டைகளும் இடையிலேதான் செருகப்பட்டன எனக் கூறவும் முற்படாமல்விடார்! பிரத்தியக்ஷத்துக்கு அப்பாற்பட்ட சுவர்க்கம் நரகம் முதலியவற்றை இல்லையென்று சொல்லவும் முற்படாயல் விடமாட்டார்! தம் கொள்கைக்கு எதிர்ந்து நிற்கும் எனத் தாம் யூகிக்கும் விஷயங்களை எல்லாம் இடைச்செருகல் எனல் இவர் தழுவினர் மரபு என்க.

இன்னும், "சுருதியின் சாமர்த்தியங்களாவன சுருதியிற் கூறப்பட்ட இறந்ததும் எதிர்வதும் நுண்ணியதும் மறைந்ததும் சேயதுமாகிய இவ்விதப்பட்ட அர்த்தங்கள் பொய்மையின்றி உண்மையுடையனவாதல்" எனச் சங்கரபண்டிதர் சைவப்பிரகாசனத்திற் கூறியது கொண்டும் சுருதியின் இலக்கணம் இதுவென உணர்ந்து உண்மை கடைப்பிடிக்க.

"ஆப்தவாக்கியமானது சித்தாந்தமேயாகும். சிவனொருவனே ஆப்தனாயிருக்கின்ற காரணத்தினால், அவன்வாக்குச் சித்தாந்தம் எனப்படும். அந்தச் சித்தாந்தம், ஆப்தனாகிய பரமசிவன் என்னும் இருபொருள்களோடு சமானமான வேறொரு பொருள் இல்லை" என்று இரத்தினத்திரயம் கூறும். இதனை, ஸ்ரீமத். அகோரசிவாசாரியர் செய்த விருத்தியுரை மேல்வருமாறு விளக்குகின்றது. அஃதாவது:-

"சித்தாந்தம் என்னும் சொல்லானது, காரண இடுகுறியாய்ப் பரமசிவனால் அருளப்பெற்ற காமிக முதலிய இருபத்தெட்டு ஆகமங்களுக்குப் பிரசித்தமான உரிமையுடையது; சிவபெருமானே எனில் எல்லாப்பொருள்களையும் விடயமாகக்கொண்ட தமக்கு மேற்பட்டதொன்று இல்லாத ஞானக் கிரியையினையுடையவராதலால், மேலான ஆப்தராவர். அவரால் அருளப்பட்ட சாத்திரங்களோ எனில், பிறமதநூல்களால் அடையத்தகுந்த பதங்களை அறிவிப்பதுடன், அந்த நூல்களால் அறியமுடியாத பொருள்களை அறிவிப்பதனாலும், அந்த நூல்களால் பூருவபக்கம் பண்ணப்படாமையினாலும் பிரமாணங்களேயாகும். இவ்வாறே வேறு பிரமாணங்களால் அறியப்படாததாயும், அவற்றால் பூருவபக்கம் பண்ணப்படாததாயுமுள்ள விடயங்களை உடையது பிரமாணமேயாகும். ஆகையால் அந்தப் பரமசிவனோடும் அவனாலருளப்பட்ட சிவாகமங்களோடும் சமானமாக வேறொரு பொருளும் நன்மையைத் தருவதாகக் காணப்படவில்லை." என்பதாம்.

'ஆகமமானது ஆப்தவாக்கியம்; அந்த ஆகமமும் பிரத்தியக்ஷத்தினாலும் அனுமானத்தினாலும் அறியப்படாமல் இருக்கிற பதார்த்தத்தை அறிவதற்குச் சாதனம் என்று சொல்லப்படும். பிரத்தியக்ஷத்தாலும் அனுமானத்தாலும் நிச்சயமாயிருக்கிற அர்த்தத்தை யாவன் ஒருவன் சொல்லுகிறானே, அவன் ஆப்தன் ஆவான். அந்தக் காரணத்தால் அந்தப் பரமசிவம் பரமாப்தர் என்று சொல்லப்படுவர். மிகத் தெளிந்த புலன் றெருகுதியை யுடையவரும், சர்வஞ்ஞரும், எல்லாத்தொழிலுமுடையவரும், பக்ஷபாதமில்லாதவரும், உள்ளபடி கிரகிக்கிறவரும், நாசமில்லாதவரும், பெத்தான்மாக்களுடைய பந்தத்தைக் கெடுக்கிறவருமாகிய சிவபெருமான் பரமாப்தர் என்று சொல்லப்படுவர்" என்றும்,

"அந்த ஈசுரவாக்கியமானது பிரமாணமாகும்; அந்தப் பரமேசுரன் பஞ்சமந்திரதனுவையுடைய சதாசிவனாய்ச் சிவபேதமான பத்தும், உருத்திரபேதமான பதினெட்டும் ஆகிய இருபத்தெட்டாகமங்களையும் அருளினர்" என்றும் பௌஷ்கராகமம் பகரும். இதற்கு உமாபதிசிவாசாரியர் விருத்தியும் காண்க.

இதனாற் பெறப்படுவதென்னையெனிற் காட்டுதும். இறைமைக்குணம் எல்லாம்நிரம்பப்பெற்ற ஈசுரன் அருளிய ஆகமத்திலே காண்டல் அளவைக்கு எட்டாதபொருளும் காண்டலாலும் கருதலாலும் இனிது துணியப்பட்ட பொருளும் உண்டென்று சித்தமாயிற்று.* சித்திக்கவே, ஸ்ரீ ஞானசம்பந்தாதி அருளாளர்களைப் பற்றியும் ஆலயங்களில் திராவிடவேதம் ஓதுவது பற்றியும் ஆகமங்களிற் குறிப்பிட்டிருப்பது மிகப் பொருத்தமேயாம்.

இதனை மறுத்துரைக்க முற்படும் பூர்வபக்கத்தார், "விட்டுணு சிவசாரூப்பியம் பெறும்பொருட்டுக் காஞ்சீபுரத்திலே தவஞ்செய்தபொழுது, சிவபெருமான் வெளிப்பட்டுக் கலியுகத்திலே சீர்காழியிற் கௌணியர் கோத்திரத்தில் அவதரித்தும் ஞானசம்பந்தனுடைய தமிழ்ப்பதிகத்தினாலே நமது சாரூப்பியம் பெறுவாய் என்று திருவாய்மலர்ந்தருளினர் என்றும்,

*சித்தியார்: காசறு முரையிம் மானத் தடங்கிடாப் பொருளைக் காட்டும்"

அப்படியே நிகழ்ந்ததென்றும் காஞ்சிமான்மியத்து இருபத்து நான்காம் அத்தியாயத்திற் சொல்லப்பட்டது" என்று ஸ்ரீமத். ஆறுமுகநாவலர் எழுதியிருப்பதற்கும், காஞ்சிப்பதியில் திருமேற்றளி என்னும் ஆலயமுண்டு. விஷ்ணுமூர்த்தி அத்தலத்தை அடைந்து, சிவரூபம் பெறும்பொருட்டு மெய்த்தவம் புரிந்தார். சிவபிரான் எழுந்தருளி "எம் அடியரிற் சிறந்தோய்! உனக்கு விரும்பியது யாது? சொல்லுக" என்றருள, "தேவரீருடைய சாரூப பதவியைத் தந்தருளுக" என்று பிரார்த்தித்தார். பரமசிவன் கூறியருளுவார்: "வைவச்சுவத மனுவந்தரத்தில், இருபத்தெட்டாவது கலியுகத்தில், காழிமாநகரிற் கௌணியர் குலத்தில், தோன்றும் எம்மடியானாகிய திருஞானசம்பந்தன் உனக்கு எம்முருவத்தை அளிப்பான், அதுகாறும் இங்கே இருந்து தவமியற்றுக" என்று அருளுதலும், விஷ்ணு அவ்வண்ணமிருந்து, இறைவனைத் தொழச்சென்ற முத்தமிழ் விரகருடைய தமிழ்மறையினாலே, அப்பெருமானுடைய திருவுருப்பெற்றார் என்று சிவஞானயோகிகள் காஞ்சிப்புராணத்தில் கூறியருளியதற்கும், "பரமசிவன் உமாதேவிக்குச் சதுர்யுகதருமங்களுங் கூறியபின்னர், இனிக் கலியுகத்திலே அறுபத்துமூன்று தொண்டர்கள் பிறந்து நம்மேற் பத்திசெய்வார்கள் எனவும், அவர்கள் சரித்திரத்தை உபமன்னியு முனிவர் பக்தர்குழாங்கட்குக் கூறுவர் எனவும் கூறி அச்சரித்திரத்தை முன்னுரைத்தமை பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே நவாம்மிசத்திற் பெறப்படுதலாலும்" என ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெரியபுராண உபோற்காதத்திலே பகர்ந்திருப்பதற்கும் யாது கூறப்போகின்றார்கள்.

இன்னும் மற்சபுராணத்திலே, வைவசுவத மனுவந்சரத்தில் இருபத்தெட்டாங் கலியுகத்தில், மஹாவிஷ்ணுதேவர் விஷ்ணுயச் என்பானிடத்தில் கற்கியாய் அவதரிப்பர் என்றும், அவர் வரம்பிகந்திழிவோரையும், சதுர்வேதங்களைச் சாற்றுவோரை நிரந்தரம் பழிப்போர்களையும், பொல்லா நீதி செய்திருபவரையும் இன்னபிறரையும்அழித்துப் பாற்கடலில் யோகநித்திரை செய்வர் என்றும் மற்சபுராணத்து நாற்பத்தெட்டாவது அத்தியாயத்தில் கற்கி அவதாரசரித்திரம் முன்னரேயே உரைக்கப்பட்டிருத்தலுங் காண்க.

இன்னும் கந்தபுராணத்தில், கச்சியப்ப சிவாசாரியசுவாமிகள் "மருமானிடத்தின் மானுத மம்மான்மகள்" என்றருளினர். "விட்டுணுவின் வழித்தோன்றலாகிய விஷ்ணுயச்சென்னும் அந்தணனிடத்திற்கற்கியாய் அவதரிக்கும் எனப்பொருள்கொள்க" என்பது இதற்கு நாவலர் எழுதிய குறிப்பு. இதனால் கற்கியின் தோற்றம் இன்னும் நிகழவில்லை என்பதும். அதுமுன்னதாகவே புராணங்களிற் கூறப்பட்டன என்பதும் கண்டுகொள்க.

மேலும், விஷ்ணுமூர்த்தி மற்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனம் என்னும் அவதாரங்களாயும், பரசுராமர் பலராமர் ஸ்ரீராமராயும் கிருஷ்ணராயும் இரட்சித்தார் என்றும், மேற் குதிரையாகியும் வந்து ரட்சிப்பார் என்றும் சித்தியாரிற் பாஞ்சராத்திரிமதத்திலும், அந்த அரியானவர் பின்வரும் காலத்தில், பரியாய்ப் பிறக்கும்பொழுது, சிவபெருமானால் அந்தக் குதிரைக்கு யாது வருமென்று அறிகிலோம்! நிக்கிரகமோ அனுக்கிரகமோ முன்பு வந்த அவதாரங்களில் உண்டானமையை அறிந்தாயன்றே!

எனப் பஞ்சராத்திரி மறுதலையிலும் சற்கியின் தோற்றமுள்ளதாகவே கூறப்பட்டுள்ளது காண்க.

1. "மீனாமைகேழனாரசிங்கம்வாமனனாய்வென்றி
யானாதவிராமர்மூவராயனாயளித்தார்க்கற்கி
தானாயும்வருவனின்னமென்றவன்சாற்றி."

2. பின்வரும்பரிதானாகியரியென்றாய்ப்பின்புவந்தா
லென்வருமீசனாலென்றறிகிலோமிவுளியார்க்கு
முன்வருமவதாரங்கண்முடிந்தமையறிந்தாயன்றே.

இச்சித்திச்செய்யுட்களால் கற்கியாய்த் திருமால் பிறவியெடுப்பது, புராணங்களிற் கூறியாங்கு, அருணந்திசிவாசாரியராலும் சொல்லப்பட்டிருக்கின்றமை தெளிவாகின்றது.

தமிழ்மறையோதல், சமயாசாரிய வழிபாடு என்பவைகளைப்பற்றி ஆகமங்களிற் குறிப்பிட்டிருப்பதை மறுத்துரைக்க முற்படுவோர், மேற்போந்த பிரகாரம் சித்தியாரில் கற்கியவதாரத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதையும் இடைச்சொருகல் என்றுதான்சொல்ல முற்படவேண்டும். வேதாகம சைவ சித்தாந்திகளே சிந்தியுங்கள்!

இன்னும் சிவஞானசித்தியாரிலே, குற்றமில்லாத வேதாகமமுதலிய நூல்கள் பழுதின்றிச் சொல்வனவாய் உள்ளன என்றறிக. அஃதெங்ஙனமெனில்; பூமியின்கட் சோதிடநூலோர், நிகழ்காலத்தினின்றும் எதிர்காலத்து வினையை முன்பு கூறாநிற்பர்.* பின்பு அதுவும் அழிவில்லாததாகக் கண்டனம். அவையன்றியும் சில நூற்பிரமாணத்தில் உள்ளபடியே இறந்தகாலத்து வைக்கப்பட்டுப் பூமியின்கண் மறைந்திருக்கும் பொருள்களும் எடுக்கப்படும். அவையும் நூற்பிரமாணமென்றறிவாயாக" எனக் கூறப்படுதலினாலும் சிவாகமங்களிலே, தமிழ்வேதத்தைப்பற்றிச் சொல்லியிருப்பது புதுமையன்றென்று தெளிக.

**சிவஞானசித்தியார்.**

பழுதிலாமறைகண்டநூல்பழுதின்றியுண்டதுபாரின்மேன்
மொழிவர்சோதிடமுன்னிபின்னதுமுடியுமென்பதுமுன்னமே
யழிவிலாததுகண்டனம்மவையன்றியுஞ்சிலவாகமங்களி
னெழுதியோர்படியென்றுகொண்டிருநிதியெடுப்பதுமெண்ணிடே.

## பக்தப்பிரதிஷ்டை.

பக்தப் பிரதிஷ்டையும் பக்தோற்சவங்களும் ஆகமசம்மதமாதல்பற்றியே அன்றுதொட்டின்றுகாறும் சிதம்பரம் சீகாழி திருவாரூர் திருப்பெருந்துறை காஞ்சி மதுரை திருவுத்தரகோசமங்கை முதலிய சிவாலயங்கள்

---

* சோதிடநூலோர் எதிர்காலத்து வினையைச் சொல்லுவதாவது:— சூரிய சந்திர கிரகணங்கள் வரும் காலத்தை நிர்ணயித்துச் சொல்லுதலும், உற்பாதங்கள் வரும் என்றலும், மழைபெய்யும்; மழைபெய்யாது என்றலும் இன்ன பிறவுமாம். பூமியில் மறைந்தபொருளை எடுத்தலாவது:—அச்சாத்திர வழி அஞ்சனம் எழுதிப் பார்த்துப் பொருளை எடுத்தலாம். சோதிடசாஸ்திரப்படி எடுப்பதுமுண்டு; அது பீமேசுர உள்ளமுடையான் முதலிய நூல்களால் அறியப்படும்.

எங்கணும் திருஞானசம்பந்தர் முதலிய பரமாசாரியர் திருவுருக்கள் பிரதிஷ்டித்து வழிபடப்பெற்று வருகின்றன. இவர்களுடைய திருவவதாரத்திருநாள் உற்சவங்களும், அற்புதத்திருநாள் உற்சவங்களும், பரிபூரணத்திருநாள் உற்சவங்களும் ஆலயங்கள் எங்கும் ஆகமவிதிப்படியே நடைபெற்று வருகின்றன. ஆகமங்களிலே இடைக்காலத்தில் சில பூசாரிகள் "தேவாரமோதுதலையும்" "அடியார் வழிபாட்டையும் புகுத்திவிட்டார்கள்" என்று இக்காலத்துச் சில நவமார்க்கத்தார் சொல்லக் கேட்கின்றாமன்றி, தொல்லோர்களாகிய மேதாவிகள் ஒருவரேனும் அங்ஙனம் சொல்லத் துணிந்தார் அல்லர்.

பண்டிதர் திரு. இரத்தினம் முதலியோர் இங்ஙனமாக ஆராய்ச்சிசெய்ய, திரு. வேந்தனார், காமிகம் என்ற ஆகமத்தில் சிவபெருமானுக்கு வழிபாடு செய்யும்பொழுது தமிழ்வேதங்கள் ஓதவேண்டும் என்று குறிப்பிட்டிருத்தலால், நால்வருக்குப் பிற்பட்டகாலத்திலே அவ்வாகமம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்றார். இதனை மறுத்து இந்நூல் முதற்பாகத்தில் எழுதினோம். ஆண்டுக்காண்க.

இவர்கள் இருவரும் ஆகமவைரிகள் ஆதலின், அவற்றை எவ்வாற்றானும் இழிவுபடுத்தித் தம் கொள்கையை நிறுத்தமுற்பட்டாரேயன்றி, உண்மையை அறிந்து கூறினார் அல்லர் என்பது, இவர்கள் காட்டியநியாயங்கள் ஒன்றுபோல்இராது, மாறுபடுகின்றமையால் துணிந்துகொள்ளமுடியும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பெரியபுராணசூசனத்தில், "இப்பெரியபுராணமானது..... சர்வாதிகாரிகளாகிய ஆதிசைவருக்கும் பிறருக்கும் தான் அதிகரித்த தனியடியார் அறுபத்துமூவரும் தொகையடியார் ஒன்பதின்மர்களுமாகிய திருத்தொண்டர் எழுபத்திருவருடைய சரித்திரங்களையும் உணர்ந்து, அவர்கள் மகிமையைத் தெளிந்தாலன்றிச் சிவாலயங்கள் எங்கும் முறையே அவர்களுக்குப் பிரதிட்டை பூசை திருவிழாக்கள் செய்தற்கண்ணும் சேவித்தற்கண்ணும் ஊக்கமும் அன்பும் நிகழாமையானும் யாவரும் ஒருதலையாகக் கற்றுணரவேண்டும் நூலாம்." என்று கூறுகின்றார்கள். இதனால் ஆகம விதிப்படியே நாயன்மார்களுக்கு நித்திய நைமித்தியங்கள் நடத்தப்படவேண்டுமென்று அறிவுறுத்துகின்றமை பெறப்படுகின்றது.

புரூரவச் சக்கரவர்த்தி என்பவன் தனக்குப் பரமசிவன் சொப்பனத்திற் சொற்றபடி, எங்கள் தமிழ்முனிவராகிய அகத்தியர் ஆகமவிதிப்படி திருவாதஆரடிகட்குத்திருவிழா நடத்துக என்று உபதேசித்தவாறு செய்தானென்று திருப்பெருந்துறை மகாத்மியத்தாலும், மஹாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய திருப்பெருந்துறைப்புராணத்தாலும் உணரப்படுகின்றது. பண்டுபோல் இன்றும் மகுடம் முதலிய ஆகமங்களில் விதித்தவாறே திருஞானசம்பந்தர் முதலிய அடியார்கட்கு நித்திய நைமித்தியங்கள் நடைபெற்று வருவது பிரத்தியக்ஷம்.

## சைவாகமங்கள் இருபத்தெட்டும் வைதிகம்.

"வேதங்களிலும் சிறந்தனவெனத் திருமூலர், மாணிக்கவாசகர், அருணந்திசிவனார் முதலிய சிவானுபூதிச் செல்வர்கள் போற்றிய சைவாகமங்களை இழித்துரைக்குங் கூற்றுக்கள் வராகபுராணம், சூதசங்கிதை, ...முத

லிய வடநூல்களிற் காணப்படுகின்றன. வேதநெறியில் வழுவிய மக்க ளுக்கே ஆகமங்கள் கூறப்பட்டன என்றும் அவை வேதங்களுக்கு விரோ தமானவை என்றும் உரைக்கின்றன....ஆரியப் பார்ப்பனரிடையே எழுந்த இந்த மாறுபாடுகளுக்குக் காரணம் யாது?" என்று பண்டிதர் இரத்தினம் எழுதியுள்ளார்.

ஸ்ரீ மூலநாயனுர் முதலிய அருளாளர்கள் பாராட்டிய 'வேதஞான மோ ஆகம அறிவோ வேண்டியதில்லை' என்று வற்புறுத்தி அவைகளை ஒதுக்கிவிடும் இவர், சூதசங்கிதை முதலிய வடமொழி நூல்கள் சைவாக மங்களை இழித்து உரைக்கின்றன என்று ஆராய்ச்சிசெய்யவும் முற்பட்டுக் கொண்டார். வடதேசத்து மாயாவாதப் பார்ப்பனர் சிலலோர், ஆகமவை ரிகளாய் "வைதிகத்திற் ருழ்ந்தது தாந்திரிகம்," ஆகமத்தைப் பரிசிக்கிற் பாதகமேறும்" என்று பல பிரகாரமாக எழுதிய ஆபாசவிஷயங்களைப் பிரதிபண்ணி, அவை தமக்கும் உபகாரமாம்போலும் என்று சிந்தனை செய்து, முன்பின் யோசனையின்றி எழுதிவிட்டாரே தவிர வராகபுராணம் சூதசங்கிதை முதலிய வடநூல்களுள் ஒன்றைத்தானும் படித்துப்பார்த்து உண்மை உணர்ந்து எழுதினுரல்லர் என்பதைக் காட்டு முகத்தான், அந்த வடமொழிப் புராண நூல்கள் காமிகம் முதல் வாதுளாந்தமான சைவாகமங் களையே பரமப்பிரமாண நூலாகக்கொண்டு வந்திக்கும் என்பதை நிலை நிறுத்திக்காட்டுவாம்.

ஆகமமானது வைதிக ஆகமம் என்றும், அவைதிக ஆகமம் என்றும் இருதிறப்படும். வைதிக ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளமிறுதியாகிய இருபத்தெட்டாம். இதற்குப் பிரமாணம் ஸ்காந்தபுராணத்துள்ள சனற்கு மார சங்கிதையில்: "சைவாகமமானது. சிரௌதம் (வைதிகம்) அசிரௌ தம் (அவைதிகம்) என இருதிறப்படும். சுருதிசாரமாயுள்ளது சிரௌதம். (வைதிகம்) அந்த வைதிகமானது, பின்னர் சுதந்திர ஆகமமும் இதர ஆக மமுமென இருவகைப்படும், சுதந்திர ஆகமமானது முன்னர்ப்பத்தும் பின் னர்ப்பதினெட்டுமாய் (இருபத்தெட்டாய்) சித்தாந்தம் என்று கூறப்படும். சுருதிசாரமயுள்ள இதரஆகமமானது நூறுகோடி விரிவினையுடையதாகும்" எனவரும். சிவபுராணத்து வாயுசங்கிதையிலும், "அந்தச் சைவாகமமும் வைதிகம் அவைதிகம் எனஇருதிறப்படும். சுருதிசாரமாய் உள்ளவைதிக ஆகமமானது பத்தும் பதினெட்டுமாய், காமிகாதி நாமங்களோடு முடிந்த சித்தாந்தம் எனப் பெயர்பெறும். அவைதிக ஆகமமானது நூறுகோடி விரிவினையுடையதாகும்" என்று சொல்லப்பட்டுள்ளது. இங்ஙனம் வாயுசங் கிதையும் சனற்குமாரசங்கிதையும் "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என்று சகலாகமபண்டிதராகிய அருணந்தி சிவாசாரியர் திருவாய்மலர்ந்தருளியபடி, சுருதிசாரமாகிய சுதந்திர சைவ ஆகமமானது சித்தாந்தம் எனப் பெயர் கொண்ட காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களேயாம் என்று உணர்த்தி யமை அறியற்பாலதாம். ஈண்டு, பத்தும் பதினெட்டும் எனப் பிரித்துக் கூறி யது எதனுல் எனில்; சிவபேதமான ஆகமங்கள் பத்துஎன்றும், உருத்திர பேதமான ஆகமங்கள் பதினெட்டு என்றும் அச்சிவாகமங்கள் நிறுத்திய முறைபற்றியேயாம். அங்ஙனமே திரிலோசனசிவாசாரியர் சித்தாந்த சாரா வளியிலும் உமாபதிசிவாசாரியர் பௌஷ்கர விருத்தியினும் கூறியருளினர் என்றறிக.

வேதோக்தமாகிய விபூதி, உருத்திராக்ஷம், பஞ்சாக்ஷரம், பதி பசு பாசம் என்பவற்றைக் காமிகாதிஇருபத்தெட்டுஆகமங்களும் நிரூபித்தலின், அவை சிரௌதம் அல்லது வைதிகாகமங்கள் எனப்படும். இனி ஆகமங்களைச் சுதந்திரம் எனக் கூறியது என்னையெனில்; "கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தாந்தம் என்பவற்றைச் சுருதியினின்றும் எடாது சுதந்திரமாய் எடுத்துக் கூறுதலின், காமிகாதி இருபத்தெட்டும் சுதந்திர ஆகமம் எனப்பட்டதெ"ன்று அப்பய தீக்ஷித யோகியார் அறிவுறுத்தியவாற்றானுணரப்படும்.

"மறைவினும் மறைவாய், சூக்குமமாய், முத்திப்பொருட்டு வேத சாரமாய், சுபமாயுள்ள சிரௌத பாசுபதமானது எம்மால் (சிவனால்) ஆக்கப்பட்டது" எனவும், "வேதாப்பியாசத்தில் விருப்பமுடைய அறிஞன் பசுபதியாகிய சிவபெருமானைத் தியானிக்க"எனவும், வேதனிருத்தமாய்,உருத்திரரால் இயற்றப்பட்ட வாமம் பாசுபதம் சோமம் இலாகுளம் பைரவம் என்னும் வேதபாகிய சமயங்கள் முத்திகாமிகளாற் சேவிக்கற்பாலன அன்றும்" எனவும், கூர்மபுராண உத்தரபாகத்து ௬௮-ம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டது. ஈண்டு வைதிகபாசுபதம் அவைதிகபாசுபதம் என்னும் இரண்டும் பிரித்துவிளக்கப்பட்டமையும், வாமம் முதலிய சமயங்கள் வேதவிரோதமென்று விலக்கப்பட்டமையும் காண்க. ஆதலின் அவைதிக ஆகமங்களினின்று வேறுபட்டுச் சிறந்துள்ளன வைதிக காமிகாதி ஆகமங்களேயாம்.

பூர்வத்தில் கிருகஸ்தாசிரமிகளாகிய முனிவர்கள் ஆயிரக் கணக்கானோர் சிவாராதனையின்பொருட்டுத் தவஞ்செய்தார்கள். காலபேதத்தினால் ஓர் காலத்து அதி உக்கிரமுடைய பஞ்சமுண்டாயிற்று. அப்போது கௌதமமுனிவரை அந்த இருடிகளெல்லாம் அடைந்து, பசியினால்வருந்தி ஆகாரம் வேண்டுமென அவரையாசித்தார்கள். அம்முனிவர் அவர்களுக்கு அன்னமளித்துவந்தார். பின்னர் அச்சமின்றிப் பன்னிரு வருடம் உண்டு வருவாராகப் பஞ்சம் நீங்கிற்று. நாடு செழித்தது. அவர்கள் தமதுறைவிடம் போதற்கு முனிவரிடம் அனுமதிகேட்டார்கள். முனிவர் தமதாச்சிரமத்தில் இருந்து உண்டுவாழுமாறு கூறித் தடுத்தார். அப்பொழுது செய்ந்நன்றியில்லாத அம்முனிவர்கள் மாயாரூபமாகிய பசு ஒன்றைத் தமது மந்திரத்தால் ஆக்கிக் கௌதமர் சமீபத்தில் நிற்குமாறுசெய்ய, அம்முனிவர் அப்பசுவைக் கோட்டத்திற் கொணர்ந்து தொட்டமாத்திரத்தில் அது வீழ்ந்திறந்தது. இவ்விஷயத்தை முனிவர் அறியாது கோஹத்தி நிகழ்ந்துபோயிற்றே என்று சோகித்தார். முனிவர்கள் கௌதமரை நோக்கி, "விப்பிரசிரேட்டரே! இது பசுக்கொலை;உமது அன்னம் புசிக்கற்பாலதன்று; நாங்கள் இவ்விடம் விட்டுப்போகின்றோம்" என்று கூறிப் போய்த் தமது தாருகாவனத்தை அடைந்தார்கள். இவர்களது மாயத்தினால்நேர்ந்த கோவதையைக் கௌதம முனிவர் அறிந்து அவர்களைச் சபித்தார். மகாபாதகிகளை நிகர்த்து வேதத்துக்குப் புறத்தவர்களாய் ஆவார்களென அவர்கள் அநேகமாய்ச் சாபத்தினால் மீட்டும் மீட்டும் பிறந்து உருத்திரரையும் நாராயணரையும் தோத்திரம் செய்தார்கள். அப்பொழுது மோகசாத்திரங்களை உண்டுபண்ணுவோமென்று விட்டுணுவால் உருத்திரர்வேண்டப்பட்டும், விட்டுணு உருத்திரரால் உளுற்றப்பட்டும் மோகசாத்திரங்களைச் செய்தார்கள். காபாலம் இலாகுளம்

வாமம் பைரவம் பாஞ்சராத்திரம் முதலிய மோகசாத்திரங்களை உண்டாக்கினார்கள்" என்று கூர்மபுராணத்திற் பூருவபாகத்துப் பதினாறும் அத்தியாயம் கூறிற்று, அரசரேறும் புலவரேறுமாகிய அதிவீரராம பாண்டியரும் தமிழ்க் கூர்மபுராணத்தில்,

"சாறு வாகங் காபாலஞ் சாற்று பாஞ்ச ராத்திர நூல்
மாறு செய்யும் வாமமுள மயங்கச் செய்த நூலாகும்"

என்று செப்பியமை காண்க,

ஈண்டுக் கூர்மபுராணத்திற் கூறியாங்கு சூதசங்கிதையிலும் "பாஞ்சராத்திரம் காபாலம் காளாமுகம் சாக்தம் என்பவற்றில் தீக்ஷிக்கப்பட்டு நீங்கள் பிராமண அதமர்களாவீர்களாக" எனவும், பௌத்தம் ஆருகதம் பாசுபதம் சாம்பவம் என்பவற்றில் தீக்ஷிக்கப்பட்டு நீங்கள் பிராமண அதமர்களாவீர்களாக" எனவும் கூறப்பட்டமையால் வேதத்துக்குப் புறம்பான அவைதிக ஆகமங்கள் உருத்திரராலும் விஷ்ணுவாலும் ஆக்கப்பட்டன என்று அறியப்படுகின்றது. இதனைத் தமிழ்மொழிபெயர்ப்பாகிய சூதசங்கிதையிலும் சிலமறையோர்க்குச் சிவபத்தியில்லாமைக்கேது உரைத்த அத்தியாயத்தில்,

"தீயமறை யவர்பொய்யே கற்பித்த நிந்தைமொழி செவியிற்கேட்டுத்
தூயதவத் திருமுனிவன் சிவசிவமற் றிவரென்ன சொன்னு ரென்று
காயழலிற் கண்சிவப்ப நனிவெகுண்டு செய்நன்றி கழியக் கொன்ற
பாயவினை யம்மறையோர் முகநோக்கிக் கொடுஞ் சாபம் பகரலுற்றான்"

என்றற்றொடக்கத்தனவாக வரும் செய்யுட்களாலும் அறிந்துகொள்ளலாம். மேலே காட்டிய புராணப் பிரமாணங்களினாலே, சைவாகமங்கள் இருபத்தெட்டும் வைதிக ஆகமங்கள் என்றும், வாமம் முதலியனவே அவைதிக ஆகமங்கள் என்றும் சந்தேகமின்றி நிறுவப்பெற்றமை காண்க,

இன்னும் சூதசங்கிதையில், "காமிகமுதலிய ஆகமங்கள் பரமசிவனால் அருளப்பட்டுப் பிரமாணமாதல்போல, வியாசராற் கூறப்பட்ட பதினெண் புராணங்களும் பிரமாணமாகின்றன. என்று சிவாகமங்களைப் பிரமாணமாகக் கொள்ளப்பட்டிருத்தலானும், சூதசங்கிதை ஞானயோககாண்டத்து மூன்றாமத்தியாயத்தில் "சிவாக்கினியிலுண்டாகிய விபூதியை அபிமந்திரித்து, சர்வாங்கமும் உத்தூளனமும், அவ்வவ்விடங்களில் திரிபுண்டரமுந் தரிக்க" என்றமையாலும், யஞ்ஞவைபவகாண்டத்தில் "ஶைவாகமோதிதோ யோ தர்ம: ஶ்ரேஷ்டோ நைவ ஸம்ஶய:" (சைவாகமத்திற் கூறப்பட்ட தருமம் மேலானது சந்தேகமில்லையன்றோ) என்று சொல்லப்படுதலானும், இன்னும் யஞ்ஞவைபவ காண்டத்தில், சிவாகமத்தில் பிரதிபாதிக்கப்படும் நிருவாணதீக்ஷையில் வரும் ஷடத்துவசுத்தி கூறப்படலானும், சங்கரசங்கிதை யுத்தகாண்டத்தில் "எல்லாவேதங்களும் அந்தத் தேவாதிதேவருடைய வாயில் விளங்கி

கின்றன; அக்ஷரமனைத்தும் அவர் பற்களினும் சிவாகமங்கள் அவர் நாவி லுமிருந்தன" எனப் போற்றப்படுதலினாலும், அவ்வாறே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும் கந்தபுராணத்துச் சூரபதுமன் வதைப்படலத் தில் திருவாய்மலர்ந்தருளுவதினாலும், "தமக்கு நன்மையை விரும்புவோர் வேதாகமங்களிற் கூறப்பட்ட விதிகொண்டு, சிவாசாரியர் அனுக்கிரகத்து டன், உபதேசம்பெற்றுச் சிவபெருமானை இலிங்கத்திற் பூசிக்க" என்று சங்கரசங்கிதையிற் செப்பப்படுதலினாலும், இவ்வாறே ஏனைப்புராணங் கள் எல்லாவற்றினும் ஆகமப்பெருமை சொல்லப்படுதலினாலும், அப்பு ராணங்கள் காமிகாதி சிவாகமங்களை மிகமேலாகிய பிரமாணமாகக்கொ ண்டு போற்றுவது நன்கு நிறுவப்படும். இன்னும்

ஶிவஶ்ரௌவாகமஜ்ஞானம்।

சைவாகமநெறியினர்க்குக் கர்த்தா சிவபெருமான் என்று அன்னபூர்ணி யுபநிடதத்திற் காணப்படலானும் சிவாகமம் வேதயுக்தமாம் என்பதை உணர்ந்து கொள்வாராக. இதன்மேலும், ஸ்காந்தபுராண க்ஷேத்திரமான் மியகண்டத்தின் இடையதாகிய பலாகாக்ஷேத்திர மஹாத்மியத்தில்,

"சந்திரசேகரன் என்னும் பிராமணன் பற்றில்லா நெறியாகிய நர கத்தைத் தருவனவாகிய பௌத்தம் முதலிய மதங்களையும், வைண வம் காபாலம் வேதத்தால் நிந்திக்கப்பட்ட சாக்தம் முதலிய மதங் களையும் கண்டித்து ஐம்பதுவருஷங்கள் பூமியில் வாழ்ந்து சிவபதம டைந்தான்" என்று கூறிற்று,

வடமொழிச் சூதசங்கிதையின் மொழிபெயர்ப்பாகிய தமிழ்ச் சூதசங்கி தையும்,

"ஆகமவிதிப்படிஅளவிலாதவர்
ஏகநாயகனடியிணையருச்சியா
மோகவல்வினைகெடமுத்தியெய்தினார்
போகுயர்புரிசையப்பொன்னகர்க்கணே,"

ஆரணமாகமம்பகருமவையுணர்வுற்ருத்திகளாய்க்
காரணங்கற்பனைகடந்தகண்ணுதருட்பத்தியொடு
சீரணவச்செய்கருமஞ்சிதையாதுமுக்கியமாம்
பூரணஞானமும்புணரும்புகராறுமுத்தியுமடையும்.

என்பனவாதியாகச் சிவாகமவிதிப்படி சிவபூசைசெய்யவேண்டும் என் றும், அவற்றை உணரவேண்டுமென்றும் உணர்த்துகின்றது,

இப்பிரமாணங்களால், சூதசங்கிதை முதலிய புராணங்கள் ஆகமங் களை இழித்துரைக்கின்றன என்ற கூற்று வெற்றுரையாய் முற்றியது காண்க.

இனி இருபத்தெட்டாகமங்களுள்ஒன்றாகிய வீராகமமானது "ஆருக தம் வாமம் பாசுபதம் காபாலம் பாஞ்சராத்திரம் என்னும் ஆறுமதங்க ளையும் விலக்கவேண்டும்" என்று கட்டளையிடுகின்றது, "வாமசமயமா னது விபரீதம்" என்று மகுடாகமம் கூறுவதோடு, "இந்த வேதாந்தப்

பொருளாகிய ஞானம் பரமசுபமாகிய சித்தாந்தம்'' என்று செப்புகின்றது. சுப்பிரபேதாகமத்தில் ''சைவசித்தாந்தம் வேதசாரமாயிருத்தலின்'' என்றும், ''வேதசாரசம்பந்தமான இருபத்தெட்டு ஆகமம் சிரேஷ்டமானது; அது சைவம் எனவும் சித்தாந்தம் எனவும் சொல்லப்படும்; அதற்குப் புறம்பான ஆகமம் பாசுபதம் முதலியன என்று பகரப்பட்டுள்ளது. இங்ஙனம் சுப்பிரபேதம் முதலிய ஆகமங்கள் இயம்பியவாறே சந்தான குரவருள் ஒருவராகிய உமாபதிசிவாசாரிய சுவாமிகளும் ''வேதாந்தத் தெளிவாஞ் சைவ—சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றும்'' என்றருளிச்செய்தார். இவ்வாறே வடமொழிப் புராணங்களும் வேதசாரம் என்றும் சித்தாந்தமென்றும் சிவாகமங்களையுற்றுக் கூறியமை முன்னர்க் காட்டப்பட்டது.

இன்னும், சிவஞானமுனிவர், சிவஞானபாடியம் சிறப்புப்பாயிரத்தில் சைவாகமப் பிராமாணியம் நிலைநிறுத்துமிடத்தில் பலநூற் பிரமாணங்கொண்டு ஆராய்ந்து,

''இனித் தந்திரவழி யொழுகினோர் மூடர் எனவும், நிரயத்தில் வீழ்ந்தார் எனவும், அவை சாபப்பயன் எனவும், விருத்திப்பொருட்டு எனவும், மோகநூல் எனவும் புராணங்களிற் கூறியது வேதப்பொருளோடு மாறுகொளக் கூறும் பாசுபதம் பாஞ்சராத்திரம் முதலிய புறச்சமயங்களையேயாம்; வேதப்பொருளையே விரித்துக் கூறப்புகுந்த வேதசாரமாகிய சித்தாந்த சைவாகமங்களை அன்றென உணர்க. இதுவும் வாயவ்விய சங்கிதை சனற்குமாரசங்கிதை கூர்மபுராணம் மகுடாகமம் முதலியவற்றுட் கூறியவாறு.

இனிப் புறச்சமயவழி ஒழுகினோரை அங்ஙனம் இழித்துக் கூறியதூஉம் அந்நெறி ஒழுகுதல்பற்றி அன்று; மற்றென்னெனில், அவற்றையே பொருளாகக்கொண்டு, வேதநெறியை நிந்தித்தமைபற்றியென்க. அதுவும், ஆண்டே கூறப்பட்டது. புறச்சமய நூல்கள் விருத்திப்பொருட்டுச் செய்யப்பட்டன என்பதூஉம் உடலோம்புதற்பொருட்டென்றதன்று; விருத்தி ஒழுக்கமுமாகலிற் சாபத்தால் வேதநெறியில் நீங்கினோர் ஆசரித்தற் பொருட்டு என்றவாறும். மோகநூல் என்றதூஉம் மணிமந்திர மருந்து முதலியவற்றான் விம்மிதம் பயக்கும் நூல் என்றவாறேயாம்.'' எனக்கூறியிருப்பதூஉம் காண்க.

இன்னும் இவ்வுண்மை, சிவாக்கிரயோகிகள் தாம் செய்த பாடியத்து முதலாஞ் சூத்திரவிருத்தியில் விளக்கியிருத்தலாலும், தாம் செய்த சிவஞானசித்தியார் உரையில்,

அநாதியே யமலனுய வறிவநூ லாகமந்தான்
பிநாதிமா றின்றிப்பேண றந்திர மந்திரந்தான்
மனுதிக ளடக்கித்தெய்வம் வழிபடும் வாய்மையாகுந்
தனுதியி றிலாதான்றன்மை யுணர்த்துத லுபதேசந்தான்.

என்ற செய்யுள் உரையில் துலக்கியிருத்தலாலும், ஸ்ரீமத். அப்பயதீக்ஷித யோகிகள் சிவதத்துவவிவேக உத்தரபாகத்தில் நன்று நிறுவியிருத்தலாலும் ஸ்ரீமத், ஆறுமுகநாவலர் அவர்கள்,

"வேதநெறிவழுவிய மாந்தர்க்கே தந்திரங்கள் கூறப்பட்டன எனச் சில நூல்களிற் கூறியதென்னையெனில், ஆண்டுக் கூறியது வாம சோம லாகுள பைரவ முதலிய தந்திரங்களை அன்றிச் சிவசித்தாந்தத்தை அன்றென்க. .........சிவ சித்தாந்தம் வேதநெறி வழுவிய மாந்தர்க்குக் கூறியதென்பதே கூடாது" எனக் கூறியிருத்தலாலும், அவ்வாறே காசிவாசி செந்திநாதையர் நீலகண்டபாஷ்ய உபக்கிரமணிகை முதலியவற்றில் நிச்சயித்திருத்தலாலும், சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயக்கர் முதலியோரும் சிவாதிக்கிய ரத்நாவளி முதலியநூல்களில் எழுதியிருப்பதாலும், வட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர் அவர்கள் முதலியோரும் அவ்வாறே விளக்கிப்போந்தமையாலும் காமிகாதி ஆகமங்களே வேதசாரமென்றும், வாமம் முதலிய ஆகமங்களே வேதத்துக்குப் புறம்பானவை என்றும் ஐயமின்றி உணரப்படும்.

இவ்வுண்மைகள் இன்னும் சந்தானகுருமணிகளுள் ஒருவராகிய ஸ்ரீமத். உமாபதிசிவாசாரிய சுவாமிகளாற் பௌஷ்கரவிருத்தியில், துவிசதி காலோத்தரம் மிருகேந்திரம் முதலிய ஆகமங்களையும், ஹரதத்தா சாரியருடைய சதுர்வேததாற்பரிய சங்கிரகத்தையும், வாசிஷ்டலைங்கம் சூதசங்கிதை முதலிய புராணங்களையும் ஆராய்ந்து காமிகம் முதலிய ஆகமங்கள் இருபத்தெட்டுமே பிரமாண நூல்கள் என்றும், இவற்றிற்கு அந்நியமாகிய பாஞ்சராத்திரம் முதலியவை சேவிக்கத்தக்கன அல்லவென்றும் வச்சிரலேபமாக நிலைநிறுத்தப்பட்டமையால் வேதநெறியில் வழுவியமக்களுக்கே சைவாகமங்கள் கூறப்பட்டன் என்றும், அவை வேதங்களுக்கு விரோதமானவை என்றும் கூவும் கூற்றுக்கள், ஆகமங்களையேனும் புராணங்களையேனும் ஆகம வியாக்கியானங்களையேனும் ஆராய்ந்தறியாமையால் எழுந்த போலியுரையேயாம் என்று அறிஞரால் ஒதுக்கித் தள்ளப்படும்.

இதுகாறும் கூறியவாற்றானே காமிகாதி வாதுளாந்தமான ஆகமங்களே வைதிக ஆகமங்களாம் என்றும், பாஞ்சராத்திரிகள் முதலியவர்களே வேதநெறி தவறியவர்கள் என்றும், அவர்கள் பொருட்டே பாஞ்சராத்திரம், காபாலம் முதலிய அவைதிகதந்திரங்கள் எழுந்தன என்றும், அந்தமோகாகமங்களையே பாராசரபுராணம் சூதசங்கிதை முதலியன இழித்துரைத்தன என்றும், திருமூலர் அருணந்திசிவனார் உமாபதிசிவனார் முதலிய சிவானுபூதிச் செல்வர்கள்போற்றிய சைவாகமங்களை அச்சூதசங்கிதை ஆதிய வடமொழிநூல்கள் போற்றிப்புகழ்ந்தன என்றும் செவ்விதிற்றுணியப்பட்டன.

சைவாசௌசதீபிகை.

ஆதியதிபரமாத்தன்மொழிந்தருள்வாக்கியமாம்
ஆகமந்தானாருயிர்க்குப்புத்திமுத்திகாட்டும்
ஓதுமிலாகுளஞ்சோமம்பாசுபதமென்ன
உரைத்திடும்பன்னூல்களினுமுயர்ச்சிமிகவுளதாம்
காதன்மொழிபழுதின்மறைப்பொருளனைத்துந்தெரிந்து
நவிலுமியல்பால்வேதசாரமெனப்படுமாம்
ஆதலினால்வைதிகருமாகமநல்விதியே
யதிவிசிட்டவைதிகமென்றறிந்துகொள்கவன்றே.

"சாதியை வகுக்காத சைவம்" என்றார் திரு: கொக்குவில் விசுவலிங்கம் அவர்கள். "வேதவழக்குக்குமாறாகக் கௌசிகர் முதலிய ஐந்து இருடிகளின் வழியிலே தாம் தோன்றியதாகவும் கூறினர். தம்மை ஆதிசைவர் ஆக்கியும் ஏனையசைவர்களுள் சத்திரியர் வைசியரை அனுசைவராக்கியும், சூத்திரரை அவாந்தரசைவராக்கியும் ஏனையோரைப் பிரவர அந்திய சைவர்களாக்கியும் வைத்தார்கள். அந்தப்பிரிவு அன்பு ஒழுக்கம் வழிபாட்டு முறை என்பவற்றைப்பற்றியதன்று. மிருதிநெறிபோற்றும் வருணம், சாதி முதலியவற்றைப்பற்றியதேயாகும்." என்றார் திரு: கா. பொ. இ.

## ஆசார்ய நியமம்.

சாதிப்பிரிவு மிருதிகளில் மாத்திரம் சொல்லப்பட்டதன்று; வேதசிவாகமங்களிலும், திருமுறைகளிலும், சித்தாந்த சாஸ்திரங்களிலும், சங்கத்தமிழிலும், பிற்கால நூல்களிலும் நிச்சயிக்கப்பட்டதேயாம். பௌஷ்கராகம பாஷ்யத்தில் உமாபதிசிவாசாரியரால், (1) பிராமணரும், க்ஷத்திரியரும், வைசியரும், சுத்தகுலத்திற் பிறந்த சூத்திரருமாகிய நால்வருமே ஆசாரியராவார். மற்றையோருக்கு ஒருக்காலும் ஆசார்யத்துவம் இல்லை என்றறிக; (2) பசுசாத்திரம் பற்றுதவிட்டுச் சிவசாத்திரம் பற்றிப்பயிலும் பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருமே ஆசாரியராவார் என்று புகழப்படுவர்; (3) கல்லானது சிவசம்ஸ்காரத்தினாலன்றே போகமோக்ஷங்களைத் தருவதாம், கல்லானது சிவத்தன்மை அடையுமாகிற் சூத்திரன் அங்ஙனம் ஆகான் என்பது எங்ஙனம்" என்றற்றொடக்கத்தனவாகச் சுப்பிரபேதாகமம், துவிசதிகாலோத்தரம், கந்தகாலோத்தரம், வாயவ்வியசங்கிதை, அசிந்தியவிசுவசாதாக்கியம், சூதசங்கிதை ஆதிய பன்னூற்பிரமாணங்கொண்டு, ஆசார்ய நிருபணம் தீக்ஷாதிகாரி நிருபணம் முதலியன வருணபேதம் பற்றிச் செய்யப்பட்டிருத்தல் கண்டு உண்மைகடைப்பிடிக்க. சாதிநெறிபற்றிய இந்த ஆகம புராணப்பிரமாணங்களையெல்லாம் "இடைச்செருகல்" "வேண்டுமென்றே புகுத்தப்பட்டவை" என்று கூறிவிடுவாராயின்; உமாபதி சிவாசாரிய சுவாமிகளும் இப்பிரமாணங்களையெல்லாம் ஆராய்வின்றி மெய்யென்றுகொண்டு பாஷ்யத்தை எழுதிவைத்தார் என்பதன்றே பெறப்படும்; அல்லது, வேந்தனார் சொல்லிவிடுவதுபோல் அக்காலப்போக்குக்கு இயைய எழுதினார் என்று சொல்லவேண்டி யேற்படுமன்றே! சைவசமயவரம்பு காட்டிப் பலவகைப்பட்ட நூல்களை அருளிச்செய்தும் பலப்பல அற்புதங்களைச் செய்தும் சைவஸ்தாபனஞ் செய்தருளிய சுவாமிகளை அங்ஙனம் கூறி அறியாமையேற்ற முற்படுவது ஓர் சைவசமயிக்குத் தகுதியா? சித்தாந்த ஞானசாரியருடைய கொள்கையை எதிர்த்துப் போராடுதல்தானோ "அறிவின் செயல்;" "அன்பின் அடையாளம்;" "தமிழர் மரபு" நிற்க, மேலாராய்வாம்.

## கோத்திரம்.

"வேதவழக்குக்குமாறாகக் கௌசிகர் முதலிய ஐந்து இருடிகளின் வழியிலே தாம் தோன்றியதாகவும் கூறினர்" என்று வாளா எழுதினாரேயன்றி, வேதாகம வழக்குக்கு மாறுபட்ட இடத்தை எடுத்துக்காட்டித் தம் கொள்கையை விளக்கினாரன்று. தக்கபிரமாணங்கொண்டு தாபிக்க முடியுமா? முடியுமானால் தாபிப்பாராக.

கௌசிகர் முதலிய ஐந்து இருடிகளின் மரபிலே வந்தவர்கள் ஆதிசைவர்கள் என்று காரணம் காமிகம் முதலிய எல்லா ஆகமங்களிலும் அவற்றின் வழிவந்த சைவசமய நெறிமுதலியவற்றிலும் பகர்ந்திருத்தல் நோக்கற்பாலது. இந்த ஆதிசைவர்களே முப்பொழுதுந் திருமேனிதீண்டுவார் என்று திருத்தொண்டத்தொகையிற் சொல்லப்பட்டவர் என்றும், சுந்தரமூர்த்திகளும் ஆதிசைவரே என்றும் இங்கே அறிந்து கொள்ளற்பாலன. ஆதிசைவராகிய சடையனுர் சுந்தரமூர்த்திகளாகிய தம் தனித்திருமகனுருக்குச் சைவஅந்தணர்குலத்திலே தங்கள் அரும்பெருமரபிற் கேற்ப வந்ததோர் சிறப்பினுலே உள்ளவர் என்றுகருதியே சடங்கவி சிவாசாரியருடைய மகளைப் பெண்பேசினுர் என்றறிக.

"தந்தையார் சடைய ணுர்தந் தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துட் டங்க ளரும்பெரு மரபுக் கேற்ப
வந்ததோர் சிறப்பிற் புத்தூர்ச் சடங்கவி மறையோன் றன்பாற்
சென்றிரு வணைய கன்னி மணத்திறஞ் செப்பி விட்டார்." என்றும்

"குலமுத லறிவின் மிக்கார் கோத்திர முறையுந் தேர்ந்தார்"

என்றும் வரும் தடுத்தாட்கொண்ட புராணச்செய்யுட்களும் காண்க. இந்த அருணுற்பிரமாணத்தினுலே இவர் கூற்றே வேதாகம வழக்குக்கு மாறுபட்ட கூற்றுமென்பது தாபிக்கப்படும்.

## சைவபேதம்.

மேலும், பிராமணர் தாம் சைவபேதத்தை ஆக்கினுர்கள் என்று எந்த நூலிற்சொல்லப்பட்டது? சிவஞானச் செல்வர்கள் யாராயினும் அங்ஙனம் கூறியுள்ளார்களா? சைவபேதம் ஒழுக்கநெறியைப்பற்றியதல்ல என்று இவருக்கு உபதேசித்த குருசந்தானம் யாது?

நிற்க, இவருக்கு மூலபுருஷராயிருந்த திரு. கா. சு. பிள்ளை, "சிவாகமங்களில் ஆதியிற் காட்டியிருந்த அறுவகையோருடன் மகாசைவரையுஞ் சேர்த்து, பிற்காலத்தில் எழுவகையாமென எழுதிக்கொள்ளப்பட்டது போலும்" என்று தீட்டினுர். திரு. கா. சு. எழுவகைச் சைவருள் மகாசைவரைநீக்கி ஆறு என்றூர்; ஆனுல், திரு. கா. பொ. இ. மகாசைவரையும் ஆதிசைவரையும்நீக்கி ஐந்துஎன்றூர். இவற்றிற்குப்பிரமாணம்என்னே? சிவாகமங்களிலே எழுவகைச் சைவர் எனக்கூறியிருக்க, திரு. கா. சு. பிற்காலத்திலே மகாசைவரையும் சேர்த்து எழுதப்பட்டது என்று எழுதியது பிழை. "வேதவழக்குக்குமாறுபட்டு" என்று கா. பொ. இ. எழுதியது யூகம். இவ்விருவருடைய வாக்கியங்களும் கற்பனை என்பதற்கு இவர்கள் மாறுகொளக்கூறுகின்றமையே உறுசான்றுமென்றறிக. இவ்விருவருடைய கருத்துகள் பொருந்துமாறில்லை என்பதை நிறுத்துவாம்.

### வீரதந்திரம்.

"அநாதிசைவனும், ஆதிசைவனும், மகாசைவனும், அநுசைவனும், அவாந்தரசைவனும், பிரவரசைவனும், அந்தியசைவனும் என்று சைவபேதம் சொல்லப்படுகின்றது" என வீரதந்திரம் செப்பும்.

திருவாதவூரடிகள் புராணவிருத்தி ஆசிரியர் ஸ்ரீமத் ம. க. வேற்பிள்ளை அவர்கள். "சைவர்: அநாதிசைவர், ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர் அந்தியசைவர் என எழுவகையர். அவருள் அநாதிசைவராவார்: சதாசிவமூர்த்தி; ஆதிசைவராவார்: சிருஷ்டி ஆரம்பத்லே அவ்வநாதி சைவரது சத்தியோசாதமுதலிய பஞ்சவத்திரங்களினின்றும் தோன்றிய கௌசிகர் காசிபர் பாரத்துவாசர் கௌதமர் அகத்தியர் என்னும் பஞ்சரிஷி கோத்திரத்துப் பிறந்த சிவப்பிராமணர். மகாசைவராவார்: வைதிகப் பிராமணருள்ளே சிவதீக்ஷைபெற்றவர். அநுசைவராவார்: சிவதீக்ஷைபெற்ற க்ஷத்திரியரும் வைசியரும். அவாந்தர சைவராவார்: சிவதீக்ஷைபெற்ற சூத்திரர். பிரவர சைவராவார்: சிவதீக்ஷைபெற்ற அநுலோமர். அந்தியசைவராவார்: சிவதீக்ஷை பெற்ற மற்றையோர். அது,

அரியசதாசிவனென்போனநாதிசைவனவன்பா
லவதரித்தசிவமறையோராதிசைவரிவர்பால்
உரியசிவதீக்கைபெற்றபூசுரர்மாசைவ
ருயர்ந்தவரசன்வணிகனநுசைவராவார்
பெரியகுவளைப்புயத்தோனவாந்தரசைவன்சீர்
பெறுசவன்னனுதியநுலோமர்பிரவரராம்
வரியவனிமிசையொழிந்தோரந்தியசைவத்தோர்
விரிந்திடுமேழ்சைவவிதமிவையெனநூல்விளம்பும்.

என்பதனானுமறிக."

## சைவவினாவிடை.

### சைவபேதவியல்.

"சைவர்கள் சாதிபேதத்தினால் ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தர சைவர், பிரவர சைவர், அந்திய சைவர் என* அறுவகைப்படுவர்கள்."

## சிவஞானபாடியம்.

### சிறப்புப்பாயிரம்.

"தீக்கைப்பின் விதிக்கப்படும் ஆசாரங்கள் எல்லாம் வருணமும் ஆச்சிரமமும் பற்றியே தாரதம்மியம் ஓதுதலானும்......சாதியுந் தீக்கையாற் கழியுமாயின் ஆதிசைவம் மகாசைவம் அநுசைவம் அவாந்தர சைவம் என்னும் பகுப்பு லொன்மையானும், மகாசைவர்க்கு விதித்த ஆசாரம் அவாந்தர சைவாாற் செய்தல்கூடாமையானும்......வருணத்தினும் ஆச்சிரமத்தினும் தாரதம்மியம் உண்மை தெற்றென உணரப்படுமாகலின், அதனை இல்லையென்றலும் வேதவழக்கோடும் சிவாகம வழக்கோடும் மாறுகொள்வார் கூற்றேயாமென மறுக்க."

---

* சைவரூபதம் எழு என்று முற்கூறியிருக்க இங்கே ஆறஎன்றது முரணுகுமோஎனில், அநாதிசைவன் சிவனுதலின், அவனை நீக்கி ஆறு என்றமையின் மாறுபாடின்மை தெளிக.

### சிவஞானசுவாமிகள் அருளிய காஞ்சிப்புராணம்.

இருண்மலந் துமிக்குஞ் சிவாகம முறையி னீரிரு பாதமு மனுட்டித்
தருள்பெறு மாதி சைவர்க ளாதி யவாந்தர சைவரீ ருனோர்
மருவிவாழ் மாட மாளிகைப் பத்தி மருங்குடுத் துயர்வனப் பினதாற்
றெருட்டரு மனுதி சைவர்வீற் றிருக்குந் திவளொளிப் புரிசையே கம்பம்.

### திருவாவடுதுறை ஆதீனத்துக் கச்சியப்ப முனிவர்.

அருள்வளங் கொழிக்கு மைந்தொழி லாக
வடங்கிய சிறப்பொடு பூசை
மருவுமெவ் வகையு மாகம வழியான்
மயரறத் தெளிந்தவர் வரையாச்
சுருதிகண் மிருதி புராணமெக் கலையுந்
துகளறத் தெரிந்தவ ரிறைவன்
தருதிரு மேனி தீண்டிடு மாதி
சைவர்வாழ் வீதிகள் பலவால்.

### திருவிளையாடற் புராணம்.

ஆதி சைவரு மருச்சக ரொருவனே ரணைந்து
பூதி யீந்தன னெமக்கிது போலிலை நிமித்த
மீது நன்னெறிக் கேதுவென் றிருகையேற் றணிந்தூ.

### முப்போதுந் திருமேனி தீண்டுவார் புராணம்.

தெரிந்துணரின் முப்போதுஞ் செல்கால நிகழ்காலம்
வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பியவர்ச் சனைகள்சிவ வேதியர்க்கே யுரியனவப்
பெருந்தகையார் குலப்பெருமை யாம்புகழும் பெற்றியதோ.

### தடுத்தாட்கொண்ட புராணம்.

அனைத்துநா லுணர்ந்தீ ராதி சைவனேன் றறிவீ ரென்னை (௫௭)
(இது சுந்தரமூர்த்திகளது கூற்றாக அமைந்தது.)

அருமறை நாவ லாதி சைவனு ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானு மென்பால்
வருமுறை மரபு ளோரும் வழித் தொண்டு செய்தற் கோலை
இருமையா லெழுதி நேர்ந்தே னிதற்கிவை யென்னெ ழுத்து. (௬௧)
(இது அடிமையோலை)

### நம்பியாண்டார் நம்பிகள்.

நெறிவார் சடையரைத் தீண்டிமுப் போதிரீ டாகமத்தி
னறிவால் வணங்கியர்ச் சிப்பவர் நம்மையு மாண்டமரர்க்
கிறையாய்முக் கண்ணுமெண் டோளுந் தரித்திறில் செல்வத்தொடு
முறைவார் சிவபெரு மாற்குறை வாய வுலகினிலே.

உமாபதிசிவாசாரிய சுவாமிகள்.

செப்பலருந் தவமுடைய செம்மை யாளர்
சிறுகாலே மலர்வாவி திகழ மூழ்கி
யொப்பிறிரு நீறணிந்து நியதி யாற்றி
யோவாமே யைந்தெழுத்து முறைத்து மேன்மைத்
தப்பில்சிவா கமவிதியா லின்பா லன்பாந்
தன்மையா னன்மையாந் தகையா ரென்று
முப்பொழுதுந் திருமேனி தீண்ட வல்ல
முறைமையார் பிறவிதெறுந் திறமை யாரே.

இதுவரையுங் காட்டப்பட்ட அரிய பிரமாணங்களினுலே, ஆரியர்களே தம்மை ஆதிசைவராக்கி வைத்தார்கள் என்பதும், மற்றைய சைவபேதங்களேயும் வகுத்து வைத்தார்கள் என்பதும், இந்தப் பிரிவு அன்பு ஒழுக்கம் வழிபாட்டுமுறை என்பவற்றைப் பற்றியதன்று என்பதும் நூல் ஆதரவு பெருத பொய்க்கூற்றுக்களே என்று பசுமரத்தாணிபோற் பதித்து நாட்டப் பட்டது.

"சைவசமயத்திலே சாதிபற்றி வகுத்த இந்தப் பிரிவுகளுக்கு இடமில்லை — இந்த அநாகரிகமான பிரிவுக்குத் தமிழர்கண்ட சைவத்தில் இடமில்லை" என்று தீட்டினுரே பண்டிதர். அங்ஙனமாயின் சைவர்களேச்சாதி பேதம் பற்றி ஆதிசைவர் முதல் அந்திய சைவரீருக ஆகமம் வகுத்தவாருெழுகும் சான்றேர்களேயெல்லாம் அநாகரிகமானவர்கள் என்கிருரா? அந்தச் சான்றேர்களுடைய நூல்களுக்குச் சைவத்தில் இடமில்லை என்று சொல்லுகின்ருரா? சேக்கிழார் நம்பியாண்டார் நம்பிகள் உமாபதிசிவம் முதலிய அருட்செல்வருடைய வாக்குகள் எல்லாம் சைவத்துக்குப் புறம்பானது என்று சொல்லாமற் சொல்லுகிருரா? அன்றி அவர்கள் அருண்மொழிகளேயெல்லாம் "ஆணவத்தடிப்பன்றி வேறு யாது?" என்று சொல்லுகிருரா? இவற்றுக்கு விடையை அப்பண்டிதரே கூறித் துலக்கிவிடவேண்டும்.

## ஆதிசைவராகிய சிவகோசரியார்.

இன்னும் "சுந்தரமூர்த்திநாயனுரும், நம்பியாண்டார் நம்பியும், சேக்கிழாரும், மாணிக்கவாசகர், பட்டினத்தார், நக்கீரர் முதலியவர்களும் ஆதிசைவராகிய சிவகோசரியாரைப் போற்ருது அந்தியசைவர்களாகிய வேடர்தங் குலத்துதித்த கண்ணப்பரைப் போற்றினுர்கள். இன்றும் நாம் அவ்வாறே போற்றுகிறேம்" என்று எழுதிக்கொண்டு,

"ஆகவே நமது சைவத்திலே சாதிபற்றி வகுத்த இந்தப் பிரிவுகளுக்கு இடமில்லை என்பதையே நாம் சொல்லினும் செயலினுங் காட்டி வருகிறேம்" என்று தமது முடிந்த முடிபை நிறுத்தினுர் திரு. கா. பொ. இ.

"சைவத்திலே சாதி பேதம் இல்லை" என்ற தமது சொந்த முடிபைத் தாபிக்கவேண்டியே "ஆதிசைவராகிய சிவகோசரியாரைப் போற்ருது, அந்திய சைவராகிய கண்ணப்பரைப் போற்றினுர்" என்ற ஏதுவை எடுத்துக் கொண்டனர். கண்ணப்பநாயனுரைப் போற்றுவதில் ஆக்ஷேபிக்கும் சித்தாந்திகள் ஒருவரும் இல்லை. பெரிய புராணத்தொண்டர் எல்லாரையுமே சைவ

சித்தாந்திகள் போற்றிக்கொண்டுவருகிறார்கள். இனிப் பண்டிதர், தாம் ஆதிசைவராகிய சிவகோசரியாரைப் போற்றுவதும் போற்றாது விடுவதும் அவர் சொந்தவிருப்பம். ஆனால், நமக்கு வழிகாட்டிகளாகவுள்ள சிவஞானச் செல்வர்களுடைய அபிப்பிராயம் எது என்பதே நம்மால் ஆராய்ந்து கொள்ளப்படவேண்டியதாகும்.

நம்பெருமக்கள் "ஆதிசைவராகிய சிவகோசரியாரைப் போற்றவில்லை" என்றுசொலுதல் கேள்விச்செல்வமா? அன்றி நூலறிவால் விளைந்த இன்பமா? சுந்தரமூர்த்திகள், புகழ்த்துணைநாயனார், சடையநாயனார், இசைஞானியார் என்போரும், நம்பியாண்டார் நம்பிமுதலியோரும் ஆதிசைவமரபினர்களேயாவர். இவர்களை நாம் போற்றுவதில்லையா? இனித் திருத்தொண்டத்தொகை தொகைநூலும், நம்பியாண்டார் நம்பிகள் செய்த திருத்தொண்டர் திருஅந்தாதிவகைநூலும், அருண்மொழித்தேவர் பெரியபுராணம் விரிநூலுமாகக் கொள்ளப்படும். இம்மூன்றிலும் முப்போதுந்திருமேனி தீண்டுவார்களாகிய ஆதிசைவர்களைக் கூறிய பகுதிகள் முன்பே காட்டப்பட்டன. அவற்றை மறுத்துரைக்க இவரால்முடியுமா? இனி விரிநூலாகிய பெரியபுராணத்திலும், பிறநூல்களிலும் சிவகோசரியாரைப் போற்றிப்பாராட்டப் பெற்றிருக்கும் பகுதிகளிற் சிலவற்றை இங்கே எடுத்துக்காட்டுவாம்.

**கண்ணப்பநாயனார் புராணம்.**

எய்தியசீ ராகமத்தி லியம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமலரும்புனலு முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர்சிவ கோசரியார். (சகூ)

[சிவகோசரியார் - சிவத்தையே எப்போதும் கோசரித்துக் கொண்டிருப்பவர் என்பது பொருள். கோசரித்தல் - அறிவுக்கு விடயமாக்கிக்கொள்ளுதல், தியானித்தல்.]

2. பணிந்தெழுந்து தனிமுதலாம் பரனென்று பன்முறையாற்
றுணிந்தமறை மொழியாலே துதிசெய்து சுடர்த்திங்க
ளணிந்தசடை முடிக்கற்றை யங்கணரை விடைகொண்டு
தணிந்தமனத் திருமுனிவர் தபோவனத்தி னிடைச்சார்ந்தார்.

[தணிந்தமனத்திருமுனிவர் என்றது காமமுதலிய தீக்குணங்களையெல்லாம் வென்று ஐந்தவித்து ஆன்ற சாந்தமனமுடைய பெருமுனிவர். வரும்பாட்டிலே சேக்கிழார் "பெருமுனிவர்" என்றதும் இக்கருத்துப்பற்றியேயாம்.]

3. மாமுனிவர் நாடோறும் வந்தணைந்து
..................செப்பியவா கமவிதியா
லாமுறையி லர்ச்சனைசெய் தந்நெறியி லொழுகுவரால்.

[திருமுனிவர் - பெருமுனிவர் எனப்புகழப்பட்ட சிவகோசரியார் இங்கே மாமுனிவர் எனப்படுகிறார்.]

4. கானவர் பெருமா னார்தங் கண்ணிடந் தப்பும் போது
மூனமு தகந்த வைய ருற்றமுன் பிடிக்கும் போது

ஞானமா முனிவர் கண்டார் நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர் மறைக ளார்ப்ப.

[ஞானமாமுனிவர் - சிவஞானமுடைய பெருமுனிவர், கண்ணப்பநா யனாருடைய செயல்யாவும் இறைவனருளினாற்காட்டவும் உணர்த்தவும்பட்ட ஞானத்தைப்பெற்றவராதலின் ஞானமாமுனிவர் என்றார்.]

இவை கண்ணப்பநாயனார் புராணத்தில், சேக்கிழார் முனிவர் சிவ கோசரியாரைக் குறிப்பிட்டுப்போற்றிய இடங்களிற்சிலவாம்.

இனி, கண்ணப்பதேவர் திருமறத்தில் சிவகோசரியாராம் ஞானமா முனிவரை, "திருக்காளத்தி எய்திய சிவற்கு-வழிபடக்கடவமறையோன்" என்று போற்றும் நக்கீரனார்,

"துகிலிடைச் சுற்றி யிற்றாநீ ராட்டி
நல்லன விரைமலர் நறும்புகை விளக்கவி
சொல்லின பரிசிற் சுருங்கலன் பூவும்
பட்ட மாலையுந் தூக்கமு மலங்கரித்
தர்ச்சனை செய்தாங் கவனடி யிறைஞ்சித்
திருந்த முத்திரை சிறப்பொடு காட்டி
மந்திர மெண்ணி வலமிடம் வந்து
விடைகொண் டேகினன்........."

என அச்சிவகோசரியார் ஆகமவிதிவழிசெய்த பூசனையையும் பாராட்டு கிறார்.

"கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி—நனவிலு நாயேற் கருளினை போற்றி" என்றபடி, இறைவன் பக்குவ ஆன்மாக்களுக்குக் கனவிலும் வந்து அருள்புரிவர். அன்பராகிய திண்ணனார் அறிந்தநெறியிற் பூசிக்க, நிலைபெற்ற சைவாகமவிதிப்படி மாமுனிவராகிய சிவகோசரியார் அருச் சித்து "என்னுடைய நாயகரே! இவ்வநுசிதங்களைச் செய்தாரைக்கண்டி லேன்; அருளினாலே இவற்றை ஒழித்தருளவேண்டு" மென்று விண்ணப்பித் தாராக, இறைவன் அவருக்குக் கனவின்கண் எழுந்தருளி அருள் செய்த மையைச் சேக்கிழார் சுவாமிகள் கண்ணப்பநாயனார் புராணம் கருடு— கருசு—கருஎ—கருஅ—ம் செய்யுட்களாற்றெறிவிக்கின்றார். அவ்வருட்டிற த்தை நக்கீரதேவரும், திருக்கண்ணப்பதேவர் திருமறத்தில் அறிவுறுத்தி யருளுகின்றமையின், அதனையும் இங்கேகாட்டுவாம்.

"கனவிலா தரிக்கு மந்தணன் றனக்குச்
சீரார் திருக்கா ளத்தியு ளப்பன்
பிறையணி யிலங்கு பின்னுபுன் சடைமுடிக்
கறையணி மிடற்றுக் கனன்மழுத் தடக்கை
நெற்றிநாட் டத்து நிறைநீற் றாக
வொற்றை மால்விடை யுமையொரு மருங்கிற்
றிருவுருக் காட்டி யருளிப் .........
......... புரிவொடு பூசனை செய்யும்
குனிசிலை வேடன் குணமவை யாவன
வுரிமையிற் சிறந்தநன் மாதவ னென்றுணர்
............................உனக்கவன்

கலந்ததோ ரன்பு காட்டுவ னுளே
நலந்திகழ் அர்ச்சனை செய்தாங் கிருவெண்
றிறையவ னெழுந் தருளின னருளலும்
......... பூசனை புகழ்தரச் செய்து
தோன்று வண்ணம் இருந்தன னுக" என்பதாம்.

இனிக் கல்லாடதேவரும், கக-ம் திருமுறையில், திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தில் "நீங்காக் குணத்துக்—கோசரிக் கன்றவ னேசங் காட்ட" என உரைத்திருப்பதும் கண்டுகொள்ளலாம்.

"அறிவு அருள் அடக்கம் சிவபத்தி முதலியவைகளெல்லாம் திரண்டொரு வடிவம் எடுத்தாற்போன்றவரும், நல்வினை தீவினைகளால் வரும் ஆக்கக்கேடுகளிலே சமபுத்தி பண்ணுகின்றவரும், யாவரையும் மோகிப்பிக்க வல்ல மகா சௌந்தரியமுள்ள பெண்கள் வலியவந்து தம்மைத் தழுவினும் பரமாணுப் பரிமாணமாயினும் சித்தந் திரியாமல் அவர்களைத் தாயென மதிக்கும் மகா முனிவரும், திருக்காளத்தியப்பரைத் தினந்தோறும் சைவாகம விதிப்படி அருச்சிப்பவருமாகிய சிவகோசரியார் என்பவர்" என்று பெரியபுராண வசனத்தில் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலராற் சொல்லப் பட்டது.

சிவப்பிரகாச சுவாமிகள் சீகாளத்திப் புராணத்திலே, ஓடும் பொன்னு மொருநிகர் நோக்குவான்" என்பதாதியாகச் சிவகோசரியாரைப் போற்றுவர்.

சிலந்தி மாசுண மும்மதக் கரிசிவ கோசன்
மலைந்தி டுஞ்சிலை வேட்டுவன் கீரனே மடவார்
பலந்த ரும்வழி பாட்டினாற் பாட்டினாற் பரனைக்
கலந்து முத்திசேர் தென்பெருங் கயிலையுங் கண்டான்.

என்பது கந்தபுராணம். இச்செய்யுளால் ஆதிசைவரும் குமரகோட்டத் தருச்சகரும் சுப்பிரமணிய தொண்டரும் ஆகிய கச்சியப்ப சிவாசார்ய சுவாமிகள் தென்கைலையாகிய திருக்காளத்தியில் மறை முனிவராகிய சிவகோசரியார் முத்திபெற்றமையைப்போற்றியிருத்தல் கண்டு தெளிக.

இங்கே கூறியவைகளிலிருந்து சிவகோசரியார், திருக்காளத்தி அப்பரைச் சிந்தை நியமத்துடன் சைவாகம விதிப்படி அருச்சித்து வந்த மறைமுனிவர் என்பதும், திண்ணனர் தமது கண்ணைத் தோண்டி அப்பி இரத்தம் தடைப்படக் காணுதல் முதலிய நிகழ்ச்சிகளை யெல்லாம், இவருக்குக் காட்டுதற்பொருட்டே இறைவர் செய்தருளினர் என்பதும், இந் நிகழ்ச்சிக்கும் அதனுல் மேம்பட்டதான அன்பின் திறம் உலகில் விளங்கி உலகமுய்தற்கும் காரணமாயிருந்த புண்ணிய முனிவர் இவர் என்பதும், இவர் செய்தது சைவாகம விதிப்படியுள்ள பூசனை ஆதலின், திண்ணனுருடைய பூசையினை விதிக்குமாறுகக் கண்டு அஞ்சினர் என்பதும், ஆயினும் அது, இவர்பூசையினையே பின்பற்றித் தம்மை மறந்து அன்பே உருவமாகச் செய்யப்பட்டமையின், இறைவனுக்கு உகந்ததாயிற்று என்று

கண்டனர் என்பதும், இச்சிவகோசரியாரைச் சேக்கிழார் முனிவர் நக்கீரர் முதலிய அருளாளர்கள் போற்றியுள்ளார்கள் என்பதும், சைவாகம விதிப்படியே ஆலய பூசைவிழா முதலியவைகள் செய்யப்படவேண்டும் என்பதும் விளக்கமாதல் கண்டு உண்மை கடைப்பிடிக்க.

ஆகவே சிவகோசரியாரைப் போற்றவில்லை என்ற ஏதுவைக்காட்டி, சாதியில்லை என்று தமது முடிபைத் தாபிக்கமுற்பட்டது அநுகூலம் பெறுதொழிந்தமை காண்க. இவற்றையெல்லாம் பொருந்தாக் கூற்றென்று தாபிக்க வல்லுநராயின் அங்ஙனம் செய்யக்கடவர்,

## ஆதிசைவ சந்தானம்.

திவ்யாகமங்கள் இருபத்தெட்டனுள் ஒன்றாகிய காமிகாகமம் ஆசார்ய லக்ஷணமுரைக்குங்கால் சைவர் எழுவகைப்படுவார் என்று கூறி, சிவமூர்த்தி அநாதி சைவர் என்றும், கௌசிகர் முதலிய பஞ்ச இருடிகள் சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களில் தீக்ஷிக்கப்பட்டவர் என்றும், அவர்கள் வழிவந்த சிவப்பிராமணர்கள் தாபனாதி கிரியைகட்கு அருகரென்றும் உரைத்தது. இதுவே ஆதிசைவ சந்தானம் தோன்றிய முறை.

திரிலோசனசிவாசாரியர் இயற்றிய சித்தாந்த சாராவளி கிரியாபாதம் அகூ-ம் சுலோகத்துக்கு அநந்தசிவாசாரியர் செய்த வியாக்கியானத்தின் சாரம் முன்வருமாறு— பரதகண்டத்தில் கோதாவரி ஆற்றங்கரையில் மந்தர காளிபுரத்தில் தூர்வாசமுனிவரால் தாபிக்கப்பட்டது ஆமர்த்தகமடம். அம்மடத்தில் கௌசிகர் முதலானவர் ஸ்ரீகண்டபரமசிவனை உபாசித்து, அவரிடத்தில் ஆகமஞானம் பெற்றனர். இவர்களுடைய சிஷ்யர் சனற்குமாரர், சனகர், சனாதனர், சனந்தனர் என்பவர்களும் அவ்வாறே ஸ்ரீகண்டரை உபாசித்து ஆகமோபதேசம் பெற்றனர். இவர்கள்பொருட்டு ஆமர்த்தக மடத்தினின்று இரணபத்திரம் கோளகி புஷ்பகிரிஎன்னும் மூன்றுமடங்கள் செய்யப்பட்டன. இவற்றுள் ஆமர்த்தகமடத்துக்கு சனற்குமாரரும், புஷ்பகிரிமடத்துக்குச் சனகரும், கோளகிமடத்துக்கு சநாதனரும், இரணபத்திரமடத்துக்குச்சனந்தரும் அதிபதிகளாம். இந்நான்குமடங்களும் மந்தர காளீசருடைய சந்நிதியில் உள்ளன.

ஆமர்த்தகமட சம்பிரதாயத்துத்தோன்றிய கௌசிகர் முதலிய முனிவர் முதலாம் மனுவாகிய சுவாயம்புமனுவின் எல்லைவரையும் இருந்தனர். சுவாரோசிஷ மனுவின் காலத்திலே பிராசாபத்திய முனிமுதலியோர் அம்மடங்களில் நாயகர்களாய் இருந்தார்கள். அவர்களுள் நான்கு ஆச்சிரமங்களும் உள்ளன. அப்படியே மற்றை மனுவந்தரங்களிலும் அச்சந்ததி இருந்தன. நிகழாநின்றகலியுகத்தின் ஆரம்பத்திலே அச்சைவப்பிராமணபாரம்பரியத்திலே ஸ்ரீவியாசசம்பு குருமுதலியோர் சம்பிரதாயபதிகளாய் இருந்தனர்.

ஒருகாலத்திலே இராசேந்திரசோழன் என்னும் அரசன் வடக்கே சென்று கங்கையாடி மீளுகின்றுழி, அந்தச்சிவப்பிராமணர்களை அழைத்துக் கொண்டுவந்து தன்னுடைய இராச்சியத்திலும் காஞ்சியிலும் பிறவிடங்களிலும் இருத்தினன். நால்வருணத்தாரும் பிறரும் அச்சிவப்பிராமணரிட

த்தில் தீக்ஷையும் ஆகமோபதேசமும் பெற்றனர் என்பதாம். இதனை நீர் வேலிச் சங்கரபண்டிதர் அவர்களுடைய "சற்பிரசங்கத்" தாலுமறிக.

இவ்வாறே நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார்முனிவர், உமாபதிசிவாசார்ய சுவாமிகள் திரிலோசன சிவாசாரியர், சிவஞானமுனிவர், கச்சியப்பமுனிவர்முதலிய முன்னோர் நிறுத்திய வரம்பிகவாது நின்று நோக்குவோமாயின், ஆதிசைவமுதலிய அறுவகைச்சைவபேதமும் சைவாகம வழக்கும் தற்கால ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டகாலமுதலே நம்பரதகண்டத்தில் தமிழ்நாடுட்பட்ட எல்லாநாடுகளிலும் பாரம்பரியமாக நிலவிவந்தன என்பது வெள்ளிடை விலங்கல் போற் றுலக்கமாகின்றது.

இனிச் சரித்திர ஆராய்ச்சியினால் நமது சமயக்கொள்கை எல்லாவற்றையும் அளந்து காணுதல் முடியாது என்பது காட்டுவாம்.

"உலகமே சிருட்டிக்கப்பட்டு ஆறாயிரம் வருடங்கள் தான் ஆயிற்று என்னும் கொள்கையையுடைய மேல்நாட்டாரது தோற்றம் அபிவிருத்தி சமய வளர்ச்சி முதலிய கூறுவதற்கு அவர்கள் அநுசரித்து வருவது சரித்திர ஆராய்ச்சி என்பது. அவர்கள் தோற்றம் அபிவிருத்தி சமய வளர்ச்சி ஆதிய எல்லா விஷயங்களையும் ஆறாயிரம் ஆண்டுகட்கு உட்படுத்தியே கூறுவர். அவர்கள் கொள்கைதான் உண்மையென்று கொண்டு, நமது நாட்டு மனிதர்களின் தோற்றம் அபிவிருத்தி சமயப்பகுதி எல்லாம் அந்த ஆறாயிரம் வருஷத்துக்குட்படுத்தியே கூறவேண்டுமென்பது அவர்கள் நோக்கம். ஆங்கிலக் கல்வி கற்ற நம்மவர்களுட் சிலரும் அக்கொள்கையைக் கைப்பிடித்தார்கள்." ஐந்தாவது மனுவின் காலத்தில் தில்லைவாழந்தணர்கள் சிதம்பர தலத்துக்கு இரணியவர்மரென்னும் அரையனால் அழைக்கப்பட்டு வந்தார்கள் என்று கோயிற் புராணத்தில் உமாபதிசிவம் கூறியருளியதைச் சரித்திர ஆராய்ச்சியாளர் நம்புவாரா? அமுதங்கடைந்தது முதலிய புராணசரித்திரங்களை ஒப்புவாரா? ( திரு. நா. வி. ஆராய்ச்சி ) "முன்னு ணிகழ்ந்த பன்னீருகத்து- வேறுவேறு பெயரி னூறின் றியன்ற - மையறு சிறப்பிற் றெய்வத் தன்மைப்—புகலி நாயக விகல்விடைப் பாக" எனப்பட்டினத்தடிகள் அருளியதை நம்புவார்களா?

ஆகையினாலே, சைவசமய உண்மைகளை ஆராய்ந்தறிய வேண்டுமானால், யுகங்கள், மநுவந்தரம், கற்பம் முதலியவற்றை உடன்பட்டு ஆராய்ந்து கொள்ள முற்படுவதே முறையாகும். அதுவன்றி 5000, 6000 வருஷத்துக்குள் மாத்திரம் ஆராய்பவர்கள் அவ்வுண்மைகள் முழுவதையும் சந்தேகமின்றி உணரமாட்டார்கள்.

## காலப் பிரமாணம்.

மனிதர்களுடைய ஒருவருஷம் தேவர்களுக்கு ஒருநாளாகும். தேவர்களுக்கு உத்தராயணம் பகலும் தக்ஷிணாயனம் இராத்திரியுமாயிருக்கும். மனுஷ வருஷம் 360 கொண்டது தேவர்களுக்கு ஒருவருஷமாகும். தேவ வருஷம் 12000 கொண்டது ஒரு சதுர் யுகமாம்.

| | | | |
|---|---|---|---|
| கிருதயுகத்துக்கு | மனுஷ வருஷம் | ... | 1728000 |
| திரேதாயுகத்துக்கு | ,, | ... | 1296000 |
| துவாபரயுகத்துக்கு | ,, | ... | 864000 |
| கலியுகத்துக்கு | ,, | ... | 432000 |
| ஆகச்சதுர்யுகத்துக்கும் | ,, | ... | 4320000 |

இப்படி ஆயிரம் சதுர் யுகம் கொண்டது, பிரமாவுக்கு ஒரு பகலாகும். பின்னும் ஆயிரம் திரும்பினால் பிரமாவுக்கு ஒரு இராத்திரியாகும். ஆகவே இரண்டாயிரம் சதுர்யுகங்கொண்டது பிரமாவக்கு ஒரு நாள் எனப்படும். பிரமாவினுடைய பகலாகும் ஆயிரஞ் சதுர்யுகத்திலே பதினன்கு மனுக்கள் அதிகாரம் பண்ணுவார்கள். ஒவ்வொரு மநுவந்தரத்துக்கும் எழுபத்தொரு சதுர்யுகமாகும். எழுபத்தொரு சதுர்யுகம் மனுஷிய மானத்தினலே 306720000 முப்பதுகோடியே அறுபத்தேழு லக்ஷத்திருபதினயிரம் வருஷங்களாகும். இப்படிப் பதினன்கு மநுவந்தரங்களானல், பிரமாவுக்கு ஒரு பகலாகும். இதன் முடிவிலே தினப்பிரளயம் உண்டாகும்.

அப்பொழுது பிரமா பகலளவினதாகிய இராத்திரியிலே யோகநித்திரை செய்வர். இப்படி ஆயிரம் சதுர்யுக அளவையுடைய இராத்திரி கடந்த பின்பு பிரமா திரும்பியும் படைத்தற்றொழில் செய்வர். பிரமாவினுடைய ஒரு பகல் ஒரு கற்பம் எனப்படும். கற்பமாவது: சிருட்டிமுதற் பிரளய மிறுதியான காலம். ஒருகற்பத்துக்கு மனுஷவருஷம் 4320000000 நானூற்று முப்பத்திரண்டுகோடி.

தற்காலத்திலே இருக்கிற பிரமாவுக்கு முதற் பரார்த்தமாகிய ஐம்பது வயசு சென்றன. இப்பொழுது நடப்பது இரண்டாம் பரார்த்தத்தில் முதல் வருஷத்து முதன்மாசத்திலே முதற்றினம். இது சுவேதவராக கற்பம் எனப்படும். இப்போது ஏழாம் மநுவாகிய வைவஸ்வத மநுவினுடைய காலம் நடக்கிறது. இவருக்கு இப்பொழுது இருபத்தெட்டாஞ் சதுர்யுகத்துக் கலியுகம் நடக்கிறது. பிரமாவினுடைய ஆயுசு பரமெனப்படும். அதிற்பாதியாகிய ஐம்பது வயசு பரார்த்தமென்று சொல்லப்படுமென்றறிக. இவ்வுண்மைகள் கிரணம் சுப்பிரபேதம் முதலிய ஆகமங்களாலும் சித்தாந்த ஸாராவளி கந்தபுராணம் வாயுசங்கிதை காஞ்சிப்புராணம் விஷ்ணுபுராணம் மற்சபுராணம் முதலியவற்றாலும், ஆறுமுகநாவலர் நான்காம் பாலபாடத்தில் காலப்பிரமாணம் என்னும் பாடத்தானும், சங்கற்ப வாக்கியத்தானும் உணரப்படும்.

**கற்பம் பல.**

இனிக் கற்பங்கள் அநேகமுண்டென்பது "கற்பங்க டோறு நடஞ் செய் கழலடைந்தோர் கணிப்பிலர் தஞ் சிறப்பங்க டரும்புகழுஞ் சென்றன ......" என்வரும் உமாபதிசிவாசாரியர் திருவாக்கானும் "அண்டங்களுக் களவும் ஆண்டுள்ள பொருள்களும் ஆண்டாண்டைக்குரிய புவனங்களுஞ் சிறுபான்மை தம்முள் வேறுபடக் கூறுமாகமங்கள் ஒன்றோடொன்று முரணுமாலோ எனின்,—முரணது; என்னே? கற்பந்தோறும் படைப்பு

வேறுபாடுடைமையின், அவ்வேறுபாடுபற்றி அவை அங்ஙனம் வேறு படக்கூறுதல் பொருந்துமாகலான் என்பது'' எனவரும் சிவஞானபோத மாபாடியத்தானும் நன்கு அறியப்படும்.

## இரணியவருமர் தில்லைக்கு வந்தகாலம்.

இனி, இரணியவன்மனூர் தில்லைக்குவந்தகாலம் எது எனக் காட்டுவாம். கௌடதேச இராசகுமாரனாகிய இரணியவன்மனூர், ஆங்கிருந்து தில்லைக்குவந்து, வியாக்கிரபாதமுனிவரை நமஸ்கரித்துக் கும்பிட்டுக்கொண்டு நிற்க; யோகத்தில் இருந்த வியாக்கிரபாதமுனிவர், உள்ளத்திலே நிருவிகற்பக்காட்சியை நீங்கி, பொதுஞானம் வந்து அணுகத் தமது சந்நிதியிலே நிற்கும் சிங்கவருமனுரைப்பார்த்து மூன்று காலங்களையும் ஆராய்ந்து, அந்தக் கற்பம் பாத்மகற்பம் என்னுந் தன்மையை அறிந்தார் என்றும், தமக்கும் பதஞ்சலிமுனிவருக்கும் ஆனந்த நிருத்தம் தரிசிப்பித்தருளிய கற்பகாலம் எந்தக்கற்பமோ என்று அறியாவண்ணம் நெடுங்காலஞ் செல்லப்பெற்ற அந்தக் கற்பத்திலே ஐந்தாம்மனுவின் குமாரனென்று அறிந்து சிங்கவன்மனே என்றுஅழைத்தார் என்றும் உமாபதிசிவாசார்ய சுவாமிகள் அருளுகின்றமையின், சிங்கவன்மனூர் சிதம்பரதலம் வந்த காலம் பாத்ம கற்பமென்று நிச்சயிக்கப்படும்.

"போனபல காலத்தின் பொலிவுகளு மினிப்புணர
மேனிகழுங் காலத்தின் விரிவுகளுஞ் செல்கின்ற
தானமலி காலத்தி னளவுகளு மாராய்ந்து
பான்மைதருங் கற்பமிது பாத்மமெனும் பரிசுணர்ந்து,

அக்கால மணிகண்ட னுடலருளியகால
மெக்கால மெனக்கால மெய்தியவிக் காலத்து
மிக்காலுந் திரைத்தரைக்கு வேந்தாவான் வியன்கவுட
திக்கான்வெய் யவன்மரபிற் றிகழ்மனுவா மெனத்தெளிந்து,

கொற்றவன்சே யெதிர்நின்று குவித்தகரத் துடனடுங்கச்
செற்றமின்மா முனிமகிழ்ந்து சிங்கவன்மனேயென்றான்''

என்பதுகோயிற்புராணம். கி. மு. கி. பி. எனஆராயின், இவ்வுண்மையை அறியமுடியுமா?

## பதஞ்சலி பத்ததி.

இப்போது நிகழும் சுவேதவராக கற்பத்திற்கு அநேககற்பங்களுக்கு முன்னுள்ள அப்பாத்ம கற்பத்திலே இருந்த சிங்கவருமனூர் என்னும் இரணியவருமர், தில்லைக்குவந்து திருநிருத்த தரிசனம் கண்டு நடேசப்பெருமானுக்குத் திருவம்பலமும் திருமூலட்டானேசுரருக்குத் திருக்கோயிலும் நிருமித்தார் என்றும், வியாக்கிரபாதர் உத்தரவுப்படி அங்கிருந்து பிரமதேவர் வேதவிதிப்படி செய்த யாகத்துக்குக் கங்கைக்கும் யமுனைக்கும் இடையினுள்ள அந்தர்வேதி நாட்டிற்சென்றிருந்த வேதாகமங்களில் வல்ல அர்தணர்கள் மூவாயிரவர்களையும் மனைவி மக்களுடன் சிதம்பரத்தில் அழைப்பித்து, அவர்கள் வசிக்கத் திருமாளிகைகள் கட்டுவித்துக்கொடுத்தார் என்றும், சிதம்பராலயத்திலே செயற்பாலனவாகிய பூசை திருவிழா

முதலியன செய்தற்பொருட்டு இறைவனூல்களாகிய வேதசிவாகமப் படியே பதஞ்சலி முனிவரைக்கொண்டு ஒரு பத்ததி செய்வித்தார் என்றும், பூசை திருவிழா முதலியவற்றிற்கு வேண்டும் நிபந்தங்கள் அமைத்தார் என்றும் கோயிற்புராணமும் சிதம்பர மஹாத்மிய முதலிய நூல்களும் செப்புகின்றன. வடமொழி வேதசிவாகமப்படி சிதம்பரபூஜை உத்ஸவங்களுக்கு விதாயகமாய்ப் பதஞ்சலி ரிஷியால் இயற்றப்பட்ட சாஸ்திரமானது அம்முனிவருடைய பெயராற் பதஞ்சலிபத்ததி என்று இன்றுமிருத்தல் பிரத்தியக்ஷம். அது உமாபதிசிவாசாரியசுவாமிகள் அருளிய கோயிற் புராணத்தில்,

இத்தகைய முனிவருட னொருநாண் மன்ன
　　னிலங்கியபே ரம்பலத்தி னிருந்து நாலின்
வைத்தமுறை யிறைவற்கு மஞ்ச னந்தூ
　　மலரமுது முதலான மல்க வைத்து
நித்தவிழா வெழுவேண்டுஞ் செல்வ நல்கி
　　நிலவுபதஞ் சலிமுனியா னிறுத்து வித்த
புத்தகமின் புறமுனிவர் யானை யேற்றிப்
　　பொற்கோயில் வலங்கொண்டு புகுவித் தார்கள்.

எனவும், சிதம்பர மஹாத்மியம் மஹோத்ஸவவிதி என்னும் இருபத்தைந் தாம் அத்தியாயத்தில்,

[illegible]
[illegible] ॥ ௫௦ ॥
[illegible]
[illegible] ॥ ௫௧ ॥
[illegible]
[illegible] ॥

எனவும்,

ஆறுமுகநாவலர் இயற்றிய சிதம்பரமான்மியத்துத் திருவிழாச்சருக்கத்தில், "சிதம்பராலயத்திற் செயற்பாலனவாகிய பூசை திருவிழா முதலியன செய்தற்பொருட்டு, வேதசிவாகமப்படியே பதஞ்சலி முனிவரைக்கொண்டு, ஒரு பத்ததி செய்வித்து, அதனை யானைமேலேற்றித் திருக்கோயிலை வலஞ் செய்வித்துக் கனகசபையினுள்ளே பிரவேசிப்பித்தார். நித்தியபூசை, பன்னிரண்டு மாசப்பூசை......ஆனியுற்சவம், ஆடிநீர் விளையாட்டுற்சவம்...... முதலியவைகளெல்லாம் விதிப்படி செய்விப்பாராயினர்" எனவும் வருவதினால் உணரப்படும்.

மேற்கூறியபடி வேதாகமங்களுக்கு உரிமைபூண்ட தில்லைவாழந்தணர்களை "பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டெரி யோம்புஞ்—சிறப்பர்" எனவும் "ஓவா முத்தீ யஞ்சுவேள்வி யாறங்கம் நான்மறையோர், ஆவே படுப்பா ரந்தணாள ராகுதிவேட் டுயர்வார், மூவாயிரவர் தங்களோடு முன்னரங் கேறிநின்ற கோவே" எ ன வும் தேவாரத்திருமுறை செப்புகின்றது. "தினைத்தனை வேதங்குன்றாத் தில்லைச் சிற்றம்பலத்தே" என்பது திருவாத

ஆரடிகள் திருவாக்கு. "வேதவொலியறாத்தில்லை" எனப்பெரியபுராணம் பகரும். உயர்வொப்பில்லாத இச்சிதம்பர தலத்தை இக்காலத்திலும் தரிசிப்பவர்கள் அங்கு ஓதப்படுவது ஆரியவேதமே என்பதைக் காட்சிப்பிரமாணத்தாலும் அறிவார்கள்.

மேலும் தில்லைவாழந்தணராகிய உமாபதி சிவாசார்யசுவாமிகள் "தத்ரைவ ஸூத்ரபாஷ்யகாரேண ஶிவாக்ரயோகிநா ப்ராமாண்யம் இஹ ப்ரதிபாத்யமாநாநாம் காமிகாதி வாதுலாந்தாநாம் ஸர்வ ப்ராமாண்ய ஸித்த்யர்த்த ஸூத்ரம்||" என்று பௌஷ்கராகமத்துப் பிரமாணபடல சுசம் சூத்திர அவதாரிகையிற் கூறி, அந்த அவதாரிகையிற் சுட்டப்பெற்ற காமிகாதி வாதுளாந்தமான ஆகமத்தோற்றத்தை விளக்கியிருப்பதுங்கண்டு உண்மை கடைப்பிடிக்க.

இங்கே சொல்லியவைகளினல் எண்ணுக்கடங்காத பூர்வகாலந்தொட்டே நான்மறைக்குரிய செந்தீவழிபாடு முதலியனஉடைய அந்தணர்கள் தமிழ்நாட்டில் இருந்து வருகிறார்கள் என்பதும், பாத்ம கற்பத்திலேயும் ஆரியவேதங்களும் சிவாகமங்களும் அனுசரிப்பில் இருந்தன என்பதும் அவ்வேதசிவாகம வழியே பதஞ்சலிமுனிபுங்கவர் சிதம்பரபூஜா பத்ததி செய்தருளினர் என்பதும், அந்த ஆரிய வேதங்களும் சிவாகமங்களுமே இன்றுவரை பயிலப்பட்டு வருகின்றன என்பதும், காமிகம் காரணம் முதலிய ஆகமங்கள் 9ம் நூற்றாண்டுக்குப் பின் குருக்கள்மார் எழுதியதென்பது குழறுபாடேயாம் என்பதும் நன்கு விளங்குகின்றன.

## பதினேண்பத்ததி.

இன்னும் காமிகாதி ஆகமங்களை மூலமாகக் கொண்டே சிவாசாரியர்கள் பதினெண்மர்கள் பத்ததிகளைச் செய்தருளி உலகை உய்வித்தார்கள் என்றும் அவற்றின் வழியே சைவநன்மக்களால் நந்தமிழ்நாட்டில் சைவக்கிரியைகள் செய்யப்பெற்று வருகின்றன என்றும் தெளிந்துகொள்க. பத்ததி செய்த சிவாசாரியர்கள் பதினெண்மர் என்பது "பதினெண்மடத்திற் பயிலும்—முதலிகளும்" என்னும் காளமேகப் புலவர் வாக்காலும் நிச்சயிக்கப்படும். இப்பாடற்பகுதிக்கு சிவாகமபத்ததிகள் பதினெட்டையும் இயற்றிய ஆசாரியர்கள் பதினெண்மருடைய பரம்பரையினர் என்று பொருள் கொள்வர் தெளிந்தோர். இத்தியாதி நியாயங்களைக்கொண்டு நோக்குமிடத்து, நமது புண்ணியபூமி பழங்காலந்தொட்டே வேதாகம வழக்கு நிறைந்த நாடாகவே விளங்கியமை புலப்படும். இவற்றையெல்லாமோராது சிவாகமங்களையும் சைவக்கிரியைகளையும் இகழ்ச்சி செய்ய முற்பட்டமை குறித்து வருந்தாதிருக்க முடியவில்லை.

### சிவதருமோத்தரம்.

1. வேதநிந் தகனே புன்மை விடக்குறும் புலைய னவான்
வேதநல் லந்த நிந்தன் வெவ்வினை வேட னவான்
வேதக ஞானி நிந்தை விளம்பினன் பித்த னவான்.

2. வேத நீதியை விட்டவர் தாம்மிக
வேத மாய நரகினை யெய்துவார்.

## வேதமும் வேள்வியும்.

இனி வேள்வியைப் பற்றிய ஆராய்ச்சி வருமாறு:— வேதத்தில் வேள்வி விதிக்கப்பட்டிருத்தலின், அது கொலைவிதிக்கும் நூலென்றும், யாகாதிபதியாகச் சிவபெருமான் இயம்பப்பெற்றிலர் என்றும் கழறுகின்றார்கள். இங்ஙனம் வேதத்திற் கூறப்பட்ட வேள்வியை நிந்தைசெய்து,

வேத வேள்வியை நிந்தை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை

என்னும் திராவிடசுருதிக்கு இலக்காய்கிற்கின்றனர். திருவள்ளுவநாயனாரே வேள்வி சிறந்தது என்பதை

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

என்பதனால் வெளியாக்கினர். வேள்வி சிறப்பற்றதாயின் "அவிசொரிந் தாயிரம் வேட்டலின்" என்பதனால் உயிர்செகுத்துண்ணாமைக்கு வந்த சிறப்பு யாது? மேலும் அவரே "அவியுணவி னான்றோர்" என்றுரைத்தார். "அவியாகிய உணவு தேவர்க்கு வேள்வித்தீயிற் கொடுப்பன" என்றார் பரிமேலழகியாரும். இதுபற்றித் தருமையாதீனப்புலவர் திரு. மூத்து. சு. மாணிக்கவாசகமுதலியார் ஞானசம்பந்த வெளியீட்டில்,

"தென்னாட்டும் வடநாட்டும் அரசாண்ட தொல்வேந்தரெல்லோரும் வேள்விபலவும் புரிவித்துப் புத்தேளிரை மகிழ்வித்து மழைவருவித்து நாடு காக்குந் தங்கடமையை நன்குநிறைவேற்றிய முழுவுண்மையை மறைக்க வல்லாருமுளரோ? உளராயின் வருக. அறைகூவி அழைக்கின்றேன். வேள்விவகையுள் ஒன்றான விருந்தோம்பலை உடன்பட்ட திருவள்ளுவர்க்கு மற்றவை உடன்பாடல்ல எனல் எவ்வாறு பொருந்தும்? வானோர்க்குச் செய்யுஞ்சிறப்பொடு பூசனையாம் வேள்வியையும், அவிசொரிந்து ஆயிரம் வேட்டலையும், வேள்விப்பயனையும் திருவள்ளுவர் சிறிதேனும் அலட்சியஞ் செய்தாரென்றற்கிடனுண்டோ? ஒன்றனுயிர் செகுத்துண்ணாமை நலத்தை வற்புறுத்துமிடத்தில் வேள்வியையெடுத்துரைத்தது ஒன்றே சான்று பகருமே! என்று எழுதியுள்ளார்கள். ஆகவே "அவிசொரிந் தாயிரம் வேட்டலின்" என்ற திருக்குறட்பா, பூருவபக்ஷத்தாருக்குச் சிறிதும் அனுகூலமாவதில்லை என்பது நிச்சயமாயிற்று. இனித்திருமுறைகளை ஆராயின், சோமாசிமாறநாயனார் சிவபெருமானை அதிபதியாகக்கொண்டு எழுலகும் சந்தோஷிக்கும்படி யாகம் செய்தனர் என்று பெரியபுராணத்திற் பகரப் படுதல் காணலாம்.

யாழின் மொழியா ளிடப்பாகரைப் போற்றும் யாகம்
ஊழின் முறைமை வழுவா துலகங்க ளான
ஏழு முவப்பப் புரிந்தின்புறச் செய்த பேற்றால்
வாழுந் திறமீசர் மலர்க்கழல் வாழ்த்த லென்பார்.

மேலும் திருவாவடுதுறையிலே பரமசிவனால் அருளப்பட்ட பொற்கிழிபெற்றுத் தந்தையார்கையிலே கொடுத்து, சிவனையே தலைவராக நினைந்து வேதவிதிப்படி செய்யப்படும் யாகத்தை நீரும் சீகாழியிலே யிருக்கின்ற மற்றைப் பிராமணர்கள் சமஸ்தரும் செய்ய இக்கிழி குறையாது

மிகும் என்று சொல்லி, விடைகொடுத்து அவரைச் சீகாழிக்கு அனுப்பி யருளினர் திருஞானசம்பந்தப்பெருமான் என்றும் பெரிய புராணத்தில் கூறப்படுதல் உணர்ந்துகொள்ளலாம்.

ஆதி மாமறை விதியினு லாறுசூழ் வேணி
நாத னுரைமுன் னுகவே புரியுநல் வேள்வி
தீது நீங்கநீர் செய்யவுந் திருக்கழு மலத்து
வேத வேதிய ரனைவருஞ் செய்யவு மிகுமால்.

செந்தமிழ்ப்பரமாசாரியாராகிய முருகக்கடவுளுடைய ஒரு திருமுகம் "அந்தணர் வேள்வி யோர்க்கும்" என்று நக்கீரர் அருளியிருக்கிருர்.

பிரமதேவர் கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியிலுள்ள அந்தர் வேதியில் வேதமுறைப்படி ஓர் யாகஞ்செய்ய ஆரம்பித்தார் என்றும் அந்த யாகத்திற்குத் தில்லைவாழந்தணர்கள் வராதிருப்பதையோர்ந்த பிரமன் நேரில் வந்து பிரார்த்தித்து, வியாக்கிரபாதருடைய உத்தரவின்படி அழைத்துச் சென்றனர் என்றும், ஐந்தாம் மனுவந்தரத்திலே சிங்கவருமர் தில்லைக்கு வந்து திருநடனந்தரிசித்து, இறைவனுக்கு ஆலய மெழுப்பி, திருவிழா முதலியன நடாத்த ஆரம்பித்தபோது, அந்தர்வேதிக்கு யாகங்காணச் சென்ற அந்தணர்கள் மூவாயிரர்களையும் தருவித்துத் திருமாளிகை அமைத்து இருத்தினர் என்றும் கோயிற்புராணம் கூறும். இத் தில்லைவாழந்தணர்களைத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் "பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டெரியோம்பும்...சிறப்பர்" என்று பாராட்டியிருக்கின்றுர்கள்.

தேவர்கட்குச் செலுத்தப்படும் அவியை ஏற்பவரும், அக்கினிக்குத் தலைவரும், யாகரட்சகரும், யாகாதிபதியும், சிவபெருமானேயாம் என்று கச்சியப்பசிவாசாரியரும், சிவஞானமுனிவரும் வற்புறுத்தியுள்ளார்கள். சிவபெருமானை யாகாதிபதியென்றும் 'யக்ஞத்துக்கு ராசாவாக உங்களைக் காக்கும்பொருட்டு உருத்திரரை நாடுக' என்றும், இரகசியமாகிய இருபத்தொரு யாகங்களும் உம்மிடத்திலேதான் வைக்கப்பட்டன என்றும் இருக்கு வேதங்கூறுகின்றது. யாகங்களிற்செய்யப்படும் சோமவிளியும் பசுநியோசனமும் சிவபெருமான் பொருட்டுச் செய்யற்பாலன என்றும், பால் தயிர் முதலிய அவிசும் அவருடையன என்றும் வேதங்கூறும். இதனைச் சைவாசாரியராகிய ஹரதத்தாசாரியசுவாமிகள் சதுர்வேததாற்பரிய சங்கிரகத்துள் கிறுவியுள்ளார்கள்.

பொய்யடிமையில்லாப் புலவராகிய நக்கீரதேவரும், திருமுருகாற்றுப் படையுள், "மூன்றுவகைகுறித்த முத்தீச்செல்வத் திருபிறப்பாளர்" என்றும், பெருந்தேவபாணியில், "வேதமு நீயே வேள்வியு நீயே" என்றும், கூறியிருக்கிருர். மாணிக்கவாசகசுவாமிகள் "வேதமும் வேள்வியுமாயினர்க்கு" என்று அருளுகின்றுர். இங்கே இருபத்தொரு யாகமும் உம்மிடத்திலே வைக்கப்பட்டுள்ளனவென்னும் சுருதியின்பொருளிலேயே இவர்கள் துதித்திருக்கின்றமை திண்ணமாகத் தெரிகின்றது.

அப்பர் சுவாமிகள்.

"பறப்பையும் பசுவும் படுத்தும்பல
திறத்தவு முடையோர் திகழும்பதி" எனவும்,

**சுந்தரமூர்த்தி சுவாமிகள்.**

தூய நெய்யால்—வட்டக்குண்டத் தெரிவளர்த் தோம்பி
மறைபயில்வார்—அட்டகுண்டத் துண்பதறிந்தோ
மேல் நாமிவர்க் காட்பட்டோமே. எனவும்,

**கண்டராதித்தர்**

ஓவா முத்தீயஞ்சு வேள்வி யாறங்கம் நான்மறையோர்
ஆவே படுப்பா ரந்தணாள ராகுதிவேட்டுயர்வார்
மூவா யிரவர்தங்களோடு முன்னரங்கேறி நின்றகோவே எனவும்,

**திருவாலியமுதனார்.**

ஆத்தனைத் தான்படுக்கும் அந்தணர் தில்லையம்பத்துள்
எனவும், திருவாய்மலர்ந்தருளியிருப்பதுங் காண்க.

பாண்டியருள்ளும் ஒரு வேள்வியல்ல பலவேள்வி செய்தாருமுளர்; புறநானூற்றிலே, கரு-வது செய்யுளில்;

..................புரையில்
நற்பனுவ னல் வேதத்
தருஞ் சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பலகொல்

எனப் பாடப்பட்டுள்ளது. இதனால் யூபஸ்தம்பங்களை நட்டு நான்குவேத முறைப்படி பல யாகங்களைச்செய்து முடித்தமையால் பல்யாகசாலை முது குடுமி என்று புகழப்படுகின்றான் ஓர் தமிழ் வேந்தன். யூபஸ்தம்பங்களை நட்டது யாகபசுக்களைக் கட்டுதற்கேயன்றோ! இச்செய்யுளிற் கூறியிருக்கும் 'நற்பனுவல் நால்வேதம்' என்றதும், இந்த நவமார்க்கத்தாரது தமிழ்மறை தானோ? இவரது தமிழ்மறையினும் யூபஸ்தபங்களை நட்டு யாகப் பசுக்களைக் கட்டி யாகஞ்செய்யவேண்டியமுறை கூறியிருந்ததென்று சொல்லப் புகுந்தால்; வடமொழி வேதங்களிற் சொல்லப்பட்டிருக்கும் யாகங்களை நிந்திக்கும் இவருக்கு உடன்பாடாகுமா?

உமையம்மையைத் தனக்கு மகளாகப்பெற்ற மலயத்துவசன் தொண்ணூற்றொன்பது அசுவமேத யாகங்களைச் செய்தானென்று, திருவிளையாடற் புராணம் கூறும். மனுநீதிகண்டசோழர் பலயாகங்களைச் செய்தாரென்று பெரியபுராணம் புகலும். இதனால் பழைய தமிழ் அரசர்கள் வேதமுறைப்படி யூபஸ்தம்பங்கள் நட்டு நான்குவேதமுறைப்படி பல யாகங்களைச் செய்தார்கள் என்று பெறப்படுகின்றது. நமது தமிழ்நாட்டு அரசர்கள் "மேதபதிம்" என்பது முதலிய வேதவாக்கியங்களில் யாகத்துக்குத்தலைவர் சிவபெருமானே என்று கூறியிருப்பதையும், இவ்வாக்கியங்கட்கு முரணாகச் சிவபெருமானை வரிக்காது யாகம் செய்யப்புக்க தக்கன் பட்டபாட்டையுமுணர்ந்து, தமது சிவபக்திக்கேற்ப யாகங்களை பலவற்றை மழைவளஞ்சுரந்து நாடு செழித்துக்குடிகள் இன்புறுமாறும், பிறபயன்களைக் குறித்தும் செய்தார்கள்.

பெரியபுராணம்.

மறையவர் வேள்வி செய்ய வானவர் மாரி நல்க
இறைவனன் னெறியி னேங்க விகத்தினி லவனியின்பங்
குறைவில தெனினுங் கூற்றை யுதைத்தவர் நாமங் கூறி
நிறைகடற் பிறவித் துன்ப மீங்கிடப் பெற்ற தன்றே.

சிவஞானமுனிவர்.

ஆருகித்தொழிலினறுதொழிலாளரருமறைமனுவெடுத்தோதி
யோகையிற்சொரிநெய்தெறித்தெழும்பிதிர்வுமொலிபடுபுலிங்கமுங்கொ
மேகமாய்ப்படர்ந்ததூமமேயிடித்துமின்னிநீர்பொழிவனபோலும் [ண்டு
ஈகைசால்வேள்விமறுத்துழிமாரியின்மையேயிதற்குறுசான்றால்.

இன்னும், விபுலானந்த சுவாமிகளை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த விவேகானந்தன் பத்திரிகையில் ஆசிரியர் கூற்றாக வேள்வி என்பது பற்றி எழுதியவற்றுள் ஒரு சிறுபகுதியை இங்கேகாட்டுவாம்.

நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டி
னாறுணர்ந்த வொருமுதுநூல்
இகல்கண்டோர் மிகல்சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோராது மெய்கொளீஇ
மூவேழ்துறையு முட்டின்றுபோகிய
உரைசால் சிறப்பி னுரவோர் மருக.

என்ற புறநானூற்றுச் செய்யுளின்கண் சிவமுழுமுதல்வர் அருளிச்செய்த வேதத்திற் சொல்லப்பட்ட மூவேழ் துறைப்பட்ட வேள்விகளை முற்ற அறிந்த பார்ப்பனப்பெரியாரைப் புகழ்ந்திருக்கிறது. இவ்வேள்விகளும் வடமொழிவேதத்திற் குறிக்கப்பட்டனவேயாம். எழுவகைப்பட்ட யாக வேள்வியும், எழுவகைத்தாய சோமவேள்வியும் எழுவகை கொண்ட அவிவேள்வியும் என்று முத்திறத்து எழுவகையாக இருபத்தொரு வேள்விகள் வடமொழி நூல்களுட் கூறப்படுகின்றன. இருக்குவேதத்திலும் மூவேழ் வேள்வியும் உம்மிடத்திலே (சிவனிடத்திலே) நிலைபெறுகின்றன என்று சொல்லப்பட்டது. ஆகலின் முழுமுதல்வர் அருளிச்செய்த வேதப்பொருள் வடமொழிவேதத்தில் உள்ளது என்பது பெறப்படும்.

மேலும் புறநானூற்றினகத்து,

"அந்தியந்தண ரருங்கடனிறுக்கும் முத்தீ விளக்கு" என்றும்,

"நன்பல கேள்வி முற்றியவேள்வி யந்தணர்க்கு
அருங்கல நீரொடு சிதறி" என்றும்,

"ஏற்ற பார்ப்பார்க் கீர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து" என்றும்,

"அறுதொழி லந்தண ரறம்புரிந் தெடுத்ததீ
கேள்வி மலிந்த வேள்வித் தூணத்து" என்றும்,

"நற்பனுவல் நால்வேதத்
அருஞ்சீர்த்திப் பெருங்கணுறை
நெய்மலியாவுதி பொங்கப்பன்மாண்,
வேள்விமுற்றியூப நட்டவியன்களம்"

என்றும் வருமவைகளினாலே வடமொழி வேதங்களிலே கூறப்படுகின்ற முத்தீவேள்வியும், வேள்விமுற்றிநடப்படும் யூபமும், வேள்விக்கண் கொடுக்கப்படும் தானங்களும் ஆகிய இவற்றைத் தமிழ் மக்கள் அறிந்திருந்தார்கள் என்பது வெளியாகும். ஆதலின் அவ்வேதங்களே அவர் வழிப்பட்டொழுகிய மறையென்பது பெறப்படுகின்றது.

எம்தேவாரமுதல்வர் மறையவர் வேள்வி, வேதவேள்வியென்று கூறுவனவெல்லாம் வடமொழி வேதவேள்வியே என்றதற்கு அவ்வேள்விப் பயனை மனுமொழியும் தேவாரமும் ஒருபடித்தாகக் கூறுதல் சான்றாகும். தேவர்களைக்குறித்து அங்கி வேள்வியிற் செய்யும் ஆகுதிகள் ஆதித்தனை அடைந்து, அதனால் மழைபெய்ய, அதனால் பயிர்கள்வளர, அதனால் சீவகோடிகள் விருத்தியடைகின்றன. (மனு 3, 76)

தேவாரத்திலும் "மறையவரால் விளங்கும் வேள்வி மீதுபுகைபோய் விண்பொழியக் கழனியெல்லாம் - கொக்கினிய கனிசிதறித் தேறல்பாயும்" என்றுகூறப்பட்டது. சோதிட்டோமம் வேட்கின் சுவர்க்கப் பலனும்-அபிசாரவேள்வி செய்யின் பகைவரை அழித்தலாகும் என்றபடி, ஓரோர் வேட்கை நிரம்புதலாகிய பயனைநோக்கிப் பிறவேள்வியுளவேனும் அறங்களை விதந்தும் மறங்களைக் கடிந்தும் கூறுகின்ற வேதவிதிகளுண்மையால், அருளும் அன்பும் நீங்காத வழிபாடாகிய வேள்வியே வேத விதியென்பதும், மற்றவை கடையாகக் கொள்ளற்பாலன என்பதும் உபசங்கியாவிதி அபூர்வவிதி என்னும் விதியின் பாகுபாடுகளை உணர்ந்து, முன்னொடுபின்முரணாது நூலின் மெய்ப்பொருள்காணும் உண்மை அறிவாளர் ஒத்துக்கொள்ள வேண்டிய உண்மைகளாம்.

வேள்விகள் கடவுள் வழிபாடேயாம் என்பது "சந்தவேள்விகண்முதற்சங்கரர்க்குமுன்— வந்தவர்ச்சனைவழிபாடுமன்னவாம்" என்ற திருமுறைத் திருவாக்கானும் தெளியப்படும். இவ்வழிபாட்டுநிலையில் நிற்கும் அன்பிற்குறையா அடியவர்கள் ஓரோர்கால் பிறமக்களுக்கு அருளின்மைபோலத்தோன்றும் செயல்களைச் செய்தாராயினும் அவை அருளின்மையாகாது இறைவனுக்குவந்த அறங்களேயாம்.

அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும்
அரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரனுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினிற் பாலன்செய்த பாதகம் நன்மை யாய்த்தே.

என்று எழுந்த சகலாகம பண்டிதர் திருவாக்கும் இவ்வுண்மை கொண்டதேயாம். வடமொழிவேதங்களுள் வருகின்ற அருளின்மைபோன்ற செயல்களையும் இம்முறையில்வைத்துணர்ந்துணர்ந்து உண்மை கடைப்பிடிக்க. இன்னும் ஸ்ரீ விபுலானந்த சுவாமிகள் திருநான்மறை என்ற கட்டுரையில் விளக்கியும் விரித்தும் எழுதியிருப்பதை ஆண்டுக்காண்க. விரிப்பிற் பெருகும்.

கேள்வியுட் கிளந்த வாசா னுரையும்
படிநிலை வேள்வியுட் பற்றியாடு கொளலும்
புகழியைந் திசைமறை யுறுகளன் முறைமுட்டித்
திகழொளி யொண்சுடர் வளப்பாடு கொளலும்
நின்னுரு புடனுண்டி...... அந்தணர் காணும்வரவு.

என்று பரிபாடலிற் கூறப்பட்டுள்ளது. இதற்குப் பரிமேலழகர் "வேள்விக் கிறைவனை ஆசான் என்ரூர் தலைமைபற்றி" அவனுரையாவது வேதத்துள் நான்காம் வேற்றுமையை ஈறுகவுடைய தெய்வப்பெயர்ச்சொல். அதனை வைதிகர் உத்தேசத்தியாகமென்ப. அச்சொல்லே கடவுட்கு உருவென்பது சயிமினியாற் செய்யப்பட்ட வைதிக நூற்றுணிபாகலின் அதனை 'உருபு' என்றும், யூபமாவது மாயோனாகச் சொல்லப்படுதலால் பசுக்களைப் பிணித்துக்கொள்கின்ற அதனை 'உண்டி' என்றும், ஊன்கண்ணூர்க்குப் படிமையினும், 'அந்தணர்க்கு வேள்வித்தீயினும், யோகிகட்கு உள்ளத்தினும், ஞானிகட்கு எவ்விடத்தும் வெளிப்படுதலாற் சுடர்வளப்பாடு கோடலை 'அந்தணர்காணும் வரவு' என்றும் கூறிஞர்" என உரையெழுதியுள்ளதையும் நோக்குமிடத்து எம்தமிழ்ப்பெருமக்கள் கூறியுள்ள வேதமும் வேள்வியும் வடமொழிவேதமும் அதன்கணுள்ள வேள்வியுமே என்று தெரிகின்றது.

வேள்விக்கொலை தீங்குபயவாது நன்மையே பயக்கும். வேள்வியிற் கொலையுண்டஉயிர் மேலுகத்துச் சென்று இன்பந்துய்க்கும் ஆதலானும் எழுப்பப்படுமாதலானுமாம்.

கந்தபுராணம்·

புன்மையாம் பசுத்தடிந்து புரையில்வேள்வி யாற்றியே
தொன்மைபோ லெழுப்புமாறு சுருதிசொற்ற வாறுபோல்
மன்மதன் றனைப்படுத்து மாதைவேட்டு மற்றதன்
பின்முறைக்க ணல்கவெம் பிரானினைந்த நன்கொலாம்.

யாகாதிபதிசிவனே ஆதலால் அவர்க்கு அவிக்குநேர்ந்த உயிர் இந்த அபுத்திபூர்வ சிவபுண்ணியத்தால் மறுமையிலே புத்திபூர்வ சிவபுண்ணியஞ் செய்து, சிவஞான முற்றுமுத்தியெய்தும். இக்காலத்து மீண்டு யாகபசுவை எழுப்பும் சத்தியில்லாதவர் யாகபசுவைக் கொன்று யாகஞ்செய்தலாகாது. அது அப்பய தீக்ஷிதசுவாமிகள் தமது காலத்து யாகமொன்றியற்றி, ஈற்றில் யாகபசுவை எழுப்ப அது எழுந்திலது. அவ்வமயத்து, தீக்ஷிதர் வேதத்தை நோக்கி "சுருதியே! உன்னைநம்பி இப்பசுவைப் படுத்தேன். எழாதாயின் எனது உயிரைப் படுப்பேன். இது நிச்சயம்" என்றுகூறும் உறுதிமொழியை வேதபுருஷன் கேட்டு வெளிப்பட்டு "நின்வாய்மைப் பத்தியின்பொருட்டு, இப்பசு எழுந்துவிடும்· இனி இக்கொடுங்கலியில் பசுப்படுத்து யாகஞ் செய்யற்க; செய்யின் எழாது" என்று சொல்லி மறைந்தனன் என்னுஞ் சரித்திரத்தில் வைத்து உணரப்படும்.

இதனுல், வேள்வியிற்கொலை அவ்வுயிர்க்கு நன்மைபயத்தலால் கொலையன்றென்பதும், வேதம் ஏனையிடத்துச் செய்யும் கொலையை விலக்கும் என்பதும், இதற்குமாருகக் கொலைசெய்வோர்செயலை வேதத்தில் ஏற்றிக் குறைகூறல் அறிவின்மை என்பதும், யாகபசுவை எழுப்புஞ் சத்தியில்லாதவர் அது செய்யலாகாதென்பதும் அறிந்துகொள்க.

இவ்வியல்பனைத்தும் திருநான்மறை விளக்க ஆராய்ச்சியில் வண்ணை ஸ்ரீமத். சுவாமிநாதபண்டிதர் எழுதியவாற்றானும் உணர்ந்துகொள்க.

## வேதங்களின் உள்ளுறைப்பொருள் பரமசிவன்.

வேதத்தில் பலகோடி சிறுதெய்வ வணக்கங்கள் நிரம்பிக்கிடக்கின்றன என்று கழறியதை ஆராய்வாம். இவர்கருத்தின்வழி முழுமுதற் கடவுள் வழிபாடு வேதத்தில் இல்லையென்பது இவர்கருத்தாதல் பெறப்படும். திருஞானசம்பந்தாதி அருளாளர்கள் இருக்காதி வேதங்களை எவ்வாறு போற்றியுள்ளார்கள் என மேலேகாட்டினும். ஆதலின் வேதங்களை இகழ முன்வந்தது பரிதாபத்துக்கிடனேயாம்.

பலதெய்வ வழிபாடுகள் வேதத்திற் கூறப்பட்டிருப்பதற்குக் காரணம், உலகோர் பற்பல கன்மங்களைச்செய்வோர் ஆதலானும், அவ்வவர் பரிபாகத்துக்குத் தக்கவாறு தெய்வவழிபாடு வேண்டப்படும் ஆதலானும், பொதுநூலாகிய அவ்வேதத்தில் அங்ஙனம் கூறப்பட்டதென்று அறிக. அன்றியும் அப் பல தெய்வங்களும் சிவபெருமானுடைய அஷ்டமூர்த்தமாதலினாலுமென்பதாம். தாயுமானசுவாமிகளும் "வினையனந்தங் கருத்தோ வனந்தம் பெற்றபேர்-சீரனந்தம் சொர்க்க நரகமுமனந்தம் நற்தெய்வமு மனந்தபேதம் திகழ்கின்ற சமயமு மனந்தம்" என்றருளினர். ஓர் அரசனுக்குப் பரிவாரர்களாயுள்ள அமைச்சர் படைத்தலைவர் முதலிய பலரையும் குடிகள் புகழ்ந்து கூறினும், அப்புகழ்ச்சிகள் அனைத்தும் அரசனைச் சேருமாறுபோல, ஏனைத் தேவர்கள் பரிவாரராகச் செப்பப்படுதலினாலே, அத்தேவர்க்குக் கூறும் புகழ்ச்சிகள் அனைத்தும் சிவபெருமானையே சாரும் என்றும் கூறுப.

"யாதொரு பொருளை யாவ ரிறைஞ்சினு மதுபோய் முக்க
ணுதியை யடையு மம்மா வங்கது போலத் தொல்லை
வேதம துரைக்க நின்ற வியன்புக ழனைத்து மேலா
நாதனை யணுகு மெல்லா நதிகளுங் கடல்சென் றென்ன"

என்னும் கந்தபுராணச் செய்யுள் ஈண்டு நோக்கத்தக்கதாம்.

பிரம விஷ்ணுமுதலிய தேவர்களைச் சிருஷ்டிகர்த்தா, திதிகர்த்தா, சங்காரகர்த்தா என்பது முகமனே. சிலர் மனுடரைத் தேவர் என்பர். தேவரை மும்மூர்த்திகள் என்பர். இந்தச் சொற்றிறங்களெல்லாம் முகமனேயாம். வேதங்கள் பஞ்சபூதங்களையும் உயிர்களையும் மற்றைத்தேவர்களையும் பிரமம் என்று சொல்லுவ தென்னையெனில்---

பிறவியாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானைக் குறித்து அம்மறைகள் கூறியவைகள் மாத்திரம் விதிவாதமும் ஒழிந்தன அதிவாதமுமாம்.

"...........................................அன்னான்
சொன்னதோர் மறைக டம்மிற் றுணிபுகே ளிறுதி யில்லா
முன்னவற் காத லுண்மை யொழிந்தன முகம னாமால்"

என்றும்,

"ஆதலா லீச னல்லா வனைவர்க்கு முயிர்க்கு மைந்தாம்
பூதமா னவைக்கு மேற்றம் புகலுதன் முகம னாகு

மோதலா மேலதாக வொருபொருள் புகழ வேண்டின்
வேதபா ரகரை யன்றோ யானென விளம்பு கின்றார்"

என்றும் வரும் கச்சியப்ப சிவாசாரியசுவாமிகள் வாக்குக்கள் இதனை வலி யுறுத்தும்.

வேதங்களிலே விட்டுணுவுக்குக் கூறப்பட்ட பெருமையும் பிரமன் இந்திரன் அக்கினி முதலியோருக்குக் கூறப்பட்ட பெருமையுமாகிய எல்லாம் சுருங்கிய பொருள்படும். விட்டுணுவையும் பிரமாவையும் வேறுபலரையும் புகழுகின்ற வேதமானது பரமசிவனைத் துதித்ததுபோல, விட்டுணு முதலியோருக்கு ஒருரையாயினும் கூறியதில்லை. அவர்களைச் சொல்லியதும் உபசாரமேயென்று இவ்வுலகமெல்லாம் அறியும்படி அவர்களை அவ்வேதம் முன்னும் பின்னும் விலக்கியது இவ்வுபசிடதப் பொருள்பற்றியே,

"காரெழில் புரையுமேனிக் கண்ணனை யென்னைப் பின்னை
யாரையும் புகழும்வேத மரன்றனைத் துதித்த தேபோல்
ஒருரை விளம்பிற் றுண்டோ வுரைத்தது முகமனென்றே
பேருல கறியமுன்னும் பின்னரும் விலக்கிற் றன்றே"

எனக்கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளும்,

"முளரியோன் முதலாஞ் சுரரெலாம் பூத
முதலவற் றேடுதித் துள்ளோ
ரளவிடுந் தலைமை யாளரென் றவரை
யகற்றிமால் விடையவ னினையே
வளமுறு மெல்லாத் தலைமையு முடையோன்
வருமுதற் காரண னல்லோ
ருளமுறு தியானப் பொருளெனச் சிகைதேர்ந்
துரைப்பவு மயங்குவர் சிலரே"

எனச் சிவஞானசுவாமிகளும் அருளுவாராயினர். இவ்விசாரத்தால் சிவபெருமானே விசுவசேவியர்என்பது வேதங்களின் கருத்தாதல் தெளியப்படும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஆதிபிரபலப் பிரமாணங்களாகிய சுருதிகளாலும் புராணங்களினாலும் சிவபெருமான் ஒருவரே விசுவாதிகர் என்றும் விசுவசேவியர் என்றும் திருத்தொண்டர் புராணத்துத் திருமலைச் சிறப்புச் சூசனத்தில் நிறுவியிருப்பதையும், தில்லைவாழந்தணர் புராண சூசனத்தில் எழுதியிருப்பதையும், சங்கரபண்டிதர் சற்பிரசங்கத்திற் சொல்லப்பட்ட உண்மைப் பொருள்களையும் அகங்கொண்டிருப்பரேல் சுருதிகள் சிவபெருமானை இருதயத்துக்கொண்டு போற்றுமுண்மை ஐயமறப்புலப்பட்டிருக்கும். இருக்குவேதம் க௦ - கூஉ - கூ.

"உங்களுடைய ஸ்தோத்திரத்தை நிக்கிரகானுக்கிரக சக்தியுடையவரும், வீரபத்திரர்முதலிய கணங்களாற் சூழப்பட்டவருமாகிய உருத்திரருக்கு நமஸ்காரத்தோடுகூடக் காட்டுங்கள்; அந்த நமஸ்காரங்களால் தேவர்களாகிய நீங்கள் எண்ணும் விருப்பங்களிலெல்லாம் அடையக்கூடிய பலன்

களை எஜமானரும் பிறக்கில்லாத கீர்த்தியையுடையவருமாகிய சிவபெருமான்ஒருவரே சேர்த்திருக்கிறார்."

இந்த இருக்குவேத மந்திரத்தால் மஹாருத்திராகிய சிவபெருமான் ஒருவரே எஜமானரும், பிறக்கில்லாத கீர்த்தியுடையவருமென்பது காட்டப்பட்டது.

மஹா பிரளயகாலத்திலே சிவபெருமான் ஒருவரே உளர் என்பதை இருக்குவேதம் (க௦—கஉக— க) "மஹாபிரளய காலத்திலே அசத்தும் இல்லை; சத்தும் இல்லை; அந்த ஒன்று இருந்தது; அதினின்று முதற்கண்ணே காமம் எனப்படும் பராசக்தி உளதாயிற்று" எனக்கூறும்.

இந்தக் கருத்தையே "எப்போது இருள் உளதாய்ப் பகலுமின்றி இரவுமின்றி, சத்துமின்றி அசத்துமின்றி இருந்ததோ அப்போது சிவன் ஒருவரே இருந்தார்; அந்தச் சிவசூரியனுடைய அந்த அழியாத முக்கியப் பொருளாகிய பிரஞ்ஞை எனப்படும் பழைய பராசக்தி உதித்தார்" என்று சுவேதாஸ்வர உபநிஷத்துக்கூறும்.

ஆகவே,இருக்குவேதத்திலேகூறப்பட்ட (ஏகம்)ஒன்றுஎன்பது சிவபெருமான் என்றும், அவரினின்று பின்னர்த் தோன்றியவர் பராசக்திஎன்றும் பெறப்படுகின்றது. இருக்குவேதத்திற்கூறப்படும் உருத்திரசப்தமுழுமையும் மஹாருத்திராகிய சிவபெருமானைச் சார்ந்ததேயாம். சிவஞானபோதமுதற் சூத்திரத்தில் "அந்தம் ஆதி என்மனார் புலவர்" என்னும் சொற்றொடரில், அந்தத்தைச் செய்யும் இறைவன் என்றதும் இம் மஹாஉருத்திரரேயாம். ஏதனாலெனில்; "அந்த ஒன்று இருந்தது" என்று இருக்குவேதம் சொல்லுகின்றமையினால் என்க. ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகளும் இப்பொருளைச் சுட்டியே "ஏகன்" எனத்தமிழ் வேதத்தில் அருளிச்செய்தார் என்பதும் உணர்க. இவ்வாற்றால் சிவபெருமானே சங்காரகர்த்தா என்பது வேதத்தின் துணிபொருளாதல் பொள்ளெனப் புலப்படுகின்றது.

சிவபெருமான் பசுபதிஎனக் கூறும் வாக்கியம் இருக்குவேத க௦—கஉக—கூல் உள்ளது. அம்மந்திரப்பொருள் "எவர் சுவாசம் விட்டதினாலேயும், கண் கொட்டினதினாலேயும், உலகமெல்லாம் சிருஷ்டிக்கப்பட்டதோ எவர் ஒருவராகவே அரசனாகவே இருக்கின்றாரோ, எவர் இரண்டுகாற்பசுக்களுக்கும் நாற்காற்பசுக்களுக்கும் பதியாக இருக்கின்றாரோ அந்தப்பரமேசுரனுக்கு அவியைக் கொடுப்போம்" என்பதாம்.

இதனாற் சிவபெருமானை எல்லாச் சீவஜந்துகளுக்கும் பதியென இருக்குவேதம் பறையறைந்தாங்குக் கூறுவதை நம்மவர்கள் எல்லாம் தெரிந்து கொள்ளுவார்களாக. இன்னும் யசுர்வேதம் "நானே பசுக்களுக்குப் பதி" என்றும், நாற்காலும் இருகாலுமுடைய பசுக்களைப் பதியானவர் ஆளுகின்றார்"என்றும் கோஷிக்கின்றது.இப்பசுபதிப்பெயர் சிவபெருமானையொழிந்த வேறெந்தத் தேவர்களுக்கும் எந்த நூலிலும் பகரப்படாமையாலும் வேதத்திலே முழுமுதற் கடவுளாகப் போற்றப்பெற்றவர் பரமசிவனே என்பது சித்தமாயிற்று.

இன்னும் இந்திரன் அக்கினி விட்டுணு முதலிய தெய்வப்பெயர்களும் மஹாருத்திரராகிய சிவபெருமானுடைய திருநாமங்களேயாம் என்றும் அச்

சுருதிகளே சித்தாந்தம் செய்கின்றன. வடமொழி வேதங்களில் வருகின்ற அக் கடவுட்பெயர்களின் கருத்துக்களை ஆராய்ந்து நோக்குமிடத்து, அப் பெயர்கள் எல்லாம் முழுமுதற் கடவுளுக்குரிய ஒவ்வோர் சிறப்புகளை விளக்குவனவாய் வழங்கப்பட்டுள்ளன என்னும் உண்மைவெளிப்படும். "ஒருவனே பலருளன் காண்மினே" என்றுவரும் தமிழ் மறையுரையும் "சத்துஒன்றே அதை அறிஞர் பலவாகக் கூறுவர்." "ஒன்றே பலவாக விரிந்தது" என்று வரும் வடமொழிவேத உரைகளும்,

"ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதி"

என்ற முடிபாகிய உண்மையையே காட்டிநிற்கின்றன.

"ஈண்டு அம்முதலை ஞானக்கண்ணாலேகாண்கஎன்றது" என்றபகுதி சிவஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திரம் முதலதிகரண மேற்கோள் ஆகும். "பாசஞான பசுஞானங்களான் உணரப்படாத முதல்வனைச் சிவஞானத்திலாலே அறிக" என்பது இதன் தாற்பரியம். இக்கருத்தையே வேதமும் கூறுவதாகக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்,

பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும்
விரவிய துயர்க்கி றெய்தி வீடுபே றடைது மென்றல்
உருவமில் விசும்பிற் றோலை யுரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை யியம்பிற் றென்னிற் பின்னுமோர் சான்று முண்டோ.

என ஓதியருளினர். இதனாற்பெறப்படுவதென்னையெனில், சிவஞானபோதமும் வடமொழிவேதமும் சிவஞானத்தினாலேயே இறைவனை அறிய முடியும் என்ற உண்மையை ஒரேதிறத்ததாகவே காட்டுகின்றன என்பதாம். இதனைத் தருமை ஆதீனத்துச் சித்தாந்த மகாநாட்டுக் கட்டுரைக்கண் காட்டினும். அங்கே காண்க.

வேதமானது சிவபெருமானையே தனது இருதயத்துள் வைத்துக் காட்டுகின்றது என்பதும், சிவனை அர்ச்சிப்பதும் அவனடியவரைப் பணிவதும் வேதங்களின் உள்ளுறைப் பொருளென்பதும், சிவபெருமானே விசுவரூபன், விசுவாதித்தன், விசுவசேவியன் என்றும், பிறப்பிறப்பில்லாதவர்; எண்குணமுடையவர்; வேதாகம முதலிய எல்லா நூல்களுக்கும் கருத்தா; சிவனே பசுபதி; அவனே தேவதேவன்; மும்மூர்த்திகட்கும் தலைவர் என்றற்றொடக்கத்தனவாக முழுமுதற் கடவுளென அவ்வேதங்கள் துணிந்து துதிக்கு மென்பதும் அறிஞர்களால் நாட்டப்பட்டஉண்மைகளாகும். ஸ்ரீமத் சேக்கிழார் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய மேல்வரும் அருள்மொழிகள் இதனை வலியுறுத்தும்.

1. அருமறைப்பயனாகிய உருத்திரம்(உருத்திரபசுபதி நா. புராணம்)

2. வேத வுள்ளுறை யாவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையு மவரடி யாரையு நயந்து
பாத வர்ச்சனை புரிவதும் பணிவது மென்றே
காத லாலவை யிரண்டுமே செய்கருத் துடையார்.

(திருநீலகண்ட நா. புராணம்)

3. பணிந் தெழுந்து தனிமுதலாம் பரமனென்று பன்முறையாற்
றுணிந்தமறை மொழியாலே துதிசெய்து (கண்ணப்ப நா. புராணம்)

ஆகவே வேதத்துள் எனைத்தேவர்கட்குத் தலைமை கூறப்பட்டது தத்துவத்துக்கேற்ப ஆன்மாக்கள் ஒவ்வொருவரைத் தமக்குக் கடவுளாகக் கொண்டு சமுத்திரகலச நியாயமாக ஒவ்வொருமதம் உண்டாக்கி, அவ்வவற் றைக் கடைப்பிடித் தொழுகுதற் பொருட்டென்பதும் அவ்வொழுக்கத்துக் கேதுவாய மதங்கள் அவ்வான்மாக்கள் சோபானமுறையானே மேன்மேற் செல்லுதற்குக் காரணமாமென்பதும் அறியவேண்டியனவாம். "அருமறை யாகமமுதனூலனைத்து முரைக்கையினு னளப்பரிதா மப்பொருளை யரன ருளா லணுக்கள்—தருவர்கள்பின் றனித்தனியே தாமறிந்த வளவிற்றர்க்க மொடுத்தாங்க ளினுற் சமயஞ் சாதித்து" எனவரும் சித்தியாரால் அது பொள்ளெனப் புலப்படும். அவர்தலைமை இத்துணைப் பயன்படன் மாத் திரைச்கேயன்றிப் பாமுத்திக்குக்காரணமாகக் கூறப்பட்டதன்று. அதற் குக் காரணம் மகாசங்காரகாரணராகிய சிவபெருமான் வழிபாடேயாம் என்பது அவ்வேதங்களின் கருத்தாம்.

"பதியரன் பாசந் தன்னிற் பட்டுழல் பசுநா மென்றே
விதியொடு மறைகள் கூறு மெய்மையைத் தெளிய வேண்டின்
இதுவென வுரைப்பன் யாங்க ளிவ்வர சியற்ற வீசன்
அதிர்கழ லருச்சித் தேத்து மாலயம் பலவும் காண்டி"

"அவனருள் பெறுது முத்தி யடைந்தன ரில்லை யல்லால்
அவனரு ளின்றி வாழு மமரரும் யாரு மில்லை
அவனரு ளெய்தி னெய்தா வரும்பொரு ளில்லை யாணை
யவனல திறைவ னில்லை யவனைநீ யடைதி யென்றான்"

இவ்வாறு வேதம் சிவாகமம் இரண்டினையும் நிலைகண்டுணர்ந்து குமா ரக்கடவுளின் தொண்டராய் எழுந்தருளியிருந்து ஆசாரியத்தலைமைபூண்ட கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் வேதக்கருத்தை விளக்கியருளுவதினாலும் நான்கு வேதங்களும் சிவபெருமானையே பதிப்பொருள் என்று கொண்டு வந்திக்கும் என்பது நன்கு நிறுவப்படும்.

"ஒரு பிறப்பினாலே உயர்வு தாழ்வு பாராட்டுவது போதாதென்று இரண்டாம்பிறப்பினாலும் பாராட்டினார்கள்"என்றார் பண்டிதர் கா. பொ. இ.

பிராமணர்களே சிருட்டித்து வைத்தார்கள் என்பதவர் கருத்து. அது நூற் கருத்துக்கு மாறுபட்ட பேச்சேயாகும். பார்ப்பனர்கள், தாமே பாராட் டிக்கொள்ளவில்லை என்றும், வேதங்களிலும் ஆகமங்களிலும் இறைவனாற் சொல்லப்பட்டு, அதை அங்கீகரித்த மேதாவிகளே அம்மரபுநெறிபற்றித் தம் நூல்களிற் பாராட்டியுள்ளார்கள் என்றும் பண்டிதர் அறிந்துகொள்ள வேண்டும். பிராமணர் முதலிய மூன்று வருணத்தாரும் உபநயனத்தினாலே துவிசத்துவம் அடைந்த பின்பே, வேதமோதுதற்கு அதிகாரிகளாவாரென் பது வைதிக சைவநூற்றுணிபு. நாவலர் நான்காம்பாலபாடத்து வருணம் என்ற பாடம் காண்க. துவிசத்துவம் என்பது இருபிறப்புடைமை.

நூலே கரகம் முக்கோன் மணையே
ஆயுங்காலை அந்தணர்க் குரிய

எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. இதன் விசேட உரையிலே நூலினை முற்கூறினான் பிறப்பு முறையானும் சிறப்புமுறையானும் என்பது எனப் பேராசிரியர் கூறினார். இங்கே அந்தணர்க்குரியது நூல் எனச் சொல்லப்பட்டது காண்க.

ஒன்றுபுரிந் தடங்கிய விருபிறப்பாளர் எனப் புறநானூற்றிலும்,

இருபிறப் பிருபெய ரீர நெஞ்சத்
தொருபெய ரந்தண ரறனமர்ந் தோயே.

எனப் பரிபாடலிலும்,

இருமூன் றெய்திய வியல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல

எனத் திருமுருகாற்றுப்படையிலும் நான்மறைக்குலத்தந்தணர்களைக் குறிப்பிடுங்கால் இருபிறப்பாளர் எனப் பிரயோகிக்கப்பெற்றிருத்தல் காண்க.

இனித் திருமுருகாற்றுப்படையில் இருபிறப்பாளர் என்பதற்கு உபநயனத்துக்குமுன்பு ஒருபிறப்பும், பின்பு ஒருபிறப்புமாகிய இருபிறப்பினையுடைய அந்தணரெனப் பொருள்கூறுவர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர்.

இனி, 'கவுணிய நற்குல திலக'ராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார்,

இருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி யைவகை வேள்வி
யமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை

எனத் திருவெழுகூற்றிருக்கையிலும்,

"..................................ஆறங்க மைவேள்வி
இணைந்த நால்வேத மூன்றெரி யிரண்டு பிறப்பென
வொருமையா லுணருங்
குணங்களு மவற்றின் கொள்பொருள் குற்ற மற்றவை
யுற்றது மெல்லா
முணர்ந்தவர் வாழு மோமாம் புலியூர்

எனத் திருஓமாம்புலியூர்த் தேவாரத்திலும்,

"வேளாளர் குலம்விளக்கும் பரிதிபோல்வா"ராகிய அப்பமூர்த்திகள்,

ஒன்றியசீ ரிருபிறப்பர் முத்தீ யோம்பு முயர்புகழ்
நான்மறை யோமாம்புலியூர்

என ஓமாம்புலியூர்த் தேவாரத்திலும் அருளியிருத்தலை நோக்காது இரு பிறப்பு என்பதுபற்றிச்செய்யும்ஆராய்ச்சிகளெல்லாம் விப்பிரலம்பவாக்கியங் களாக ஒதுக்கப்படுவனவேயாம்.

இன்னும், திருஞானசம்பந்தசுவாமிகட்கு உபநயனச் சடங்குநிகழ்ந் தமையைக்குறிப்பிடுமிடத்து,

"ஒல்லைமுறை உபநயனப் பருவ மெய்த
உலகிறந்த சிவஞான முணரப்பெற்றார்
தொல்லைமறை விதிச்சடங்கு மறையோர் செய்யத்
தோலொடுநூ லணிந்தார் சுரர்கள் போற்ற"

எனவும்,

"ஒருபிறப்பு மெய்தரமை யுடையார் தம்மை
உலகியல்பி னுபநயன முறைமை யாகும்
இருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி"

எனவும் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்துவரும் அருண்மொழித் தேவர் அருள்வாக்குகள் இருபிறப்பு என்பதன் தாற்பரியத்தைத் தெற் றென விளக்குமென்றறிக. இங்கே "தொல்லைமறை விதிச்சடங்கு" என் றதனால், அச்சடங்குகள் வேத விஹிதமாதலும், அர்த்தமற்ற வெறுஞ் சடங்கென்று இகழாது செய்தற்பாலனவாதலும் வற்புறுத்தப்பட்டன. இதனாலும் சமயகுரவர்கள் வேதநெறியை ஏற்கவில்லை என்றது வெற் றுரையாதல் தெளிவு.

மேலும் சண்டேசுர நாயனார் புராணத்திலே,

செம்மை வெண்ணீற் றொருமையினா; ரிரண்டு பிறப்பின் சிறப்பினார்
மும்மைத் தழலோம்பிய நெறியார்; நான்குவேத முறைபயின்றார்,
தம்மை யைந்து புலனும்பின் செல்லுந் தகையா ரறுதொழிலின்
மெய்ம்மை யொழுக்க மேழுலகும் போற்று மறையோர் விளங்குவது

எனத் திருமறையோர் சிறப்புப்பற்றியே சேய்ஞலூர் நகர்வளம்கூறுமிடத்து அந்தணர்களை "இரண்டுபிறப்பின் சிறப்பினார்" என்று கூறுவதும், விசாரசருமர் அந்தணர் குலத்தோன்றலாதலால், அவருக்கு "புகழும் பெருமை யுபநயனப் பொருவில் சடங்குமுடித்து எனச் சொல்லப்படு வதும் கண்டு தேர்க" "இச்சகம் புகழுகின்ற இருபிறப்பாளர் கோமான் —ருச்சகனென்னும் பேரோன்" எனக் கந்தபுராணத்து மார்க்கண்டேயப் படலத்திற் சொல்லப்பட்டது.

இவ்வாறே நம்பண்டைத் தமிழ்நூலாரும் துவிஜர் என்று கூறும் வடமொழி வேதாகம வழக்குக்கு மாறுபடாமலே, பார்ப்பனரைக் குறிப் பிடுமிடங்களிலே, இருபிறப்பாளர் என்று பிரயோகித்திருப்பதும், நோக் காது, எல்லா நூற்பிரமாணங்கட்கு முரணி, ஆரியரே உயர்வு தாழ்வு பாராட்டி வைத்தார்கள் என்று கூறுமுகத்தால் மறைமுகமாக, அப் பண்டைப் பெரியார்கட்கெல்லாம் அறியாமையேற்ற மூற்பட்டது அறக் கொடுஞ் செயலேயாம்.

இன்னும் இப்பகுதியிற் காட்டியிருக்கும் திருமுருகாற்றுப்படை தேவாரம் பெரியபுராணம் என்னும் திருமுறைப்பிரமாணங்களை நோக்குங்கால், இருபிறப்பேயன்றி, மூத்தீ, நான்மறை, ஐவகைவேள்வி, ஆறங்கம் அறுதொழில் ஆகியவற்றையும் அந்தணர்க்குரியனவாகக்கொண்டு நம் சைவச் சான்றோர்கள் உரைத்தமை தெற்றென விளங்குதலின் அவைபற்றிச் செய்யும் புத்தறிவினர் ஆராய்ச்சிகளெல்லாம் சற்சனர்களாற் பூஷிக்கப்படுவன அன்றென்பது ஒருதலை.

மறை—வேள்வி.

பெரியபுராண நூலாசிரியராகிய அருண்மொழித்தேவரால் மறை எனப்படுவது எம்மொழிக்கணுள்ளது என ஆராயின், அவ்வருளாளர் வடமொழிவேதத்தையும் அதன்கணுள்ள வேள்வியையும் போற்றியுள்ளார்களென்பது,

"சைவமுதல் வைதிகமுந் தழைத் தோங்க"

"அண்டர்குல மதிசயிப்ப அந்தணரா குதிபெருக"

எனத் திருஞானசம்பந்த நாயனுர் புராணத்தில் திருவவதாரப்பயன் அருளுமிடத்திலும்,

இருமைக்கு மின்ப மளிக்கு மியாகமு மியான்செய வேண்டும்

எனவும்,

மேவி யங்குறை நாளினில் வேள்விசெய் வதனுக்
காவ தாகிய காலம்வந் தணைவுற வணைந்து
தாவில் சண்பையர் தலைவர்க்குத் தாதையார் தாமும்
போவ தற்கரும் பொருள்பெற வெதிர் நின்று புகன்றார்.

எனவும் பிறிதிடங்களிற் கூறியிருப்பதினாலும் தெளியப்படும். இங்கே இருமைக்கும் இன்பளிக்கும் யாகம் என்பதனால் இம்மையிலும் மறுமையிலும் பயன்றருவனவாகிய காமிய இட்டிகளே எடுத்துப் பேசப்பட்டிருத்தல் உணரத்தக்கது. இம்மையிற் பலிப்பன மழை முதலியவற்றை விரும்பிச் செய்யும் காமிய முதலிய யாகங்கள். மறுமையிற் பயப்பன சுவர்க்காதி பலன்களை விரும்பிச் செய்யும் சோதிட்டோமம் முதலாயின என்ப.

"நீதியினு னித்தியமை மிகத்திககா மியத்தி னிறுத்தி, நிரம் பதிகார நிகழ்த்து வதுஞ்செய்து" எனச் சித்தியாரிலும் காமிய விஷயம் சொல்லப் பெற்றிருப்பது காண்க. காமிய கருமங்களை இழித்துரைக்கும் பண்டிதர், பெரியபுராணத்திலும் சித்தியாரிலும் சொல்லியவைகட்குச் சமாதானம் கூறவேண்டியவராயினர். மேலும்,

"யாக நிலவுஞ் சாலைதொறு மறையோ ரீந்த வவியுணவின்
பாக நுகர வருமாலு மயனு மூரும் படர்சிறைப்புண்
மாக மிகுந்து வந்திருக்குஞ் சேக்கை யெனவும் வானவர்கோ
னாக மணையுங் கந்தெனவு நாட்டும் யூப வீட்டமுள"

“தாம்பாடியசா மங்கணிப்போர் சமிதை யிடக்கொண் டணைவனவும்
ஆம்பான் மையினில் விளங்குவன வணிநீண் மறுகு பலவுமுள”

எனச் சண்டேசுரநாயனார் புராணத்தும்,

“.........................................பாடுவ சாமம்
பன்மறைக் கிடையுடன் பயிற்றுவ பலபூவை”

“மெய்த்த வாகம விதிவழி வேதகா ரணரை
நித்தல் பூசனை புரிந்தெழு நியமமுஞ் செய்தே
எத்தி றத்தன பணிகளு மேற்றெதிர் செய்வார்.”

எனத் திருநீலநக்கநாயனார்புராணத்தும் பிறவிடங்களிலும் யூபம், சாமம், சமிதை, கிடை என அருண்மொழித்தேவர் அருளுவதுகொண்டு அவர் போற்றிய வேதமும் ஆகமமும் ஆரியமேயென்பதும் அவ்வாகமவழிநின்றே சிவார்ச்சனைசெய்தல்வேண்டுமென்பதும் தெளிவாயிற்று. பூருவபக்ஷத்தார் இச்செய்யுட்பகுதிகளை எல்லாம் குருட்டுநம்பிக்கையாலெழுந்தன எனப்புகலுவர் எனில்; அது நஞ்சைவத்திருமுறைகட்கு மாறுபடக்கூறும் உய்தியில் பெருங்குற்றமாமென்று அறிவுறுத்துகின்றோம்.

## கன்மநெறி.

“முன் செய்த கர்மத்தினாலே சைவர்கள் உயர்ந்த சாதியிலும் தாழ்ந்த சாதியிலும் பிறக்கிறபடியால் அவர்கள் தம் சாதிநெறியைக் கடவாமலே ஒழுகவேண்டுமென்றெண்ணுவது மிருதிவழிப்பட்டதன்றிச் சைவநீதியாகாது” எனத் தாவாரம்இல்லை என்றநூலுடையார் எழுதிச் சைவப் பெருநூல்களிலுள்ள சில பாடற்பகுதிகளையும் காட்டினார்.

இதனாற் கன்மத்தை யொப்புக் கொள்ளுதல் சைவத்துக்குப் புறம்பானதொரு கொள்கை என்பது இவர்கருத்தாதல் பெறப்படும். மிருதியிற் கன்மத்தைக் கூறியிருப்பின் அது பிழையாகுமா? அவர் எடுத்துக் கொண்ட பாடல்களிலேயே “தீவினை” “கொடுவினை” “மேல்வினை” யென்றெல்லாம் வருவனவற்றை யோர்ந்திலர். சைவசமயி என்று தம்மைச் சொல்லிக்கொள்வோர் யாவராயினும் கன்மநெறியை யுடன்படவேண்டும். உடன்படவே சாதியையும் ஒப்புக்கொண்டவராவர். சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் “மக்கட்கூட்டத்தினுள் பிறப்பினாலும் சிறப்பினாலும் உயர்வும் தாழ்வும் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு எந்நாளும் உண்டு என்பதை மறுக்க இயலாது. எந்தவகையாலேனும் கன்மபக்குவ பேதங் காரணமாக மக்களும் பிற உயிர்களும் பலதிறப்பட்ட வேற்றுமை யுடையார்களே யாவர். இவை சாதி, ஆயு, போகம் என்றவற்றுள் அடங்குபவையாய் அவ்வவ்வுயிரின் கன்மத்துக்கீடாய் இறைவன் கூட்டுவிக்க வருவன என்பது ஞானசாத்திரங் கண்ட வுண்மை. “மேற்பிறந்தார்” “கீழ்ப்பிறந்தார்” “இழிந்த பிறப்பாய் விடும்” “பிறப்பினால் ஏகாலிக்குலத்துள்ளார்” முதலியவையும், “தவஞ்செய்த நற்சார்பில் வந்துதித்து” (சிவஞானபோதம்- 8-சூத்) “கன்மநெறி திரிவிதநற் சாதியாயுப் போகக் கடனதெனவரும்” (சிவப்பிரகாசம்-பொது) முதலியவையுங் காண்க. “நரர்பயில் தேயந்தன்னி னான்மறை பயிலாநாட்டில், விரவுத லொழிந்து தோன்றன் மிக்க புண்ணியத்தானும், தரையினிற் கீழைவிட்டுத் தவஞ்செய்சா

தியினில்வந்து" (சித் - உ - கo) முதலியவைகாண்க" என்று திருநாளைப்போவார் நாயனர் புராண உரையில் எழுதியுள்ளார்கள். 'ஆலயசேவை' 'சாதியும்சமயமும்' என்ற பிரசுரங்களிலும் இவ்வுண்மைகள் விளக்கப்பட்டுள்ளன.

திருமந்திரம்.

"விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு"

"ஆணவ மாகும்விஞ் ஞான கலருக்குப்
பேணிய மாயை பிரளயா கலராகு
மாணவ மாயையுங் கன்மமு மூன்றுமே
காணுஞ் சகலர்க்குக் காட்டு மலங்களே."

ஆகையினாலே உயர்ந்த வருணத்திற் பிறப்பதும் இழிந்தவருணத்திற் பிறப்பதும் பூர்வஜன்ம கன்மத்துக் கீடாகவேயென்பது வெள்ளிடைமலை போல் விளங்கும்.

இனி, ஒவ்வொருவரும் தத்தம் சாதி ஆசாரங்களை மீறிநடத்தல் தக்கதாகுமோ தகாததாகுமோ என ஆட்சேபிக்கின் அதற்குச் சமாதானம்:- ஸ்ரீமத் உமாபதி சிவாசாரிய சுவாமிகள் "**வருணாச்சிரம ஆசாரங்களை மனசினாலுங் கடத்தல் கூடாது**" என்னும் ஆகம வாக்கியத்தைப் பிரமாணமாகக் காட்டி விளக்கியருளுகின்றமையினாலே, சாதியாசாரங்களை மீறுதல் தகாதென்பது சித்திர்தவாது காண்க. இக்கருத்துப்பற்றியே "தத்தம் வருணத்திற்கும் நிலைக்குமுரிய ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும்; அறம்வளரப் பாவந்தேயும் ..............அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும், அகப்பற்றாகிய யான் என்பதும் விடும்" எனப் பரிமேலழகர் கூறியதும் என்க. தாவாரம் இல்லை என்ற நூலுடையார், இவற்றுக்கு முற்றும் விரோதப்பட்டவராய், தம் சாதிநெறியைக்கடவாமலே ஒழுகவேண்டுமென்றெண்ணுவது, சைவநீதியாகாது என்று போதிக்கின்றார். சைவத்தை வளர்ப்போமென்று தொடங்கி, இங்ஙனம் விபரீதமாக ஆராய்வது, அதற்குக் கேடுசூழ்வதாகவன்றோ முடிகின்றது.

## ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்.

"ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்" என்று வேதாகமங்களை நன்குணர்ந்த திருமூலரே கூறியிருக்கின்றார். இதனை யேற்றுக்கொள்ளும் சைவர்கள் நல்லகுலம் தீயகுலத்தை நிலைநாட்டக் கனவிலும் நினைப்பார்களோ" என்று போதிக்கிறார் திரு. பணடிதர். கா. பொ. இ. அவர்கள். முற்றத்துறந்த திருமூலமாமுனிவரே தமது திருமந்திரத்திருமுறையில்,

1 "மறையவ ரர்ச்சனை வண்படி கந்தான்
இறையவ ரர்ச்சனை யேயபொன் னாகும்
குறைவிலா வயிசியர்க் குக்கோ மளமாம்
துறையுடை சூத்திரர் தொல்வாண லிங்கமே" எனவும்,

2. அந்தண ராவோ ரறுதொழில் பூண்டுளோர்" எனவும்,

3. "பேர்கொண்ட பார்ப்பான்" எனவும்,

4. "மந்திர மோரெழுத் துரைத்த மாதவர்
சிந்தையி னொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்கனுய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே" எனவும்,

5. "குயவன் திருக்கையி லேற்றிய மண்ணைக்
குயவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்"

எனவும் உயர்ந்த நான்கு வருணங்களையும் புலையர் குயவர் என்ற சாதிகளை யும் கூறியிருத்தலைப் பண்டிதர் ஏனோபார்த்திலர்.

"ஒன்றே குலனும்" என்பதற்குச் சாதிவேற்றுமை இல்லையென்று பொருள் கொண்டால், அத்திருமந்திரத்தின்கண் நாற்பாற் குலங்களையும் ஏனைக் குலங்களையும் எடுத்தியம்பிய பகுதிகளின் கதி யாதாய் முடியும்? ஒருநூலுக்குப் பொருள் காணுங்கால் முன்பின் விரோதமுறுவண்ணம் பொருள் கொள்வதன்றோ பொருத்தம். ஆகையினாலே அத்திருமந்திரத் துக்கு மெய்ப்பொருள் யாதெனிற் காட்டுதும். "ஒருவனே தேவனும்" என்பது மஹாசங்காரகாரணரும் அழிவில்லாதவருமாகிய பரம்பொருள் சிவபெருமான் ஒருவரே என்பதையும், "ஒன்றே குலனும்" என்பது, அப் பரம்பொருளாகிய சிவபெருமானுக்குச் சீவர்களெல்லாம் மீளா அடிமைக் குடி என்பதையும் குறிக்கும் என்று கொள்ளுவதே சற்சம்பிரதாயத்தின் வந்த மெய்ப்பொருளாம். ஆகவே "ஒன்றே குலனும்" என்ற திருமந்திரப் பகுதிக்குக் குலபேதமில்லை யென்று பொருள்கொள்வது பொருத்தமற்ற தென்று துணியப்பட்டது.

"முள்ளிச் செடியும் முத்தியடையமுடியும் என்றால் தாழ்த்தப்பட் டோர் முத்தியடைய முடியாதா? மானிடப் பிறவியின் நோக்கம் தீண்டா மையைப் போற்றுவதா?

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன் பணிக் காகவன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலு மூமர் ஒன்றையு முணரா ரந்தோ

இந்தச் சித்தியார் புகட்டும் புத்தி யாது" என்றார்.

## முத்திஉயிரைப்பற்றியது.

"மூலாகமங்களிலும் உபாகமங்களிலும் நான்கு வருணங்களும் சங்கர சாதிகளும் சொல்லப்படுகின்றன. புராணங்களும் தலமான்மியங்களும் இப் படியே சொல்லும். பெரியபுராணம் செய்தருளிய சேக்கிழார் நாயனாரும் ஆதிசைவர் முதற் புலையர் ஈறான சாதிகளைச் சொல்லியிருக்கிறார். நமிநந்தி

யடிகளையனார் தீண்டத்தகாதவரைத் தீண்டியபடியால் ஸ்நானஞ்செய்தே வீட்டினுட்போய் சந்தியாவந்தனம் போசனம் முதலியவற்றைச் செய்ய வேண்டுமென்று சொன்னாரென்று கூறப்பட்டது. திருநாளைப்போவார் நாயனார் திருக்கோயிலினுள்ளே போகாது நின்றதும் சாதிநெறி கடத்தல் தகாது என்னும் கருத்துப்பற்றியேயாம். தத்தம் வருணத்துக்கு விதிக்கப் பட்டபடி நடப்பதே ஒழுக்கமாம். சாதி மோட்சமடையத் தடைசெய்ய வில்லை. சாதி உடம்பைப்பற்றியது. முத்தி உயிரைப்பற்றியது. சிவாக மங்களும் பத்ததிகளும் வருணம் ஆச்சிரமம் என்னும் பேதம் பற்றியே ஆசா ரங்களை விதிக்கின்றன. எல்லாச்சாதிக்கும் அவரவர்களுக்கு ஏற்ற தீட் சையை விதிக்கின்றன. சாதிபற்றியே ஆதிசைவம் மகாசைவம் அநுசை வம் அவாந்தரசைவம் பிரவரசைவம் அந்தியசைவம் என்னும் பகுப்பு ஏற்பட்டது. ஒரே மாதிரி மனுடருள் சாதிபேதம் எப்படி எனில்; ஆண் பெண்; வெள்ளாடு செம்மறியாடு; முத்துச்சம்பா புழுகுசம்பா என வெவ் வேறு சாதி என் சொல்லப்பட்டன". இவ்வாறு ஸ்ரீமத். த. கைலாசபிள்ளை அவர்கள் எழுதியதை உற்றுநோக்கி உண்மைகடைப்பிடிக்கக்கடவர்.

இனி, 'உயர்ந்தோர்' 'தாழ்ந்தோர்' என்றும், 'மேலோர்' 'கீழோர்' என்றும் சொல்வதே தமிழ்மரபு. அங்ஙனமன்றி தாழ்த்தப்பட்டோர் என் பது நவீனர் வழக்குகளில் ஒன்றெனப் பண்டிதர் அறியவேண்டும்.

தமது கொள்கைக்கு அநுகூலமாகுமென்று எண்ணிப்போலும், "மானுடப்பிறவிதானும்" என்னும் சிவஞானசித்தியார் ௨-ம் சூத்திரத்து ௪-ம் அதிகரணத்து ௯௨-வது பாடலை எடுத்துக்காட்டினார். இச்செய்யுள் சிவபூஜாதிகளைச் செய்யும் மானுடரின் சிறப்பும் அஃதுடையரல்லாதார் இழிபும் கூறி எழுந்ததேயன்றி சாதிநெறி இல்லை யென்னும் இவர் கருத் தினை அரண்செய்வதாக இல்லையென்பது வெளிப்படை. சித்தியார் ௨-ம் சூத்திரத்து ௪-ம் அதிகரணத்துத் தொண்ணூறாவது செய்யுளில்,

"தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ௯௦-வது செய்யுளைப் பாராது ௯௨-வது செய்யுளுக்கு வந்தது எப்படி? சாதிநெறியை எப்படியாவது நிலை மாற்றவேண்டுமென்று எழுந்த ஆவேச அந்தகாரம் மறைத்துவிட்டதுபோ லும்.

## சீவன்முத்தர்கட்கேயுரிய சிறப்பிலக்கணங்கள்.

ஆயினும் சாதி எவ்வளவு வரையில் நிற்றல்வேண்டும் என்பதும் நூல் களால் வகுக்கப்பட்டதேயாம். தனக்கெனவோர் செயலற்றுத் தான் சிவ மாய் நிற்கும் நிலைவரும் அளவும் அறநூல்களில் விதித்தவாற்றால் ஒழுக வேண்டியதேமுறை. தன்னுணர்வு உறங்கினவன் கைப்பொருள்போல் தானே கழன்று விழும் நிலைவரும்போது வீழ்ந்தொழியும். முறுகிவளர்ந்த அன்பு மேவிடப்பெற்றவிடத்தும் ஞானநிட்டை கைவரப்பெற்றவிடத்துமே சாதி முதலியன முன்னிற்கமாட்டா. ஜீவன்முத்தர்களுக்கு இவ்வுலகத்தில் வினைகளுமில்லை; வினைகளைச் செய்தாராயினும் பயனை விரும்புவதுமில்லை;

அவர்கள் பயன் கருதாது வினைகளைச் செய்யுங்காலத்தில் சமயாசாரம் மனச்சஞ்சலம் முதலியன யாவும் இல்லை. இவையும் இவைபோல்வன பிறவும் அச்சீவன் முத்தர்கட்கேயுரிய சிறப்பிலக்கணங்களாம். அது,

மலமில்லை மாசில்லை மானுபி மானக்
குலமில்லை கொள்ளுங் குணங்களு மில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தி னாலே
பலமன்னி யன்பிற் பதித்துவைப் போர்க்கே.

எனவரும் திருமூலர் திருவாக்காலும்,

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருட னுன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினொ டாடலிவை பயின்டினும் பயில்வர்.

எனவரும் சகலாகம பண்டிதர் திருவாக்கானும் உணரப்படும்.

இச்சிவஞான சித்திச் செய்யுள் உரையில், "இதற்கு மேற்கோள் சர்வஞானோத்தராகமத்தும் மதங்காகமத்துமறிக" என்றார் மறைஞானதேசிகர். சிவாக்கிரயோகிகள் யஊராயஊஹமும் நாஸ்தி என்று தொடங்கும் ஆகமவாக்கியங்களைத் உதகரித்துக் காட்டினார்சிவாக்கிரயோகீந்திரர். வருணாச்சிரமதருமங்கள் ஞானிகளுக்கும் தாமே தவிரிற் குற்றமில்லை. அங்ஙனமன்றி அவர் தாமே அவற்றைத் தவிர்ப்பாராயின், நரகத்து வீழ்தல் தப்பாது. சைவசமயநெறியுரை முதலியவை காண்க.

மேலும் புத்தாபாய்ச்சிக்காரர்சிலர் கூறுவதை ஆராய்வாம்.

ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு
மோகமில் நாலேழு முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மையொன்
றாக முடிந்த அருஞ்சுத்த சைவமே.

என்ற திருமந்திரத்தைத் தமிழில் ஆகமமிருந்த தென்பதற்கு மேற்கோளாகக்காட்டுவர். தமிழில் ஆகமம் இருந்ததில்லை யென்பது இந்நூல்முதற்பாகத்தில் நிறுவப்பட்டது. இங்கே "ஒன்பான் அதிலான நாலேழு, என்பதற்கு நவந்தரு பேதத்தையுடைய சிவத்திலிருந்துண்டான இருபத்தெட்டாகமங்கள் என்று பொருள் கொள்வது மரபு, மூலாகமங்கள் இருபத்தெட்டென்பது,

அஞ்சன மேனி யரிவையோர் பாகத்தன்
அஞ்சோ டிருபத்து மூன்றுள வாகமம்.

அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே

என்னும் திருமந்திரத்தால் நிச்சயிக்கப்படும். படவே, வேறுபொருள் கொள்வதும் பொருந்தாதென்பது போதரும். அங்ஙனமாயின், "நவவாகமமெங்கள் நந்திபெற்றானே" என்றது என்னையெனில்; அது 28 ஆகமங்களுள் அப்பரம்பரைக்குரிய ஒன்பது ஆகமங்களையே குறிப்பிட்டதென்றறிக.

## சிவாகமங்களிலே சமயாசாரியரைப் பற்றியகுறிப்புக்கள்.

இன்னும் நவீனர் சிலர் "ஞானசம்பந்தரைப் பற்றியவரலாற்றுக் குறிப்புக்களையும் தேவாரமோதுதலையும் பூசாரிகள் ஆகமங்களிற் புகுத்திவிட்டார்கள்" என்று பொய்யுரை பேசி ஒன்றுமறியா ஏழைகளை ஏமாற்றுகின்றார்கள். இவருரையின் பொருந்தாமையை வேதாகம நிரூபணம் முதற்பாகம் 65-ம் பக்கத்திலும், இந்த இரண்டாம் பாகம் 35, 36, 37, 38, 39-ம் பக்கங்களிலும் துலக்கிக்காட்டினம். அதனைமேலுமாராய்ந்து மெய்ம்மை தெரிப்பாம்.

எல்லாம் வல்லவரும் எல்லாம் அறிபவருமாகிய பரமேசுரனுடைய அருள்வாக்கே சிவாகமம் என்று சைவத்திருமுறைகளும் சித்தாந்த சாஸ்திரங்களும் பிறசான்றோர் அருளிய நூல்களும் முழங்குகின்றமையினாலே, இறைவனார் அருளிய அச்சிவாகமங்களிலே, எதிர்காலத்து அவதரிக்கும் சமயாசாரியர்களைப் பற்றியேனும் தேவாரமோதுதலைப் பற்றியேனும் கூறியிருத்தல் பிழையென்று துணிந்து கூறமுற்படுதல் பெரும் அபசாரமேயாம். இவ்விஷயமாகச் சிவாகமப்புலவராகிய கண்டனூர் சிவஸ்ரீ அரு. இராமநாதக்குருக்கள் எழுதுவதாவது:-

சிவாகமத்திலே திருஞானசம்பந்தரைப் பற்றியும் ஏனைச் சமயாசாரியர்களைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. வருங்காலத்தைப் பற்றிக் கூறுதல் பதிவாக்காகிய வேதத்திற்கும் ஆகமத்திற்கும் இயல்புதானே! பிரதம மகா சிருட்டி ஆரம்பகாலத்திலேயே வேதசிவாகமங்கள் உத்பவித்தன என்பதினால், அதன்பின் உத்பவித்தபுவனங்களையும் தேவர்கள் இருடிகள் முதலானவர்களையும் கூறும் ஆகமம் சம்பந்தரைக் கூறுதல் பிழையாகுமா! இந்த நாஸ்திகர்கள் அக்காலம் ஆட்சிபெற்றிருந்தால் வாய்ப்பூட்டுச்சட்டம் பிறப்பித்திருக்கக் கூடும். நாயன்மார்களைப் பற்றிச் சிவரஹஸ்யம் கூறவில்லையா? பவிஷ்யத்புராணம் சொல்லவில்லையா? இவர்கள் எதைத்தள்ளுகிறார்கள். மேலைப்புலோலி மஹாவித்வான் கதிரைவேற்பிள்ளை அவர்கள் சுப்பிரமணிய பராக்கிரமத்தில், குகக் கடவுள் யாதவத்தலைவனும் சிவபக்தனும் ஆகிய சீதரன் என்பானுக்கு எத்தனையோதலைமுறை பின்னாடி நிகழ்ந்த கண்ணபிரானுடைய சரித்திரத்தை அச்சீதரன் கண்டானந்திக்குமாறு முன்னதாகவே நடித்துக்காட்டினார் என்று எழுதியிருக்கும் விபரம் உலகில் மறந்தேயிருந்ததோ? என்பதாம்.

தருமையாதீனத்துப் பண்டாரசாத்திரங்களுள் ஒன்றாகிய முத்திநிச்சயத்திற்கு ஸ்ரீமத் வெள்ளியம்பலவாணத்தம்பிரான் சுவாமிகள் தாமியற்றிய பேருரையிலே சமயாசாரியர்க்குள்ள உயர்வின் காரணங்களை விளக்குமிடத்தில் [illegible] எனவும், [illegible] எனவும் சூக்குமம் பூர்வகாரணம் என்ற சிவாகமங்களிலேயே அவ்வாசாரிய மூர்த்திகள் சிவபெருமானாலே பாராட்டப்பெற்றிருத்தலையும் ஒன்றாகக் குறிப்பிடுதல் சிந்திக்கத்தக்கதாம். ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகள் "சமயகுரவர் திருஞானசம்பந்தமூர்த்தி, திருநாவுக்கரசுமூர்த்தி, சுந்தரப்பெருமாண்மூர்த்தி மாணிக்கவாசகமூர்த்தி என்னும் நால்வருமாம். இவர்கள் ஜ்ஞாநஶக்தி: .... என்று காமிகாகமம் கூறியபடி எக்காலத்தும் எவ்விடத்துமுள்ள எவ்வெப்பொருள்களையும் ஒருங்கே அறிகின்ற பரிபூரண ஞானசத்தியையுடைய பரமேசுரனால் அருளிச்செய்யப்பட்ட சிவாகமங்களிலும் பிரதிபாதிக்கப்படுகின்றவர்கள்" என்றெழுதி, சூக்குமாகம பக்தோற்சவ விதிபடலவசனத்தையும், பூர்வகாரண மகோற்சவபடலவசனத்தையும் கௌரவமாக எடுத்தாண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு வைதிகசைவத்தை வளர்த்த பெரியோர்களால் அன்று தொட்டின்றுவரை ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களை மாற்றியுரைக்க முற்படுதல் அறிவுடையோர்க்கு அழகன்று என்பதை அறிவுறுத்துகின்றோம்.

இனி, நூலாராய்வோர் தங்கள் தங்கள் மனக்கருத்துக்கும் நவீன மார்க்கத்துக்கும் மாறுபாடாகத் தோன்றுபவைகளையெல்லாம் இடைச்செருகல் முதலிய ஏதாவதொரு காரணஞ்சொல்லி ஒதுக்கிவிடுதல் நேரான ஆராய்ச்சிமுறையாகாது. ஆகையினாலே ஆகமங்களில் சாதிப்பிரிவுகள் வேண்டுமென்றே புகுத்தப்பெற்றவை. ஞானசம்பந்தரைப்பற்றிப் புகுத்திவிட்டார்கள் என்று சாற்றிநிற்பவர்கள், அவ்வாகமப்பாடல்களின் போக்கு, இடவமைதி, தொடர்பு, பலபிரதிகளின் ஒற்றுமை, தொல்லோர் கருத்து ஆகிய காரணங்களைக்காட்டியே தமது கோளை நிறுவவேண்டும். அதுவன்றிப் பூசாரிகள் புகுத்திவிட்டார்கள் என்று மாத்திரம் சொல்லிவிட்டிருத்தல் நியாயத்துக்குப் பொருந்துவதன்று.

## வேதம் பொது—ஆகமம் சிறப்பு.

இனித் திருமூலநாயனார் "வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்—ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக" எனவும், சகலாகமபண்டிதர் "வேதநூல் சைவநூலென்றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்தநூல்கள்—ஆதிநூ லனாதியமலன் றருநூ லிரண்டு மாரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்பு நூலாம்" எனவும் அருளுமாற்றால் வேதம் பொது நூலென்றும் ஆகமம் சிறப்பு நூலென்றும்கொள்ளப்படும். இதனை வடமொழி நூல்களும் துலக்குகின்றன. வேதம் சூத்திரம் போலப் பொதுவுறநிற்றலால் சாமானிய சுருதி என்றும், சைவாகமங்கள் பாஷ்யம்போலச் சிறப்புறநிற்றலால் விசேஷ சுருதி என்றும் மோகசூரோத்தரம் என்றஆகமமும் கூறுதல் காண்க. அவ்வாறே,

“அழுக்கிலா வநாதி முத்த னகண்டித தூரியா தீதன்
இழுக்கில்வே தாக மங்க ளியம்பினன் பொதுச்சி றப்பென்
றொழுக்கமா ருலகத் தோர்க்கு மோங்குசத் தினிபா தத்தின்
வழுக்கிலா தவர்க்கு மென்றே மதித்தனர் நூல்வல் லோரே.”

எனச் சிவபுண்ணியத் தெளிவிலும்,

“மறைக ளாகமம் பொதுச்சிறப் பெனச்சிவன் வகுத்து”

எனத் திருவிளையாடற்புராணத்திலும் சொல்லியிருப்பது நோக்குக. வேதாகமங்களைட் பொதுச்சிறப்பென்றதின் பொருள் இதுவென உள்ளவாறறியாது பண்டிதர் இடர்ப்படுதலின், அதனை யீண்டுக்காட்டி உண்மையுணர்த்துவாம்.

## பிறதேவர்கட்குக் கூறும் தலைமை உபசாரம்.

வேதத்தின்கண் பற்பலதேவர்கட்குத் தலைமை கேட்கப்படுதலானும் பலபலசமயக்கொள்கைகளும் கூறப்படுகின்றமையானும் தலைவர் யாவர்? எக்கொள்கை உண்மையாகச் சிறந்தது என்னும் ஐயப்பாடு எய்துமாலோ எனின்; அஃதொழித்தற்கே வேதம் பொது நூலாயதென்க. உலகத்துள்ள மக்கள் பலதிறப்பட்ட அறிவினையும் கொள்கையினையு முடையராகலின், அவ்வெல்லாரையுங் காக்கவேண்டுமென்னுங் கருணைவள்ளலாகிய சிவபெருமான், அவ்வவர்தகுதிக்கேற்பப் பற்பல கருத்துக்கள் தோன்றவேதங்களை அருளிச் செய்தார். அவ்வேத ஆராய்ச்சியுடையார் பலரும், கீழ்க்கண்ட தத்துவங்களையே பரம்பொருளென முன்னர்க் கண்டு பின்னர் அவையனைத்தும் அழிதன்மாலைய வென்றொருவி, மேற்சென்று சென்று முடிவில் தனக்கொப்பாரு மிக்காருமில்லாத சிவபெருமானையே பரம்பொருளெனத் தெளிதற்குரிய சிவாகமநெறிநின்று அப்பெருமான் திருவடிநீழல் எய்தியின்புறுவாராதலின், பக்குவமிக்க ஆன்மாக்களின் பொருட்டு அருளப்பட்டனவாகிய சிவாகமங்கள் சிறப்பு நூல்களாம். இதனால் வேதங்களிற் பிறதேவர்களுக்குக் கூறப்படும் தலைமை உபசாரம் என்பதும் சிவபெருமானுக்குக் கூறப்படும் தலைமை உண்மை என்பதும் வெளியாம். இவ்வுண்மை வேதங்களில் உபசாரமாகக் கூறப்பட்ட சமயங்களுக்கெல்லாம் வழிநூலாசிரியர்கள் பிறதேவர்கள் இருடிகளாயிருப்ப, அவ்வேதங்களை அருளிச் செய்த முதலாசிரியராகிய சிவபெருமானே உண்மையாகக் கூறப்பட்ட சைவசமயத்தைப் போதிக்கும் சிவாகமங்களுக்கு ஆசிரியராக உள்ளமையின் சிறிதும் ஐயமின்றித்தெளியலாம்.

இவ்வாறு பண்டிதமணி—மகாமகோபாத்யாய ஸ்ரீமத் கதிரேசன் செட்டியார் அவர்கள் எழுதியவாறும் கண்டு கொள்க. இக்கருத்தைச் சிவாக்கிரயோகிகள் முதலிய பூர்வீகர்கள் செய்த சித்தியார் உரைப்பகுதிகளாலுமுணர்க. மேற்போந்தவற்றிலிருந்து வேதங்களிலே சிவபெருமானொழிந்த பிறதேவர்கட்குச் சொல்லப்படும் முதன்மை துதிவாதமென்பதும் சிவ

பெருமானுக்குக் கூறப்படும் முதன்மையே உண்மையென்பதும் சித்தித்தவாறு காண்க.

வேதம் பொது ஆகமம் சிறப்பு என்பதை வேதாகம சைவசித்தாந்திகளுள் மறுப்பார் ஒருவருமிலராக, "திருமூலர் காலத்திலும் அருணந்தி சிவனர் காலத்திலும் இப்பொழுதும் வேதங்கள் பொதுநூல் என்றும் சிவாகமங்கள் சிறப்புநூல்கள் என்றுமே கொள்ளப்படுகின்றன" என எழுதினர். அங்ஙனம் அவர் எழுதியதற்குக் காரணம் ஏது என ஆராயின், ஆரியரிடையே தோன்றிய வேதம் தாழ்ந்தது, தமிழர்கண்ட சிவாகமங்கள் சிறந்தன என்று தமது சொந்தக் கொள்கையைத் தாபித்தற்கே என்பது பொள்ளெனப் புலப்படுகின்றது. ஸ்ரீமூலர் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் முதலிய மஹான்கள் கொண்ட வேதம் ஆகமம் இரண்டும் ஆரிய மேயாக, அவ்வாரிய வேதம் ஆகமம்இரண்டிலும் உடன்பாடிலராகிய இவருக்கு, அவ்விரண்டற்குமுள்ள பொதுச்சிறப்பியல்புகளை விவகரிப்பதில் வரும் பிரயோசனம்தான் யாது?

இனி, இவர் வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டவை வேத வழக்குகள், சமத்துவத்தைப் பரப்பத்தோன்றியவை ஆகமங்கள் என்றதமது கருத்தைச் சித்தாந்த சாஸ்திரப் பிரமாணங்களால் விளக்கக் கடவர்.

"வேதங்களையெல்லாம் சிவபெருமான் அருளிச்செய்தார் என்று கூறுகின்றார்களே" எனப் பிறர் கூற்றாகக் கூறினர்.

திருமூலநாயனர் அருணந்தி சிவாசாரியர் இருவரையும் சான்றோராகக்கொண்டு அவர்கள் பொதுநூல் சிறப்புநூல் என்று இயம்பிய இருசெய்யுட் பகுதிகளையும் உடன்பட்டு, அச்செய்யுட்களிலேயே "வேதமொடாகம மெய்யா மிறைவனூல்" "நாதனுரையிவை" "அநாதி யமலன் றருநூல்" என்ற பகுதிகளை மாத்திரம் அங்கீகரியாது தள்ளிவிடுதற்கு நியாயமுமுண்டு கொல்? அறிஞர்களேசிந்தியுங்கள். நிற்க மேல்ஆராய்வாம்.

## புறநானூற்றில் வேதத்தைப்பற்றிய செய்தி.

பல நூறு ஆண்டுகட்கு முன்னெழுந்த சங்கநூல்களிலும், வேதத்தைப்பற்றிய செய்திகள் பலப்பல இடங்களில் வருகின்றன. அவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்தால், அந்தப் பழங்காலத்திலும் நந்தமிழ்நாட்டில் வேதஒலி மிக்குப் பரந்திருந்தமை புலப்படும். நல்லிசைப்புலவராகிய ஆவூர் மூலங்கிழார் என்பவர் சோணுட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனைப் பாடிய பாட்டில், வேதத்தை முதுநால் என்று குறிப்பிடுவதோடு அவை சிவபிரானிடமிருந்து தோன்றின என்றும், அறமொன்றையே கூறுவன என்றும், அவை நான்கு என்றும், ஆறங்கங்களைக் கொண்டன என்றும் குறிப்பிடுகின்றார்.

"நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டின்
ஆறுணர்ந்த வொருமுதுநூல்"
[முதுமுதல்வன்-சிவபெருமான்.]

என்பது அவர் வாக்கு. வேதத்தின் ஆறங்கங்களாவன:- வியாகரணம், சோதிடம், நிருத்தம், சந்தம், சிக்கை, கற்பமென்பன. அது, "கற்பங் கைசந் தங்கா லெங்கண் — டெற்ற நிருத்தஞ் செவிசிக் கைமூக் — குற்ற வியாகர ணமுகம் பெற்றுச் — சார்பிற் றேன்று வாரண வேதக் — காதி யந்த மில்லை" எனவரும் மணிமேகலையால் உணரப்படும். இவ்வாறு வியாகரணம் முதலிய ஆறையும் அங்கமாகக் கொண்டவேதம் வடமொழி வேதமேயாம். குறுந்தொகையில் வேதத்தை "எழுதாக்கற்பு" என்று குறிக்கப்பட்டுள்ளது. பிறவுமிவ்வாறே காண்க. இங்ஙனமெல்லாம் தமிழ் மக்கட்குரிய வேத முதனூல் வடமொழியின்கண் உள்ளதே என்றும், அவற்றை ஆக்கியருளினர் சிவபெருமானே என்றும், அவை தருமமொன்றையே கூறும் என்றும் நிலைநிறுத்தும் சான்றுகள் நமது பழந்தமிழ் நூல்களிலே நிறைந்திருப்ப, அவற்றை "ஆரியர் கட்டியது" "இழிசெயல்கள் நிரம்பியவை" "வியாசர் கட்டியது" "கடவுள் உங்களுக்கு நேரே வேத சிவாகமங்களைச் சொன்னாரா?" என்பன ஆதியாய் இழுக்குப்படப் பேசியும் எழுதியும் வருவது சைவவரம்பையும் தமிழ்நூல்மரபையும் அழிக்கும் பொல்லாங்கிற்கே கங்கணம் கட்டிக்கொண்டதாகும் என்பது சிறிதும் கூர்ந்துணராதே பெரிதும் விளங்கும்.

வேதம் என்பதில் ஆகமமும் அடங்கும் என்பது தொல்லோர் கருத்தென்றுணர்க; சூத்திரமும் பாஷ்யமுமாதலின், இனித் தாம் நாட்டக்கருதிய பொருளைச் சாதிக்கும் கருத்தாற்போலும் திரு. பண்டிதர் இரத்தினம் அவர்கள் தமக்குப் பிரமாணமாகக்கொண்ட செய்யுட்களில் முக்கியமான சில பகுதிகளைக்காட்டாது மறைத்து மயங்கவைத்தார். அவற்றுட் சிலவற்றை ஈண்டெடுத்துக் காட்டுவாம்.

## சில பகுதிகளை மறைத்தல்.

தடுத்தாட்கொண்ட புராணத்தே வரும் "நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின்மிக்க அர்ச்சனை பாட்டேயாகு மாதலான் மண்மே னம்மைச் சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்" என்ற பகுதியில், "தூமறை பாடும் வாயார்" என்பதை மறைத்துவிட்டார். இங்ஙனம் இவர் மறைத்ததற்குக் காரணம் சிவபெருமான் வேதாகமங்களை அருளவில்லை என்ற தமது கோளை நிறுத்துவான்வேண்டிப்போலும். மேலும் பார்ப்பன ஆராய்ச்சியைத் தொடங்கியவர்,

பத்தியு மின்றிப் பரனுண்மை யின்றி
ஊண்பித் தேறும் மூடர்பிரா மணர்தாமன்றே

என்ற மந்திரச்செய்யுட் பகுதியில் இறுதிக்கணுள்ள "தாமன்றே" என்பதை வேண்டுமென்றே மறைத்துவிட்டார்; தமது தந்திரோபாயத்தைப் பிறர் அறியமாட்டார் என்றெண்ணிப்போலும். இத்திருமந்திரப்பாடலில் அச்சாணிபோன்றிருக்கும் "அன்று" என்பதை ஒழித்துவிடின், விபரீதப் பொருள் பயந்து ஆசிரியர் திருவுள்ளத்துக்கு முற்றும் மாறுபடும் என்பதை உணர்ந்துவைத்தும், அதனை நீக்கிவிட்டமை பற்றிப் பச்சாத்தாபம் அடையாதிருக்கமுடியவில்லை.

அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்ளி தீமை யாகி
நரரினிற் பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே.

என்பது சித்தியார். அன்பில்லா வழிபாட்டாற் பயனில்லை என்பதை நிறுத்துவதற்கு மேற்கண்ட இச்செய்யுளின் முதல் இரண்டுஅடிகளையும் காட்டினர். ஆனாற் பின் இரண்டுஅடிகளையும் மறைத்துவிட்டனர், இவர் காட்டாது விடுத்தபின் இரண்டடிகளுள் 'வரமுடைத் தக்கன் செய்த மா வேள்வி தீமை யாகி' என்றபகுதி, இவரால் ஆரியருடையதென்று ஒதுக்கப்பட்ட புராணங்களில் காணப்படும் தக்க யாக சங்கார சரித்திரத்தையே குறிப்பிடுவதாகும். புராணசரிதங்கள் சித்தாந்த சாஸ்திரங்களில் பலப்பலஇடங்களிலே கூறப்படுமுண்மைக்கு இச் சிவஞானசித்திச்செய்யுள் ஓர் எடுத்துக்காட்டாகும். புராண விரோதியாகிய இவர், வேண்டுமென்றே இப்புராணசரிதம் வரும் பகுதியை மறைத்துவிட்டார் என்பது யூகிக்கப்படும். தாம் கருதிய பொருள் நிறைவேறுதற்கு இவ்வாறு மறைத்தல் அறிஞர்க்கு அழகன்று.

தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
யத்தன் சிவன்சொன்ன வாகம நூனெறி
யெத்தண்ட முஞ்செயு மம்மையி லிம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே.

என்னும் திருமந்திரத்தைப் பிரமாணமாகக்கொண்ட பண்டிதர், அத்திருமந்திரத்திற் பாராட்டப்பெற்ற "அத்தன் சிவன் சொன்ன ஆகம நூலி"ல் விதிக்கப்பட்டுள்ள தீண்டாமையையும் இன்னாரின்னார் ஆலயங்களில் இன்ன இன்ன இடங்களில் நின்று சேவித்தல் வேண்டுமென்ற விதிகளையும் உடன்படாநது தாம் எடுத்துக்கொண்ட மேற்கோளுக்கு மாறுபடப் பேசுதலாகிய தோல்வித்தானமாகாதா? தம் சமய விதிநூலில் விசுவாசமில்லாதவர், அச்சமயத்தில் விசுவாசமுடையவர்போல் எழுதுவது வஞ்சகமேயாம்.

## புராணப்பெருமை.

இனி, வேதங்கள் ஆரியரிடையே தோன்றின என்று கூறித் தமிழக்ச் சைவமக்களுக்கு அவையுரியனவல்ல என்று விலக்கியதற்கேற்பவே "சிறு தெய்வங்களுக்கெல்லாம் புராணங்கட்டுவது வேதவழக்கு; நினைத்தவாறே தெய்வங்களைப் படைத்துப் புராணம் வகுப்பது வேதத்தைத் தழுவினோர் செயல்" என்றெழுதுகின்றார் தாவாரம் இல்லை என்ற நூலுடையார். இதனால், இவர் புராணங்களைப்பற்றி உள்ளவாறுணர்ந்திலர் என்பது கொள்ளக் கிடக்கின்றது.

தேவாரமுதல்வர்கள் நால்வேதம், ஆகமம் என்பவற்றைத் தம்பாடல்களில் எடுத்துக் காட்டியிருப்பதுபோலவே ஆறு அங்கம் பதினெண்புராணம் எண்ணெண்கலை என்றித் தொகுதி நூல்களையும் தம்பாடல்களில் ஆங்காங்குப் பெருமையோடும் சொல்லியிருக்கின்றனர்.

"பங்கமில் பதினெட்டொடு நான்குக் குணர்வுமாய்
அங்க மாறுஞ் சொன்னானும்" என்றும்,

"அங்கமு நான்மறையு மருள்செய் தழகார்ந்த வஞ்சொன்
மங்கையோர் கூறுடையான்" என்றும்,

'வேதநான்கும் பதினெட் டொடாறும் விரித்தார்க்கிடம்' என்றும்

வரும் ஆளுடைய பிள்ளையார் வாக்குக்கள் காண்க. மேலும் ஆளுடைய பிள்ளையாரே சிவபெருமானுடைய முழுமுதற்றன்மையை விளக்குவன புராணங்களேயென்பதை,

வேத முதல்வன் முதலாக விளங்கி வைய
மேதப் படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாகப் பொலிந்த
சூத னொலி மாலை யென்றேகலிக் கோவை சொல்லே.

என்றருளிச் செய்தனர். சைவசமய ஞானபானுவாகிய ஸ்ரீ சேக்கிழார் மூர்த்திகளும் இத்திருப்பாசுரப் பொருள் அருளிச் செய்யுமிடத்து,

"வேத முதல்வ னெனுமெய்த் திருப்பாட்டினினே
ராதி யுலகோரிடர் நீங்கிட வேத்தவாடும்
பாத முதலாம் பதினெண் புராணங்க ளென்றே
யோதென் றுரை செய்தனர் யாவுமோ தாதுணர்ந்தார்"

என அதனை நிலைநிறுத்தியருளினார். வேதப்பொருளை அறிவதற்குப் பதினெண் புராணங்களும் இன்றியமையாதவையெனச் சம்பந்தப்பிள்ளையார் கட்டளையிட்டிருப்பாரானால் அக்கட்டளையைப் புறக்கணித்துப் பூருவ

பக்ஷியார்கள் புகலுவது கலிபுருடனது தூண்டுதலே எனக் கொள்வாம். "வேதப் பொருளை நிச்சயித்தற்குப் புராணம் அங்கமாம்" என்று அரதத் தாசாரியர் அருளுவர். அதுபோலவே தமிழ் மறைகளின் பொருளை அறிதற் கும் புராணங்கள் உதவுவன என்பது உய்த்துணரத்தக்கது. இன்னும் அர தத்தாசாரியர் வைணவர் முன்னிலையில், நெருப்பிலே பழுக்கக்காய்ச்சிய இருப்பு முக்காலியில் இருந்துகொண்டு, சிவபரத்வம் நிலைநிறுத்தும்பொ ழுது கூறிய இருபத்திரண்டு ஏதுக்களுள்ளே காயத்திரி யொன்றொழிந்த மற்றெல்லாம் புராணசரித்திரமேயாய் இருத்தலினாலும் புராணத்தின் மஹி மை உணரப்படும்.

புராணங்கள் சிவஞான சாதனமாய் உண்மைப் பொருளை உரைக்குந் தன்மையின என்பது,

"அஞ்செழுத்தே ஆகமமு மண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே யாதிபுராண மனைத்தும்"

என உண்மைவிளக்கத்தும்,

"சன்மார்க்கஞ் சகலகலை புராணவேத சாத்திரங்கள்
சமயங்க டாம்பலவு முணர்ந்து"

"ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணநல்ல வாகமஞ்
சொல்ல வல்ல வாமென்னு
மூனத்தா ரென்கடவர்"

எனச் சிவப்பிரகாசத்தும் கூறியவாற்றாலும் உணரப்படும்.

பிராமணகுலபதியும் சைவப்பெரியார்களுள் ஒருவருமாகிய அப்பைய தீக்ஷித யோகிகள்; "சிவபெருமானுடைய பெருமையை வேதங்கள் பல சாகைகளாற் கூறி நியாயமுறையாலுந் தெரிவிக்கும்; புராணங்கள் அப்பொ ருளையே சிறுவரும் அறியுமாறு உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்கும்" என்று சிவதத்துவ விவேகத்திற் கூறியிருக்கின்றார்கள். ஸ்ரீமாதவச் சிவ ஞானசுவாமிகளும் சிவஞானபாடியத்து முதற்சூத்திரத்து இரண்டாமதி கரண உரையில், "இனி உண்மையான் நோக்குவார்க்குச் சிவபுராணங் களெல்லாம் வேதப்பொருளையே விரித்தெடுத்தோதுதலிற் சிறந்த பிர மாணமெனவும், ஏனைய புராணங்கள் அங்ஙனம் அல்லாமையின் இவற் றோடு முரணியவழி முரணுதவாறு உய்த்துணர்ந்துபொருள் கொள்ளப்படு மெனவும்... தேர்ந்துணர்க" என்றருளிச்செய்தனர். இவற்றால் புராணங்கள் நமக்குரியன அல்ல என்று ஒதுக்கித் தள்ளிய சான்றோர் ஒருவரும் இல்லை யென்பது வெளிப்படை.

இனி, அருமறை, வேதம், ஆகமம், வேள்வி, முத்தீ முதலிய சொல் வழக்கும் பொருள்களும் மாத்திரமன்றி ஆங்காங்கு நந்தமிழ்மறைகளிலும், சித்தாந்த நூல்களிலும், பிறதெய்வச்சான்றோர் செய்யுட்களிலும் காட்டப்

படும் கதைவரலாறுகளும் வடமொழி வேதத்தும் ஆகமத்தும் புராணங்களிலும் வரும் கதைகளாகவே காணப்படுகின்றன. தாலீபுலாக நியாயமாகச் சிலவற்றையே எடுத்துக்காட்டுதும்.

இருக்குவேதம் சிவபெருமானை "வீரன்" என்று இயம்புகின்றது. அங்ஙனம் கூறியது காமன் இயமன் திரிபுரத்தரக்கர் தக்கன் முதலியோரைப் பங்கப்படுத்தினமைபற்றி யென்க என்று சதுர்வேததாற்பரிய சங்கிரகத்திலே சொல்லப்பட்டது. இச்சரித்திரங்களெல்லாம் தேவாராதிகளிற் கொள்ளப்படுவனவேயாம். புராணசரிதமென்று வெறுத்துநீக்கியவர் இவர்.

இறைவன் திரிபுரமெரித்தமை சிவாகமத்திற் செப்பப்பட்டுள்ளது. தேவாரத்திற் பல இடங்களிலும் வருகின்றது. ஏனைத் திருமுறைகளிலும் போற்றிப் பேசப்பட்டுள்ளது. "திரியுமுப்புரந்தீப்பிழம்பாக" எனத் திருக்கச்சியேகம்பத்தேவாரத்தும்,

கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேருதே
யிடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த வந்நாளி
லிடபமதாய்த் தாங்கினுன் திருமால்காண் சாழலோ.

எனத் திருவாசகத்தும் புரமெரித்தமை புகலப்பெற்றமை காண்க.

"திரிபுர மெரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம் பேவல் கேட்ப
உமையா ளொருதிற னாக வோங்கிய
விமையவ னாடிய கொடுகொட்டி யாடலும்"

எனச் சிலப்பதிகாரத்தும்,

"ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்து"

எனக் கலித்தொகையிலும்,

ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ
பொருகணை கொண்டு மூவெயி லுடற்றிப்
பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல்

எனப் புறநானூற்றிலும், பரிபாடல் முதலியவற்றிலும் வரும் பகுதிகளைப் புராணசரிதமென்று தள்ளிவிடுவது மரபாகுமா?

இந்திரன் அகலிகையை விரும்பி ஆயிரங்கண் பெற்றமையும், அவள் கற்சாபம் பெற்றமையும் "அகலிகை கல்லதானாள்" எனச் சித்தியாரிலும், "மாதவன் மடந்தைக்கு வருந்துய ரெய்தி – ஆயிரஞ் செங்க ணமரர்கோன் பெற்றதும்" எனமணிமேகலையிலும், "ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்புளார் கோமா - னிந்திரனே சாலுங் கரி" எனத் திருவள்ளுவரிலும் குறிக்கப்பட்டுள்ளதை ஒதுக்கி விடலாகுமா? பிறவுமிவ்வாறே.

இன்னும் சிவபெருமான் ஒருவரே பசுபதி; அவரே பரமாத்மா; அவரே மகேசுவரன்; தேவதேவன்; மகாதேவன்; நிர்க்குணன்; ஒளிப்பொருள்; காயத்திரிப்பொருள்; பிரணவப்பொருள்; அவரே தியானிக்கப்படும்பொருள் என்பன ஆதியாகச் சிவபரத்துவங்களை யெல்லாம் புராணங்களும் உபபுராணங்களும் தலபுராணங்களும் நிச்சயித்து வெளிப்படுத்துகின்றன. இவ்வுண்மைகளை யோராது புராணங்களைப் புறக்கணித்துப் பேசமுன்வந்தது, பேசுபவர்களின் அறியாமையையே புலப்படுத்துமன்றி, புராணங்களின் குற்றமல்ல என்பது உணரத்தக்கதாம்.

இதுகாறுங் கூறியவாற்றினாலே வேதாகம புராணங்களினாலே எடுத்தோதப்பெற்ற பரம்பொருள் மும்மூர்த்திகட்கும் முதல்வராகிய சிவபெருமானே யென்பதும், வேதாகமங்களே சைவமுதனூல்கள் என்பதும் புராணங்களும் நமக்குரியனவே யென்பதும் பிறவும் நிறுத்தப்பெற்றவாறு கண்டு கொள்க.

### திருமூலதேவ நாயனார்.

"அண்ண லருளா லருளுந்திவ் யாகமம்
விண்ணி லமரர் தமக்கும் விளங்கரி
தெண்ணி லெழுபது கோடி நூ றாயிர
மெண்ணிலு நீர்மே லெழுத்தது வாமே."

### உமாபதிசிவாசாரியர்.

மழைவ ழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வள னெல்லாம் பிறங்குக
தழைக வஞ்செழுத் தோசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

## வேதாகம நிரூபணம் இரண்டாம் பாகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---